

கல்கி



KALKI

22-4-1962

30 காசு


அரம்பையர் குலத்தின் பரம்பரைச் செல்வம்
PEARS
TRANSPARENT
SOAP
பியர்ஸ்
தூய்மையிலும் மென்மையிலும் தன்னிகரற்றது
அன்றுடம் காலை... அழகைத் தூண்டும் வேலை... பியர்ஸ் லீலை ... தூய்மையும் மென்மையும் வாய்ந்த அழகுசாதனம்... அரம்பையர் குலதனம்!
குழந்தையின் பச்சிள மேனிக்கும் உகந்த மென்மை வாய்ந்த, படிகத் தெளிவுள்ள கிளிஸரின் சோப்பாகிய பியர்ஸ் சோப் உபயோகித்து நீராடும் இன்பம்; நீராடிய பின், மணங்கமழும் மெல்லிளம் பியர்ஸ் டால்கம் தூவிக்கொண்டால் ... ஆஹா ஹா, அதிகாலைப் புதுமலர்ச்சி நாள்முழுதும் நிலைபெறும்.
PTP. 5-X52 TM

கல்கி

பிலவ, சித்திரை 9

ஏப்ரல் 22, 1962

பொருளடக்கம்



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் : 38

புது மந்திரி சபை

நேருஜி தமது புது மந்திரி சபையை அமைத்து விட்டார். சில மாறுதல்களைத் தவிர, புது மந்திரி சபைக்கும் பழைய அமைச்சர் குழுவுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. முக்கிய இலாகாக்களான நிதி, பாதுகாப்பு, வர்த்தகம், உணவு, விவசாயம் போன்றவை எல்லாம் பழைய மந்திரிகளிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவை யெல்லாம் ஏற்கெனவே எதிர்பார்த்தவைதான். எனவே, புதிதாக மந்திரி பதவி கிடைத்துள்ள சிலருக்கும் அவர்களுடைய் குழுவினர்களுக்கும் தவிர, மக்களிடையே புது மந்திரி சபை அமைப்பைப் பற்றிப் பரவலான உற்சாகம் காணவில்லை.

அவர்கள் கவலை எல்லாம் நேருஜியின் மூன்றுவது ஆட்சிக் காலத்தில் நிர்வாகம், கொள்கைகள் எல்லாம் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியே இருக்கிறது.

சென்ற இரண்டு ஆட்சிக் காலங்களில் இருந்த யதேச்சாதிகாரப் போக்கும் அர சாங்கக் கெடுபிடியும் இன்னும் அதிகரிக்குமா, அல்லது மக்கள் வரிப்பளுவினுலும், விலை உயர்வாலும், நிர்வாக நிர்ப்பந்தங்களினுலும் கஷ்டப்படுகிருர்கள் என்பதைப் புது மந்திரி சபையினர் உணர்ந்து இவைகளைத் தளர்த்துவார்களா ?

காங்கிரஸ் கட்சியின் தனித்தன்மை வாய்ந்த சோஷலிஸக் கொள்கை மந்திரங் களைச் சர்க்கார் நாள் தவறுது ஜபித்துக் கொண்டு, அவைகளுக்காக வகுக்கப்பட்ட டம்பாச்சாரித் திட்டங்களை நிறைவேற்ற வரிகள் விதித்தும், விலைவாசிகளைத் தூக்கும் பற்றுக்குறை பட்ஜெட்டுகள் வகுத்தும், அயல்நாடுகளிலிருந்து கடன் வாங்கியும், மக்களை வாட்டி, நாட்டைக் கடனாளியாக்கிக் கஷ்டங்களை மேலும் அதிகரிக்குமா ; அல்லது நடை பெறக்கூடிய செயல்களை மட்டும் மேற்கொண்டு, மக்களின் சக்திக்கு ஏற்ற திட்டங்களை அமுல் நடத்தி, மக்களின் கஷ்டத்தைக் குறைக்குமா ?

நாட்டில் நிலவும் நிலைமையையும், சிந்தனை செய்யும் மக்கள் மனத்தில் தோன்றிக் கொண்டிருக்கும் எண்ணங்களையும் சரிவரப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு உண்மை மதிப்புக் கொடுத்து, நிர்வாகத்திலும், கொள்கைகளிலும் தக்க முறையில் இளக்க மான மனப்பான்மையைக் காட்டினுல் நாட்டுக்கு நலமுண்டு.

தேர்தலில் கிடைத்த வெற்றியைக் காங்கிரஸ் கட்சியின் சர்க்கார் சர்வாதிபத்தியச் சோஷலிஸக் கொள்கைக்கு மக்கள் அளித்த ஆதரவாக எண்ணி, புது ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியை நிரந்தரமாக நிலைக்கச் செய்து விட்டால், நாட்டில் ஜனநாயகம் படிப்படியாக மறைந்து மற்ற ஆசிய நாடுகளில் நிலவுவது போன்ற யதேச்சாதிகாரம் ஏற்பட அடிகோலுவதாகும்.

வித்தையை அதிகமாகக் கற்றவர்களுக்கு வினயம் வேண்டும். செல்வத்தை அமோகமாகப் பெற்றவர்களுக்குத் தரும சிந்தனை வேண்டும். செல்வாக்கு உள்ள வர்களுக்குக் காருண்யம் வேண்டும். அதே போல், ஆட்சி பீடத்தில் அமர்ந்து, பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து அரசு புரிந்து, மேலும் ஐந்தாண்டுகளுக்கு அரசாங்கம் நடத்தும் வாய்ப்புப் பெற்றுள்ள அமைச்சர்களுக்கு அதிகாரத்தை உபயோகிப்பதில், தவறுதல் ஏற் பட்டுவிடுமோ என்ற அச்சம் வேண்டும். தங்களுடைய நடவடிக்கைகளினுல் எளிய மக்களுக் குக் கஷ்டங்கள் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் வேண்டும். நாட்டின் நன்மைக்காகப் பாடுபடுவதாக எண்ணிக் கொண்டு தவருன முறைகளில் செல்லாதவாறு தங்களையே தடுத்துக் கொள்ளுவதில் ஜாக்கிரதை வேண்டும்.

புது மந்திரி சபை நாட்டின் நிலைமையை உள்ளபடி புரிந்து கொண்டு, மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்து, அவர்களை அடிமை வாழ்க்கைக்கு இட்டுச் செல்லாமல் காப்பாற்றும் வகையில் ஆட்சி செலுத்தும் என்று நம்புவோம்.

இந்திய நேபாள உறவு

இந்திய-நேபாள உறவில் கண்டுள்ள மேடு பள்ளங்களைச் சமன் செய்யும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்த நேபாள மன்னர் மகேந்திரா இவ்வாரம் புது தில்லிக்கு வருகிறார்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்போது முதல் அரண்போல விளங்குபவை எல்லைப்புறத்தில் உள்ள நாடுகள். இதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் தாங்கள் அரசு புரிந்த காலத்தில் வட மேற்கு கோடியிலிருந்து வட கிழக்கு கோடி வரையிலும் உள்ள எல்லா நாடுகளையும், பல உபாயங்களாலும், உடன்படிக்கைகளாலும், நடவடிக்கைகளாலும், இந்தியாவின் நட்பு நாடுகளாகவே இருக்கும்படி பார்த்துக் கொண்டனர்.

நாடு சுதந்திரம் பெற்ற பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் உள்ள நிலைமையைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நட்பு நாடுகளாக இருந்த எல்லோரும் வெளிப்படையாக விரோத பாவம் தெரிவிக்காவிட்டாலும் நட்புக் குறைவைக் காட்டுகின்றனர். நட்பு நாடாக இருந்த திபேத்து சுதந்திரம் இழக்கும் நிலைக்கு வந்து விட்டதுடன் நம்மைச் சார்ந்தே இருந்து வந்த நேபாளத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்கி விட்டோம். நம்மைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் நமது நட்பில் நம்பிக்கை இழக்கும்படியான நிலைக்கு வந்து விட்டன. அண்டை நாடுகள் பலம் இழந்து, நல்லுறவு குறைந்தால், நமது நாட்டுக்குத்தானே ஆபத்து என்ற சாமானிய உண்மையை நமது அரசாங்கம் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்திய—நேபாள உறவும் நலிந்து வருகிறது. நேபாள அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் நோக்கத்துடன் நாட்டுக்கு எதிராகச் சதி நடவடிக்கைகள் நடத்தும் கலகக்காரர்களுக்கு இந்தியாவில் ஆதரவு கொடுக்கப்படுகிறது என்று நேபாள அரசாங்கம் நம்புகிறது. கம்யூனிஸ ஆதரவாளர்கள் இந்திய மண்ணிலிருந்து நடத்தும் நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் கண்காணித்து ஒடுக்க முடியவில்லை என்று அது கருதுகிறது. அல்லது 'ஜனநாயகம்' என்ற பெயரில் இந்திய அரசாங்கமே அத்தகைய புரட்சிக்காரர்களுக்கு ஆதரவு அளிக்கிறது என்றும் நேபாளம் நம்புகிறது. இவை உண்மை என்று நாம் நம்பிவிட வேண்டாம். ஆனால் இம்மாதிரி நமது அண்டை அரசர் நினைக்கும்படியான நிலைமையில் இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளும், நடவடிக்கைகளும் அமைந்துள்ளன என்பதை உதறித் தள்ளிவிட முடியாது. தற்போது நேபாள மன்னருக்கும் இந்திய சர்க்காருக்குமிடையே நடக்கவிருக்கும் ஐந்து நாள் பேச்சு வார்த்தைகளின் வழியாகப் பொதுப் பிரச்னைகள் சுமுகமாகத் தீர்ந்து நல்லுறவு நீடிக்கும் என்று எதிர்பார்ப்போம்.

இரண்டு எச்சரிக்கைகள்

நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றிச் சமீபத்தில் இரு வேறு துறைகளிலிருந்து எச்சரிக்கைகள் கிடைத்திருக்கின்றன. ஒன்று தொழிலதிபரும் காங்கிரஸ் கட்சிக்கு ஏராளமாகப் பணம் தந்து அந்தக் கட்சியின் அபிமானத்தைப் பெற்றவருமான திரு ஜி. டி. பிர்லாவிடமிருந்து. இந்திய பாங்குகளில் முக்கியமான யுனைடெட் கமர்ஷியல் பாங்கியின் வருஷாந்தரக் கூட்டத்தில், அதனுடைய தலைவர் என்ற முறையில் அவர் பேசும் போது:

''மூன்றாவது திட்டம் மிதமானது என்றாலும் அது வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமா என்பதில் எனக்கு அவநம்பிக்கையே தோன்றுகிறது. எந்தவிதமாகப் பார்த்தாலும் திட்டம் தனித்தனியான வெவ்வேறு இனங்களின் கூட்டு ஜாபிதா போலக் காண்கிறதே தவிர, மக்கள் முன்னேற்றத்துக்காக வகுக்கப்பட்ட இணக்கமான திட்டமாகத் தோன்றவில்லை.

''அயல் நாட்டு உதவியை அளவுக்கு மீறி நம்பிக் கொண்டிருப்பது ஏமாற்றத்தையே அளிக்கும். முதல் இரண்டு திட்டங்களில் கண்ட அனுபவத்தை மறந்து விடக்கூடாது. எதிர்பார்க்கும் உதவியைக் காட்டிலும் கையில் கிடைக்கும் உதவி குறைந்தே இருக்கும் என்பதை முன் திட்ட காலத்தில் கண்டோம்''

என்று குறிப்பிட்டிருக்கிறார். பாங்கர்களின் கருத்து எல்லா நாடுகளிலும் உயர்வாகப் போற்றப்படுகிறது. உள்ளதை உள்ளபடியே சொல்லுவார்கள். உருப்படியான ஆலோசனைகளையே கூறுவார்கள். இதர நாடுகளில் நாட்டு நிர்

வாகத்தை நடத்தும் அமைச்சர்கள் அவர்கள் சொல்லும் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். இந்தியத் தொழிலதிபர்களில் முதல் வரிசையில் நிற்கும் திரு பிர்லா கூறும் எச்சரிக்கை கவனிக்கப்பட வேண்டியது. அரசியல்வாதிகளிடமிருந்து, அல்லது அரசியல் கட்சியிடமிருந்து இப்படிப்பட்ட ஓர் எச்சரிக்கை வந்தால் கட்சி மனப்பான்மை என்று கூறி, துவேஷத்தில் அதைத் தள்ளிவிடத் தோன்றும். தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் விஷயம் அவ்வாறு அல்ல.

மற்றொரு எச்சரிக்கை சர்க்கார் துறையில் சுமார் 200 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தப்படும் ரூர்க்கேலா உருக்குச்சாலையிலிருந்து வந்திருக்கிறது. இத் தொழிற்சாலையின் அவல நிலை பற்றியும், உற்பத்தி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை என்பது பற்றியும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவ்வாரச் செய்திகளைப் பார்த்தால், உற்பத்தி மட்டிலும்தான் சீர்கேடுற்றுள்ளது என்று எண்ண முடியவில்லை. அங்குள்ள நிலைமை பலவிதங்களிலும் மோசமாக இருப்பதாகத் தெரிகிறது. வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்குத் தொழிலாளிகளிடையே அதிருப்தி நிலவுகிறது. வேலை நிறுத்தத்தையொட்டிக் கதவடைப்பு, உற்பத்தித் தடை, நாளொன்றுக்கு லட்சக்கணக்கில்நஷ்டம் என்று செய்திகள் வருகின்றன. தொழிற்சாலை அமைப்பிலேயே குறைகள்காணப்படுகின்றனவாம். கண்டிராக்டர் வேலையில் குறைபாடுகள் தெரிகின்றனவாம். மேற்பார்வையில் கண்காணிப்பு போதவில்லையாம். நிர்வாகத்தில் பொறுப்பின்மை காணப்படுகிறதாம். கம்யூனிஸ்டுகளின் கை வேலைகள் காணப்படுகின்றன என்றும் ஒரு பக்கத்திலிருந்து புகார் சொல்லப்படுகிறது.

ஓர் உருக்குச்சாலை சாதாரண இதர தொழிற்சாலைகளைப் போன்றதல்ல என்பது உண்மையே. அதை ஆரம்பிப்பதிலேயே தொல்லைகளும் அதிகம். இயக்குவதிலும் தொல்லைகள் உண்டு. எனினும் சர்க்கார்த் துறையில் நடைபெறும் ஒரு முக்கியமான தொழில் இந்த லட்சணத்தில் இயங்குகிறதென்றால், இதைப்பற்றி விரிவாக விசாரணை நடத்த வேண்டியது அவசியம். குறைகளை அகற்றவும், தொழிற்சாலையைச் சீராக நடத்தவும் அத்தகைய விசாரணை முக்கியமானது. சர்க்கார் தொழில் விரிவடைந்தால் எப்படி நடக்கும் என்பதற்கு இது ஓர் எச்சரிக்கை.

மகா மேதை மறைவு

வேதத்தில் கூறப்பட்ட ஆயுள் முடிந்து மேலுலகம் சென்று விட்டார் திரு விசுவேசுவரய்யா அவர்கள். தொழிலுற்பத்திப் பெருக்கமும் நாட்டின் முன்னேற்றமும் வாழ்நாள் முழுதும் நனவிலும் கனவிலும் கொண்ட மகா மேதை நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். மக்களின் அன்பும் நிருவாகிகளின் நன்மதிப்பும் பெற்று மைசூர் திவானாகப் புகழ் பெற்றார். இந்தியாவில் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிக் கவலையும் கவனமும் செலுத்தியவர்களில் முந்திய பெரியவர். மைசூர் நிருவாகத்தில் சுறுசுறுப்பு ஏற்றிய தீவிர அமைச்சராக விளங்கியவர். பூரண பிரமசாரியாகச் சுத்தமான வாழ்க்கை; ஒரு களங்கமும், தகாத வழக்கமும் இன்றி வாழ்நாட்களை முடித்த ஆன்மா சாந்தி அடைந்து விட்டது. நம்முடைய அஞ்சலி.



— ராஜாஜி

என்ன சேதி?

நல்ல யோசனை

வங்காளத்தில் தமிழ் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி வரும் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் கல்கத்தா சர்வகலாசாலையில் தமிழுக்காக ஒரு தனித் துறை ஏற்படுத்தவேண்டும் என்று ஒரு நல்ல யோசனை கூறப்பட்டது. இதை முழு மனத்துடன் ஒவ்வொரு தமிழரும் ஆமோதிப்பார் என்பதில் ஐயமில்லை. வங்க மொழியைக் கற்றுத் தேர்ந்த பலர் நம்மிடையே இருப்பது போல் தமிழ் மொழியைக் கற்ற வங்காளியர்களும் கல்கத்தா நகரில் இருக்கின்றனர். தமிழ் மொழியின் பண்டைக்கால சிறப்புக்களையும் இலக்கியச் செல்வங்களையும் அதிகமாக உணர வேண்டும் என்ற ஆர்வம் வங்க மக்களிடையே சமீப காலத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. கல்கத்தா நகரில் தமிழ் பயிலும் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். வங்கத் தமிழர்கள் வங்க மக்களுடன் பழகி அவர்கள் மொழியைக் கற்று, வங்க இலக்கியங்களின் நயங்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். ஒரே ராஜ்யத்தில் வாழும் வெவ்வேறு மொழியினரிடையே பரஸ்பர ஒற்றுமையை வளர்க்க இலக்கியத் துறை உதவுவது போல் மற்றத் துறைகள் பயனளிப்பதில்லை. கல்கத்தா சர்வகலாசாலையில் தமிழ்ப் பிரிவு ஏற்படுத்தினால் ஒருமைப்பாட்டு உணர்ச்சி வேகமாக வளர ஏதுவாகும்.


மெட்ரிக் முறை எடைகள்

தசாம்ச முறைக்கு நாணய விகிதங்களை மாற்றிய போது ஏற்பட்ட குழப்பங்களும், மக்கள் அடைந்த நஷ்டங்களும் எவ்வளவோ. பழைய விகிதங்களுக்குச் சரிசமானமாகப் புது விகிதம் அமையாததாலும், நடைமுறையில் சில்லறைத் தகராறுகளைத் தவிர்க்க முடியாததாலும், கடைக்காரர்களும், கடைக்காரர்கள் கோஷ்டியில் சேர்ந்துவிட்ட சர்க்காரும் லாபம் அடைந்தனர். இதை நிரந்தரமாகக் கூடச் செய்து கொண்டனர். மக்கள் இதனால் ஏமாந்தனர். அம்மாதிரி நிலை இப்போது கிலோகிராம், லிட்டர் விஷயத்திலும் ஏற்பட்டு வருகிறது.


எந்த மாறுதல்கள் எந்தச் சமயத்தில் செய்ய வேண்டும், எது முக்கியம், எது அவசரம், எது பின்னால் செய்யக்கூடியது என்றெல்லாம் யோசித்துச் செய்யும் முறையைக் காங்கிரஸ் அரசாங்கம் முற்றிலும் மறந்து விட்டது.

புது கவர்னர்கள்

லோக சபை சபாநாயகராகச் சிறப்புப் பணியாற்றிய திரு எம். அனந்தசயனம் அய்யங்கார் பீகார் ராஜ்யத்துக்குக் கவர்னராகவும், மத்திய சர்க்காரில் போக்குவரத்து இலாக்கா அமைச்சராகச் சேவை புரிந்த டாக்டர் பி. சுப்பராயன் மகாராஷ்டிர ராஜ்ய கவர்னராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இருவரும் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்கள். பல கட்சிக



மயிலாப்பூர் சீநிவாச சாஸ்திரி மண்டபத்தில் ஏப்ரல் 3-ந் தேதி கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற விழாவில் சங்கத்தின் வெளியீடான தமிழ் இலக்கியம் - தாகூர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரை அமைச்சர் திரு பக்தவத்சலம் வெளியிட்டார். சங்கத்தின் செயலாளர் திரு ப. ந. தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவிக்குத் திரு வெ. சாமிநாத சர்மா தலைமை வகித்தார்.



ளின் மோதல்களுக்கிடையே நடுநிலைமை வகித்துப் பட்சபாதமின்றிச் சட்டசபை விவகாரங்களை நடத்தி வெற்றி கண்டவர் திரு அனந்தசயனம் அய்யங்கார். கவர்னர் பதவிக்கு மிகவும் அவசியமான நடு நிலைமை வகிக்கும் தன்மை, கட்சிப் பிளவுகளும் பூசல்களும் மலிந்துள்ள பீகார் ராஜ்யத்தில் அவருக்குப் பெரிதும் பயன்படும். நிர்வாகத் துறையில் அனுபவமுள்ள டாக்டர் சுப்பராயன், புது ராஜ்யமாகிய மகாராஷ்டிரத்தின் முன்னேற்றத்துக்குத் துணை நிற்பார். இவர்களுக்குப் புதிய வருஷத் தொடக்கத்தில் அளிக்கப்பட்ட இந்தக் கௌரவத்தை மத்திய சர்க்கார் அளித்த புத்தாண்டுப் பரிசாகக் கருதலாம்.

காங்கிரஸ் தலைவர்கள்மேல் சித்தூர், திருச்செங்கோடு தொகுதி வாக்காளர்கள் ஒரு குற்றம் சாட்ட இடமிருக்கிறது. இந்தக் காங்கிரஸ் அபிமானிகளை கவர்னர்களாக ஆக்கிவிட யோசனை இருந்ததை மறைத்து, வீணுகப் பணச் செலவும் முயற்சிகளும் தேர்தலில் செலுத்தச் செய்தது தவறுகும். கவர்னர் பதவியைத் தருவதற்குத் தேர்தல் வைத்து மக்களை வோட்டு செய்யச் சொல்லி யிருக்க வேண்டியதில்லை. தேர்தலில் அடுத்தபடி வோட்டுகள் பெற்ற அபேட்சகர்களுக்கு அந்த ஸ்தானங்களை மறு தேர்தலில்லாமல் கொடுப்பதா யிருந்தாலும் பொறுத்துக் கொள்ளலாம்.

படத் திறப்பு விழா

தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தில் ஏப்ரல் 4-ந் தேதி ஸ்ரீ ரகுநாதய்யர் அவர்கள் திருவுருவப் படத்தை டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த இனிய வைபவத்துக்குச்சென்னையிலுள்ள பல பத்திரிகைகளின் ஆசிரியர்களும், நிருபர்களும் வந்ததோடன்றிப் பல பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

டாக்டர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களை வரவேற்றுப் பேசிய திரு ஆர். நரசிம்மன், நீண்ட காலம் 'ஹிந்து' பத்திரிகையில் மிகச் சிரிய பணியாற்றிய ஸ்ரீ ரகுநாதய்யர் அவர்கள், உலகத்துக்குத் தெரியாமலே இருந்து வந்தார் என்பதை எடுத்துரைத்தார்.

பல்வேறுபட்ட விஷயங்களில் — சங்கீதம், தத்துவம், இலக்கியம், சரித்திரம் பொருளாதாரம் ஆகியவற்றில் ஸ்ரீ ரகுநாதய்யருக்குள்ள ஆழ்ந்த புலமையை டாக்டர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் வியந்து பாராட்டினுர்.

ஸ்ரீ ரகுநாதய்யரைப் போன்ற உயர்ந்த சிந்தனைகளும் எளிய வாழ்வும் பண்பும் கொண்ட மனிதரைக் காண்பது அரிது! அவருடைய திருவுருவப் படம் பத்திரிகையாளர்களுக்கு அவரைப் பற்றிய இந்த அரிய உண்மையை என்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்கும்.



ஒரு லட்சம் மோட்டார்

தொழில் வளம் செழிப்புற்று விளங்கும் மேலை நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியைக் கணக்கிடுவதற்குப் பல அளவைகளைக் கையாளுவார்கள். அவற்றில் ஒன்று மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை. ஒரு குடும்பத்துக்கு ஒரு மோட்டார் உள்ள நாடு, இரு குடும்பங்களுக்கு ஒரு மோட்டார் உள்ள நாட்டைக் காட்டிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது என்று சுட்டிக் காட்டித் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பார்கள். இப்படிப் பார்த்தால் இந்தியாவின் நிலை மற்ற முன்னேறிய நாடுகளைவிட மிகவும் அடிமட்டத்தில் தான் இருக்கிறது. இங்கே மோட்டார்களின் உற்பத்தி குறைவு. ஆனால் சமீப ஆண்டுகளில் இது வேகமாக அதிகரித்து வந்திருக்கிறது. இத்துறையில் முதலில் நிற்பது பம்பாயை அடுத்த குர்லாவிலுள்ள **பிரிமியர் ஆட்டோமோபைல்** என்னும் கம்பெனி. பெயருக்கு ஏற்ப இந்தியாவிலுள்ள மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலைகளில் இதுதான் முதலாவது.


இந்தியாவில் முதன் முதலாகக் கப்பல் கட்டும் தளம், விமானத் தொழிற்சாலை மற்றும் இது போன்ற பெரும் தொழிற்சாலைகளை நிறுவிப் புகழ்பெற்ற தொழிலதிபர் வால்சந்த் ஹீராசந்த் என்பவரால் இந்தத் தொழிற்சாலை 1944-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1947-ம் ஆண்டில் முதலாவது மோட்டார் இத் தொழிற்சாலையிலிருந்து வெளி வந்தது. முதல் ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட டாட்ஜ், ஃபார்கோ, பிளிமத் மோட்டார் பாகங்களை இணைத்து உருவாக்கும் வேலை மட்டுமே இங்கே மேற்கொள்ளப் பட்டது. ஆனால் 1954-ம் ஆண்டிலிருந்து உற்பத்தி வேலையே ஆரம்பிக்கப்பட்டுப் படிப்படியாக முன்னேற்றம் கண்டு இப்போது ஒரு மோட்டாருக்கு வேண்டிய நூற்றுக்கணக்கான பாகங்களில் 80 சதம் இங்கேயே தயாரிக்கப்படுகிறது. மற்றப் பாகங்களையும் தயாரிக்க யந்திர சாதனங்களின் அமைப்பு முதலிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டுக்குள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்ட முழு மோட்டார் இங்கே தயாராகக்கூடும்.

இப்போது ஆண்டுக்கு 13,000 மோட்டார்கள் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கண்ணைக் கவரும் பியட் வண்டிகளும், கடுமையான உழைப்புக்கு ஏற்ற டாட்ஜ், ஃபார்கோ லாரிகளும் இங்கே உற்பத்தியாகின்றன.

சென்ற மார்ச் 16-ம் தேதி யன்று இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியான மோட்டார்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்தை அடைந்தது. பியட் வண்டிகள் மட்டும் 25,000 எண்ணிக்கையை அடைந்தது. ஒரு லட்சம் மோட்டார் வாகனங்களைத் தயாரித்தளித்தது ஒரு பெரிய சாதனையாகும். இதனை நமது நாட்டின் முதலாவது மோட்டார் தொழிற்சாலையே முதலாவதாகச் சாதித்ததற்காக அதைப் பாராட்ட வேண்டும். இக்கம்பெனியின் நிர்வாகத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரும் டைரக்டர் குழுவினரும், மானேஜிங் டைரக்டரான திரு சினுபாய் லிலாசந்தும் இந்தச் சாதனைகளைக் குறித்து உண்மையிலேயே பெருமை கொள்ளலாம்.

இங்கே சுமார் 8000 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். பலருக்குத் தொழிற்சாலைக்கு அருகிலேயே வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. பலருக்கு வேலை ஸ்தலத்துக்கு வந்துபோக வாகன வசதிகள் அளிக்கப் படுகின்றன. ஆண்டு தோறும் விற்பனையாகும் பிரிமியர் மோட்டார்களின் மதிப்பு 23 கோடி ரூபாய்களுக்கு மேல் போகிறது. ஐந்தரை கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டுச் செயலாற்றும் இந்தத் தொழில் ஸ்தாபனத்துக்கு அமெரிக்கா ஒரு கோடி டாலர் கடன் உதவியுள்ளது.

சீரான முறையில் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலையின் வருங் காலத்தைப்பற்றி நம்பிக்கை கொள்வதற்குப் பல அறிகுறிகள் காணப் படுகின்றன. வாழ்க, பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் ஸ்தாபனம்!



திரு சினுபாய் லிலாசந்த்

டாக்டர் எஸ். ரங்காச்சாரி

சென்னை, ஜெனரல் ஆஸ்பத்திரியில் எழுபது ஆண்டுகளுக்கு முன், கட்டிடங்களைப் பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. இந்த வேலைகள் சரிவர நடந்து வருகின்றனவா என்று சோதிப்பதற்காகஇன்ஜினியர் ஒருவர் அங்கு போவது வழக்கம். அந்த இன்ஜினியருக்கு எட்டு வயது நிரம்பாத மகன் ஒருவன் உண்டு. இரண்டொரு முறை அந்தச் சிறுவனையும் இன்ஜினியர் தம்முடன் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். சிறுவன், ஆஸ்பத்திரிக்குச் சென்றதும், நோயாளிகள் படுத்திருந்த ஒரு 'வார்டு'க்குள் எட்டி நின்றபடியே பார்த்தான். படுத்திருந்த நோயாளிகளை வைத்தியர்கள் பரிசோதனை செய்வதையும் அப்போது சிலர் போட்ட கூச்சலையும், கூக்குரலையும் கேட்டுச் சிறுவனின் குறுகுறுப்பான கண்கள் கலங்கின. எனினும், 'இன்னும் என்ன நடக்கிறது?' என்பதைக் காண வேண்டுமென்ற ஆசையும் அவனுக்கு விடவில்லை. அடுத்த 'வார்டு'க்கு வைத்தியர்கள் சென்றபோது, அவர்கள் பின்னாலேயே சிறுவனும் ஓடினான். அடுத்த வார்டிலும் இதே காட்சிகள் தான். நோயாளிகளைப் பரிசோதனை செய்வது முடிந்து, வைத்தியர்கள் வெளியே வந்தார்கள். அங்கே தாழ்வாரத்தில் நின்று கொண்டு, எல்லாவற்றையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்த சிறுவனின் கன்னங்களை இமைத்து விட்டுச் சென்றார்கள். ஆனால், சிறுவனின் முகத்தில் மட்டும் எப்போதும் தாண்டவமாடி வரும் மலர்ச்சி சிறிது நேரம் வரை மறைந்திருந்தது. அந்த இளம் மனத்தில், நோயாளிகளின் நிலைமை குறித்து எவ்வித எண்ணம் வேர் விட்டிருக்க வேண்டும் என்பதை ஊகிப்பது கடினமல்ல. ஏனெனில், அந்தச் சிறுவனின் வைத்திய மேதையைத்தான் இந்தியா முழுவதும், மேல் நாடுகளும் பிற்காலத்தில் புகழ்ந்து போற்றின. அவர்தான் டாக்டர் எஸ். ரங்காச்சாரியார். ஆஸ்பத்திரிக்குத் தம்முடன் மகனை அழைத்துச் சென்ற அந்த இன்ஜினியர் திரு கிருஷ்ணமாச்சாரியாராகும்.

டாக்டர் ரங்காச்சாரியார் அவர்கள் 1882-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ந் தேதி பிறந்தார். சென்னை கிறிஸ்துவக் கல்லூரி நாட்டுக்கு அளித்த மாணவ மேதைகளில் திரு ரங்காச்சாரியாரும் ஒருவர். கல்லூரியில் பட்டப் படிப்பு முடிந்ததும் இவரது மனத்தில் நீண்ட காலமாக வேர் விட்டு நின்ற எண்ணமும் நிறைவேறியது. இவரது விருப்பப்படியே சென்னை வைத்தியக் கல்லூரியில் இவரது பெற்றோர்கள் சேர அனுமதித்தார்கள். வைத்தியக் கல்லூரியில் சிறப்பாகத் தேர்ந்து வெளி வந்ததும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'ஹவுஸ் ஸர்ஜன்' ஆகப் பொறுப்பேற்றார். பதவி ஏற்ற ஆரம்பத்திலேயே இவரது திறமை ஆஸ்பத்திரியிலும் வெளியேயும் பரவி விட்டது. மயிலாப்பூரில் இவர் வீடு தேடி நோயாளிகள் திரளாக வரத் தொடங்கினர். சிறிதே காலத்துக்குள் இந்திய வைத்திய சர்வீஸில் சேர்ந்தார். சென்னைக்கு வெளியே முக்கியமான பகுதிகளுக்கெல்லாம் இவரை அரசாங்கம் அனுப்பி வைத்தது. மாயவரம், தஞ்சை, குடந்தை, நாகப்பட்டினம் இங்குள்ள வைத்தியசாலைகளில் பிரதம வைத்தியராகப் பணியாற்றினார். 1914 முதல் நான்கு வருட காலம் வரை ஜில்லா வைத்திய அதிகாரியாகவும் பல மாவட்டங்களில் பொறுப் பேற்று வந்தார்.

இவரது திறமை சென்னை ராஜ்யத்துக்கு வெளியேயும் பரவிற்று. ஹைதராபாத் அரசாங்கம் கேட்டுக் கொண்டதன் மேல், இவர் செகந்திராபாத் நகரில் உள்ள கே. இ. எம். ஆஸ்பத்திரியின் தலைமை சர்ஜனாக நியமிக்கப்பட்டார். இங்கு அவர் அறுவை வைத்திய முறையில் நிகழ்த்திய அதிசயங்களைக்







''நீ வேலை செய்வதில்லையா ?''

''எதற்காக ?''

''வேலை செய்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாம்.''

''எதற்காக ?''

''சம்பாதித்த பணத்தைப் பாங்கியில் போட்டு வைக்கலாம் !''

''எதற்காக ?''

''நீ ரிடையர் ஆகும்போது அதற்கப்பறம் வேலை செய்ய வேண்டாம்.''

''நான் இப்போதே வேலை செய்வதில்லையே !''

கேள்விப்பட்டு இதர மாகாணங்களிலிருந்தும் அவரைத் தேடி வந்த நோயாளிகள் எண்ணற்றவர்கள்.

ஆனால், சென்னை மக்களுக்கு டாக்டர் ரங்காச்சாரியார் மிகவும் தூரத்திலுள்ள ஓர் இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டது பெரும் வருத்தத்தையே அளித்து வந்தது. சீக்கிரம் அவர் இங்கு திரும்பி வரும் நாளை எதிர் பார்த்து வந்தனர். நகர மக்களின் அதிர்ஷ்டவசமாகத் திரு ரங்காச்சாரியார் அவர்கள் சென்னைக்கு மாற்றப்பட்டார்.

சென்னையில், அதுவரையில் எழும்பூரில் உள்ள மாதர்கள் வைத்தியசாலையின் 'சிவில் ஸர்ஜன்' பதவியில் இந்தியர்கள் நியமிக்கப் படுவதில்லை. மேனாட்டு வைத்தியருக்கே இந்தப் பதவி ஒதுக்கப்பட்டு வந்தது. இந்தப் பதவிக்கு வேண்டிய திறமை, இந்திய வைத்தியர்களுக்கு இருக்குமா என்ற சந்தேகத்தினாலேயே இவ்வாறு ஒரு வழக்கத்தை அநுசரித்து வந்தார்கள். திரு ரங்காச்சாரியார் அவர்களின் ஆற்றலைப் பார்த்ததும், அரசாங்கம் தன்னுடைய கொள்கையிலுள்ள தவறுதலை உணர்ந்தது. திரு ரங்காச்சாரியாருக்கு இந்த முக்கியமான பொறுப்பை அளித்தது. எழும்பூர் மாதர்கள் வைத்தியசாலையில் இந்தப் பதவி ஏற்ற முதல் இந்திய வைத்திய நிபுணர் என்ற புகழும் திரு ரங்காச்சாரியார் அவர்களுக்கு உண்டு. அதன் பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அறுவை நிபுணராகப் பதவி வகித்தார். 1926 வரை சுமார் எட்டு ஆண்டுகளுக்குத்தான் அவரால் இங்கு பணியாற்ற முடிந்தது. ஆஸ்பத்திரிக்கு வெளியே அவருக்கு அவ்வளவு பெரும் அழைப்புகள் குவிந்து விட்டன.

திரு ரங்காச்சாரியார் ஒரு குறிப்பிட்ட அறுவை வைத்தியத்தில் மட்டுமின்றி, இதர முறைகளிலும் நிகரற்ற நிபுணராக விளங்கி வந்தார். முக்கியமாக ஏழைகளே அவருடைய சேவையைப் பெரும்பாலும் பெற்று வந்தார்கள். மாளிகைகளி லிருந்து வரும் அழைப்புக்களுக்கு நிகராகவே, சேரிகளில், குடிசைகளிலிருந்து வரும் அழைப்புக்களை மதித்து, தமது ரோல்ஸ்ராய்ஸ் காரில் உடனே புறப்பட்டு விடுவார். மாணவராயிருந்தபோது கிரிக்கெட் விளையாட்டில் திரு ரங்காச்சரியார் மிகவும் வல்லவராக விளங்கினார் என்றும், 'பிரிட்ஜ்' என்ற சீட்டாட்டத்தில் நிபுணர் என்றும் கூறுவார்கள். ஆனால், உண்மையில் அவர் யமனோடு நடத்தி வந்த ஆட்டங்களிலேதான் ஈடு இணையற்ற வல்லவராக விளங்கி வந்தார் என்று கூற வேண்டும். வாழ்வு என்ற பந்தயத்தில், நோயாளியின் உயிரைக் கவர்ந்து செல்ல, எமன் தன்னுடைய முழு சாமர்த்தியங்களையும் உபயோகித்தால் கூட, கடைசி வினாடி வெற்றி திரு ரங்காச்சாரி அவர்களுடையதாகவே இருக்கும். அவரிடம் உதவிக்கு வந்த நோயாளிகள் மற்றவர்களால் கைவிடப்பட்டுக் கடைசி நேரத்தில் வந்தவர்களாகத்தான் இருந்தார்கள்.

'நிலைமை மிக அபாயம். தாங்கள் உடனே வர வேண்டும்' என்ற தந்திகள் வந்தவண்ணமாயிருந்தன; டெலிபோன் மணி அடித்த வண்ணமாயிருந்தது. அவரை அழைத்துச் செல்லப் பரம ஏழைகளிலிருந்து பெரிய செல்வந்தர்கள் வரையில் காத்து நின்ற வண்ணமாகவே இருந்தார்கள். இதனால் அவருக்குத் தேவையாயிருந்த தெல்லாம் நேரம் தான். நேரம் இல்லாமல் தான் அவர் தத்தளித்தார் என்றும் கூற வேண்டும். இரவு இரண்டு மணி, மூன்று மணி என்றும் அவரைத் தேடி அவசர 'கேஸ்'கள் வந்தவாறுயிருந்தன.


ஒரு முறை, நோயாளிகள் பலருடைய வீடுகளுக்குச் சென்று விட்டு இரவு வீடு திரும்பும் போது இரவு பன்னிரண்டு மணி. 'ஓ'வென்று அழுத வண்ணம் சென்னைக் கடற்கரை மீனவர் குப்பத்திலிருந்து சில மாதர்கள் வீட்டுக்குள் வந்து, பிரசவ நிலைமையில் மரண நிலைமையை அடைந்து விட்ட ஒரு தாயைக் காப்பாற்ற வரும்படி கதறினார்கள். உடனே, அவர்களைத் தமது காரிலேயே அழைத்துக் கொண்டு, குறிப்பிட்ட குடிசையை நோக்கி விரைந்தார். உதவியாளர்களுடன் குடிசையினுள் நுழைந்தார். சிகிச்சை முடிந்து அவர் வெளியே வரும் போது, பொழுது விடிந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். அந்த ஸ்திரீயின் உயிர் பிழைத்தது. இதற்கு ஏதாவது கைம்மாறு செய்ய நினைத்தனர் அந்த ஏழை மக்கள், ஆளுக்கு இரண்டணா, நாலணா என்று அக்கம்பக்கங்களில் வசூலித்து, அதை டாக்டர் முன் ஒரு தட்டில் வைத்து ஏற்றுக் கொள்ளுமாறு மன்றாடினார்கள். திரு ரங்காச்சாரியார் அந்தத் தட்டில் தமது கால்சட்டைப் பையிலிருந்து நோட்டுத் தாள்களை அள்ளிப் போட்டு, ''இவற்றை அந்த ஸ்திரீயின் மருந்துச் செலவுக்கு உபயோகியுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

திரு ரங்காச்சாரியார் அவர்கள் சில வாரங்கள் இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பி வருவதற்குள் இங்கு, நோய் வாய்ப்பட்டவர் அடைந்த வருத்தத்தைப்பற்றியும் கூற வேண்

டும். வெளிநாட்டுப் பிரயாணத்திலிருந்து திரும்பி வீட்டுக்கு அவர் வந்த போது அவரை முதலில் வரவேற்றவர்கள் நோயாளிகள்தான். அவர் திரும்பி வரும் நாளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வெளியூரிலிருந்து பலர் இங்கு முன்னதாகவே வந்திருந்தார்கள்.

வெளியூர் மக்களின் அவசர சேவைக்காகவே அவர் ஆகாய விமானம் ஒன்று வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இந்தியாவில் வைத்திய உதவி செய்வதற்கென்று சொந்தமாக விமானம் வைத்துக் கொண்டிருந்த வைத்தியர் டாக்டர் திரு ரங்காச்சாரியார் அவர்கள் ஒருவர்தான்.

இந்த விமானத்தில் இரண்டு முறை கானுடுகாத்தானுக்குச் சென்று இரண்டு பெண்மணிகளின் உயிரைக் காப்பாற்றினார். அவ்விருவரும் பரம ஏழைகள், கிராமவாசிகள். இப்படி ஆயிரக்கணக்கான குடும்பங்களில் அவருடைய சேவை ஒளி வீசிற்று.



'ஹிந்து' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் திரு ஜி. நரசிம்மன் அவர்களின் புதல்வி சௌ. உஷாவுக்கும் திரு நாராயணனுக்கும் சென்னை மௌப்ரேஸ் ரோடிலுள்ள பார்ம் ஹவுஸில் அதிவிமரிசையாக விவாகம் நடைபெற்றது. மணமகன் புதுதில்லி திரு வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வர். சென்னை நகரப் பத்திரிகை ஆசிரியர்களும், பிரமுகர்களும் தொழில் அதிபர்களும் திருமணத்துக்கும் வரவேற்பு வைபவத்துக்கும் வந்திருந்து சிறப்பித்தனர்.

வைத்திய முறை விஞ்ஞானத்தில் அவர் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராகவும் விளங்கி வந்தார். ''ஒரே மாதிரி நோய்க்கு ஒரே மாதிரி மருந்து'' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காமல், நோயாளிகளின் தனித் தனி 'தாங்கும் சக்தி'யை அளந்து அறிந்து அதன்படி சிகிச்சை செய்து வந்ததைக் குறிப்பிட வேண்டும். அவரிடம் பிரபலமாக அமைந்திருந்த வைத்தியச் சிறப்பு, மிகத் துரிதமாக நோய்களைப் போக்கி வைப்பதில் அவர் கையாண்ட முறைகளாகும். ''தாமதம் என்பதே அவர் வைத்தியத்தில் இடம் பெற்றது கிடையாது. நோயின் அடிப்படைக் காரணத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே கண்டு கொள்வதிலும் அதற்கு நேரடியாக வைத்தியம் செய்வதிலும் அவர் போன்ற நிபுணர் வேறொருவரும் இருந்ததில்லை'' என்று கிறிஸ்துவ மிஷினரி பாதிரியார் ஒருவர் கூறியுள்ளார்.

திரு ரங்காச்சாரி அவர்கள் 1934-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நோய்வாய்ப்பட்டுக் காலமானார்கள். இத்தகைய பிரபல வைத்தியருக்கு ஏற்பட்ட நோயின் தன்மை என்னவென்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் வீதம் இருபது ஆண்டுகள் இடைவிடாது உழைத்ததுதான் அவர் உடல் நிலைமையைச் சீர்குலைத்தது. அவரைக் காப்பாற்ற எவ்வளவோ பேர்கள் முயன்றும் பயன் தரவில்லை. இன்னும் ஒரு ரங்காச்சாரியார் இல்லாத காரணத்தால் அவர் மறைவு அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாயிற்று.

திரு ரங்காச்சாரியார் அவர்கள் நிபுணராக மட்டுமில்லாமல் பரோபகாரத்தின் உருவமாகவும் விளங்கினார். அவரை அறியாமலேயே அவருக்கு வந்து குவிந்த லட்சக்கணக்கான ரூபாய்களின் வரும்படியையெல்லாம் ஏழைகளின் நலனுக்கே பயன்படுத்தி வந்தார். அவரும் அவரது துணைவியார் அவர்களுமாகப் பொதுநலக் காரியங்களுக்காக நான்கு லட்சங்களுக்கு மேல் வழங்கியுள்ளார்கள்.

அவரது துணைவியார் திருமதி கமலம்மாள் ரங்காச்சாரி அவர்களைத் தமிழகத்தின் தர்ம தேவதை என்றே குறிப்பிட வேண்டும். பல பள்ளி ஸ்தாபனங்களும், வைத்திய ஸ்தாபனங்களும் அம்மையாரின் நல்லுதவி பெற்றிருக்கின்றன. சமீபத்தில்கூடப் பிரதமர் நேரு அவர்கள் சென்னையில் தொடங்கிவைத்த 'மக்கள் வைத்தியப் பணி'ச் சங்கத்துக்கு (வாலண்டரி சர்வீஸ்) லட்ச ரூபாய் வழங்கி மகிழ்ந்தார்கள்.

திரு ரங்காச்சாரியார் அவர்களின் பிறந்த தின சமயத்தில் அவரை நினைவுகொள்வது தமிழ் மக்களின் நன்றி உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும். இந்தச் சமயத்தில், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி முகப்பில் உள்ள அவர் சிலை பற்றிய ஒரு வார்த்தை. சிலையின் மீது பறவைகள் செய்யும் அசுத்தத்தை அப்படியே விட்டு வைத்திருப்பதற்குக் காரணம் தான் விளங்கவில்லை. சிலையின் அடியிலுள்ள பதுமைகளில் ஒன்று வெடிப்புக் கண்டிருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளை நீக்கிச் சிலையைக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பார்களானால், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நிச்சயம் அசுத்தத்துக்கு இடமிராதென்ற பெயர் நிலைக்கும்.

— கதிர்



அத்தியாயம் 3

"தாரா வருகிறாள்!"

அண்ணனைச் சற்றுத் தூரத்தில் கண்டதுமே பரபரப்படைந்த பார்வதி, அவன்அருகில் நெருங்கியதும் ''அடடா! எவ்வளவு வேகம் எருமை மாடு அசைகிறாப் போல! கொஞ்சம் சீக்கிரமாகத் தான் வந்தால் என்னவாம்?'' என்றாள் ரத்த பாசம் தந்த உரிமையோடு.

''ஞொய், ஞொய்!'' என்று மகிஷத்தைப் போலவே தலையை நிதானமாகவும் பலமாகவும் ஆட்டிச் சப்தித்தான் வடிவேலு. ''நான்தான் எருமையைப் போல நடக்கிறேன் என்றால் நீ எதற்குக் குட்டி போட்ட பூனை மாதிரி குறுக்கேயும் நெடுக்கேயும் அலைகிறாய்?''

''தாரா வருகிறாள், அண்ணா!'' என்றாள் பார்வதி. ஏதோ நடக்க முடியாத அதிசயம் நிகழ்ந்து விட்டதுபோல் அவள் முகத்தில் குடிகொண்டிருந்த ஆவலையும், மகிழ்ச்சியையும் கண்டு, ''அடேயப்பா! நிஜமாகவா?'' என்று கேட்டான் வடிவேலு, தானும் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டதாகப் பாவனை செய்தபடியே.

''போ, அண்ணா! உனக்குக் கொஞ்சம் கூட 'ஸீரியஸ்னஸ்'ஸே கிடையாது!''

''வருவது யார்? உன் காலேஜ் சிநேகிதிதானே?'' அவன் விருப்பப்படியே கேலிப் பேச்சை மூட்டை கட்டி வைத்து விட்டுக் கேட்டான் வடிவேலு.

''ஆமாம், அண்ணா! அவளேதான்.''

''எதற்கு வருகிறாளாம்?''

''வீட்டுக்கு யாராவது விருந்தாளியாக வருகிறார்கள் என்றால், 'ஏன், எதற்கு?' என்றெல்லாமா கேட்டுக் கொண்டிருப்பார்கள்? ஏதோ கிராமப் புறத்தில் விச்ராந்தியாகக் கொஞ்ச நாட்கள் தெரிந்த மனிதர்களோடு தங்கி மனத்தைத் தேற்றிக் கொள்ளலாமே என்று இருக்கும்.''

''இங்கே அவளுக்கு நன்கு பழக்கமானவள் நீ ஒருத்திதான்.''

''அது போதாதாக்கும்? உடனே பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போய் அவளை ரயிலடியிலே சந்திச்சுப் பின்னோடு கூட்டிக் கொண்டு வந்துவிடு.''

''வேறே வேலை இல்லை. அவள் என்ன விக்டோரியா மகாராணி என்று நினைப்போ; மெட்ராஸ் வரைக்கும் சென்று எதிர்கொண்டு அழைத்துவர?''

''சேச்சே! ஆனாலும் ரொம்ப மோசம் நீ! ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வருகிறாள், பாவம்! தெரிந்த முகமா கண்ணிலே பட்டால் ஒரு ஆறுதல். கொண்டு வந்த சாமான்களுடன் குழந்தையையும் தூக்கிக் கொண்டு சென்ட்ரல்லேயிருந்து எக்மோர் வந்து ரயிலேற வேண்டாமா? ஒருவேளை டில்லி ரயில் தாமதமாக வந்து இரவு மெட்ராஸிலேயே தங்க நேர்ந்தால்?''

''கான்பூரிலேயிருந்து சென்னைவரைக்கும் வந்தவளுக்கு அங்கேயிருந்து தேனூருக்கு வரத்தான் வழி தெரியாமல் போய்விடுமாக்கும்?''

''சுத்த 'கண்ட்ரி' என்கிறது சரியாகத் தான் இருக்கிறது. பெண்களைப் பற்றி இப்படியெல்லாம் 'மேனர்ஸ்' இல்லாமல் பேசுவார்களா?''

''அம்மா, பாரு! நான் 'கண்ட்ரி புரூட்' தான்! நீ பட்டணத்திலே தங்கியிருந்து நிறையப் படிச்சுப் பெரிய பட்டமெல்லாம் வாங்கிலியோ இல்லியோ? அப்புறம் இங்கே வந்து பட்டிக்காட்டு அத்தானைப் பார்த்து ஆசைப்பட்டுக் கட்டிக்கிட்டியே ஏன்?'' முடிந்து வைக்கப்பட்ட பரிகாசம் மீண்டும் கட்டவிழ்த்துக் கொண்டு கிளம்பியது.

''அது என் இஷ்டம்; நீ யார் கேட்பதற்கு?'' என்றாள் பார்வதி. ''அதனால் எனக்கு என்ன குறைந்து போய் விட்டதாம்? தாரா எப்படி இருப்பாள், சிவப்பா, கறுப்பா என்பதுகூட உன் அத்தானுக்குத் தெரியாது. இல்லாத போனால் அவரையே அனுப்பி விடுவேன் சென்னைக்கு.''

''ஏன், பிளாட்பாரத்திலே நின்று கொண்டு, 'தாரா என்கிறது யாரு? தேனூருக்குப் போகிற தாரா யாரு?' அப்படீன்னு குரல் கொடுக்கட்டுமே?''

உள்ளேயிருந்து இதுவரைக்கும் கேட்டுக் கொண்டிருந்த ஆங்கிலம் படிக்கும் ஓசை நின்றது. ''என் தலை எதற்காக உருளுது, அண்ணன் தங்கை விவகாரத்திலே?'' என்று கேட்டார், சிங்காரம், ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொண்டு திண்ணைப் பக்கமாகக் கண்ணோட்டம் செலுத்தியபடியே.

''இப்படிக் கொஞ்சம் வந்து உங்கள் மச்சானுக்குப் புத்தி சொல்லுங்க!''

''வேணாம், வேணாம்! அத்தானுடைய படிப்பு பாழாகி விடும்.''

''பின்னே, அண்ணனாக இருக்கப்பட்டவன் இந்தச் சின்ன உபகாரம் பண்ணக் கூடாதா?''

''ஓ! தாராளமாக உதவி செய்யறேன் — 'தாரா, கேர் ஆப் ஸ்டேஷன் மாஸ்டர், மெட்ராஸ் சென்ட்ரல்' என்கிற விலாசத்துக்கு ஒரு தந்தி கொடுத்திடறேன், அவளைக் கான்பூருக்கே திரும்பிப் போகச் சொல்லி.''

''எதற்கும் ஓர் அளவு உண்டு அண்ணா!'' என்ற பார்வதியின் கண்கள் கலங்கின. ''கேலி செய்தால் சிரித்து விட்டுப் போய் விடலாம். ஆனால் நீ மனத்தில் வேறு எதையோ வைத்துக் கொண்டு வெறுப்பிலே பேசுகிறாய்!''


அவள் கூறியது கலப்படமற்ற உண்மை என்பதைப் புரிந்து கொள்ளக் கணப் பொழுதுகூட ஆகவில்லை வடிவேலுவுக்கு. தங்கையின் மனத்தை நோக அடித்து விட்டோமே என்ற துயரம் மேலிட அசைவற்று அவ்விடத்திலேயே சற்று நேரம் நின்றான் அவன். பின்னர் பரிவு நிறைந்த குரலில், ''பாரு. இதோ பார்! எனக்கு ஆட்சேபனை இல்லை. சரிதானே?'' என்றான்.


விம்மல்களுக்கிடையில் பார்வதியின் முகம் மலரவும் செய்தது. ''எப்படியும் நீ வழிக்கு வந்து விடுவாய் என்று தெரியுமே எனக்கு'' என்றபோது குறும்புத்தனம் குதிபோட்டது அவள் கண்களில்.

''இங்கே சந்தி சிரிப்பதெல்லாம் போதாது என்று உன் சிநேகிதியும் அதிலே சம்பந்தப்பட வேண்டுமா என்று தான் தயங்கினேன்'' என்றான் வடிவேலு, வேறுபுறமாய்த் திரும்பி. முணுமுணுப்பாக வெளிவந்த சொற்களாயினும் தெளிவாக அவை பார்வதியின் செவிகளில் ஒலித்தன.

''இப்படி நீ நினைப்பாய் என்பதை ஊகித்துத்தான் நானும் உன் வாயைக் கிளறினேன் அண்ணா. ஆனால் உனக்குத் தாராவைப் பற்றிச் சரியாகத் தெரியாது. தங்கமான மனசு. அனாவசியமாக யாரைப் பற்றியேனும் ஒரு வார்த்தை சொன்னால் அவள் பொறுக்க மாட்டாள்.''

''உன் தோழி ரொம்ப நல்லவள் என்றே வைத்துக் கொள்வோம், பாரு. நான் கவலைப்படுவது எனக்காகவேயல்ல. எனக்கு வரவேண்டிய மனச் சங்கடங்களெல்லாம் ஏற்கனவே வந்து சேர்ந்து விட்டன. இனிமேல் புதிதாக ஒன்றும் கூடப் போவதில்லை. நான் யோசிப்பதெல்லாம் தாராவுக்காகத் தான். இந்த வீடு இப்போது இருக்கும் லட்சணத்தில் அவளுக்கு இங்கே இருப்புக் கொள்ளுமா? மன நிம்மதியை





நாடி. அவன் வருகிருன் என்ருயே, இந்த நிலவரத்தில் மனச்சாந்தி அவனுக்குக் கிடைக்குமா?''

''அந்தக் கசப்பான விவரங்களையெல்லாம் அவள் காதிலே எதற்காகப்போடவேண்டும்?''

'' நாம் ஒன்றும் போடவேண்டாம். அவை தானுகவே வந்து விழும்!'' என்ருன் வடிவேலு எரிச்சலுடன்.

''அதையெல்லாம் அவன் கொஞ்சங் கூடப் பொருட்படுத்த மாட்டான்.''

''நீ போடுகிற கணக்குத் தப்பு பாரு! அப்பா வீட்டை விட்டு வெளியே கிளம்புகிறதில்லே; அம்மா பிரம்மஹத்தி பிடித்தாற் போல் அடுப்பங்கரையில் அடைந்து கிடக்கிருள்; தந்தைக்கும் மகனுக்கும் இடையில் பேச்சு வார்த்தை கிடையாது; அக்கம்பக்கத்திலுள்ளோர் நம் வீட்டில் அடி எடுத்து வைக்கவே கூசுகிருர்கள். வந்த அரை மணி நேரத்துக்குள் சகலமும் சாங்கோபாங்கமாக விளங்கிவிடும் உன் சிநேகிதிக்கு. சொல்ல


வும் முடியாமல் மெல்லவும் முடியாமல் கிடந்து தவிப்பாள். சுமுகமான சூழ்நிலை நிலவவில்லை என்பதால் வந்த சுவட்டிலேயே திரும்பியும் விடுவாள் இரண்டொரு தினங்களில்.''

பாருவின் வதனத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது வடிவேலுவுக்கு. அமைதியைத் தேடி அலையும் தன் ஆருயிர்த் தோழி தன்னிடமிருந்தும் அதைப் பெறப் போவதில்லை; மேலும் மேலும் அவள் உள்ளத்துக்கு வேதனை அளித்து வளர்க்கத்தான் போகிறோம் என்ற எண்ணத்தில் பாருவின் முகம் வாடியது.

''ஊரிலே இருக்கிற மகானுபாவர்கள்தான் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறார்கள் என்றால் வீட்டுக்குள்ளேயாவது எல்லாரும் நடந்ததை மறந்து விட்டுக் கொஞ்சம் கலகலப்பாக இருக்கக் கூடாதா?'' என்று அங்கலாய்த்தாள் அவள். ''அப்பாவைக் கேட்டு விடுகிறேன், பார் இன்றைக்கு'' என்றாள்.

''போ, முதலில் அந்தக் காரியத்தைச் செய்'' என்று தூண்டினான் வடிவேலு.





''அப்பாவையும் அம்மாவையும் நான் கவனித்துக் கொள்கிறேன், அண்ணா! அவர்களை வழிக்குக் கொண்டு வரவேண்டியது என் பொறுப்பு. நீ சீக்கிரமாகக் கிளம்பு. பெட்டி படுக்கை யெல்லாம் தயாராக வைத்திருக்கிறேன். வண்டி பூட்டச் சொல்லவா?''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் நாலு மணி நேரத்துக்கு முன் னடியே ஸ்டேஷனுக்குப் போய்க் காத்திருப்பதால் போட் மெயில் சீக்கிரமாக வந்துவிடப் போவதில்லை. குளித்துவிட்டு வருகிறேன். இலை போட்டு வை. சாப்பாடு இல்லாமல் துரத்தாதே அண்ணனை!''

''சரியான சாப்பாட்டு ராமன்தான் அண்ணனாக வந்து வாய்த்திருக்கிறாய்'' என்று கூறிக் குபீரென்று சிரித்த பாரு, அப்போதுதான் அவனுடைய அழுக் கடைந்த தோற்றத்தைக் கவனித்தாள். ''என்ன அண்ணா இது, மேலே எல்லாம்?'' என்று அருவருப்புடன் முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள்.

''சேற்றிலே வழுக்கி விழுந்து விட்டேன்'' என்றவாறே புறக்கடைக் கிணற்றடிக்கு விரைந்தான் வடிவேலு.

''நன்றாகத்தான் இருக்கிறது, பச்சைக் குழந்தையைப் போல'' என்று முகவாயைத் தோளில் இடித்துக்கொண்டாள் பார்வதி. பின்னர், ''அப்பா!'' என்று குழைந்து கூப்பிட்ட அவள் முற்றத்தில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த தகப்பனாரை அணுகினாள்.

''என்னம்மா பாரு? வாயேன், இப்படி உட்கார்.'' நீட்டிய கால்களுக்குக் கீழேயிருந்த 'ஸ்டூலை' உதைத்துத் தள்ளி நகர்த்தி அவளை அதில் அமரச் செய்தார் முத்தையா.

அத்தியாயம் 4

பாசம் வென்றது!

மகனிடம் ஏற்பட்ட ஏமாற்றம் பெண்ணிடம் பாசத்தை வளர்த்திருந்தது முத்தையாவுக்கு. அதிலும் கல்யாணமாகி மூன்று வருஷங்களுக்குப் பிறகு இப்போது அவள் தாயாகப் போகிறாள் என்பதை அறிந்தது முதற்கொண்டு அவர் மகள்மீது அன்பைக் கங்குகரையின்றிச் சொரிந்து கொண்டிருந்தார்.

''அப்பா! உங்களை ஒன்று கேட்டுக் கொள்ளப் போகிறேன். தட்டாமல் அதன்படி நடக்கணும் நீங்கள்!''

''ஏது, பீடிகை பலமாக இருக்கிறதே?'' என்றார் ஷேக்ஸ்பியர் புத்தகத்தில் ஈடுபட்டிருந்த சிங்காரம் தலையை உயர்த்தியபடியே.

பொய்க் கோபத்துடன் அவரைச் சுட்டெரிப்பதுபோல நோக்கினாள் பார்வதி. ''நானும் அப்பாவும் ஏதோ பேசிக் கொள்கிறோம்; நீங்கள் ஏன் அதில் தலையிடுகிறீர்கள்?'' அவள் கண்களைச் சிமிட்டியதை அரிக்கன் விளக்கின் மங்கலான வெளிச்சம் சிங்காரத்துக்கு மட்டுமே புலப்படுத்தியது. அவர்கள் எதிர்பார்த்த பலனும் கிட்டியது.

''குழந்தைக்கு இந்த மாதிரித்தான் திடீர் திடீரென்று ஏதாவது ஆசைகள் வரும், மாப்பிள்ளை!'' என்றார் முத்தையா. ''இந்த 'டயம்' அப்படி. என்ன புரிகிறதா உங்களுக்கு?''

''இந்த வரி துளிக்கூடப் புரியவேயில்லை பாரு; என்ன சொல்கிறான் ஹாம்லெட் இந்த இடத்தில்?''

''சுரைக்காய்க்கு உப்பில்லை என்கிறான் குறுக்கே பேசாதிருங்களேன், சற்று நேரத்துக்கு!''

''அப்புறம் நான் பெட்ருகியோவாக மாறி விடுவேன்!''

''பெட்ருகியோ இல்லை, பெட்ருஷியோ என்று எத்தனை தடவை அடித்துக் கொண்டிருக்கிறேன் உங்களிடம்?''

''பெட்ருஷியோ என்றால் நன்றாகவே இல்லை!''

''உங்களுக்குப் பிடித்தமாதிரி இருக்க வேண்டும் என்பதற்காக இங்கிலீஷைக் கொலை பண்ணுவார்களா?''

''அது இங்கிலீஷ் வார்த்தை இல்லை, இத்தாலியப் பெயர்! காலேஜிலே படிச்சு என்ன பிரயோஜனம்? இந்தச் சின்ன விஷயம்கூடத் தெரியலை!''

மகளை மடக்கி விட்டார் மாப்பிள்ளை என்று கண்டு கொண்டு அவள் உதவிக்கு வந்தார் முத்தையா, அவசரமாக. ''யார் அது, இத்தாலி தேசத்துப் பெட்ருஷியோ? முசோலினிக்குத் தம்பியா?''

''நல்ல வேளை, 'பெட்ரோமாக்ஸின் அண்ணா பெட்ருஷியோ?' என்று கேட்காமல் விட்டீர்களே. ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரம் மாமா அவன்! அடங்காப் பிடாரி மனைவியை வெற்றி கொண்ட வீரன்!''

அதிர் வேட்டு போட்டது போல் நகைத்தார் முத்தையா. ''அப்படி ஒரு கதையா எழுதியிருக்கிறான் ஷேக்ஸ்பியர்?''


AEI

ஏ இ ஐ ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள்


குளிர்ந்த அமைதியான ஆனந்தத்திற்கு

குறைந்த மின்சாரத்தில் மிகுந்த சக்தியுடன் இயங்குமாறு உருவாக்கப்பட்ட ஏ. இ. ஐ. ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. துல்லியமான தேர்ச்சியுடன் ஏ. இ. ஐ. விசிறிகள் தயாரிப்பதில் "இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் மின்சாரக் கருவிகள் அளிக்கும்" ஸ்தாபனத்தின் அனுபவமும், தொழில் நுட்பத்திறனும் உதவுகின்றன.

இது வெறும் பண்டம் வாங்குவதல்ல; முதலீடு செய்வதாகும்



மைத்தான் ஏ. சி.
பக்ரா டி. சி. 900மி.மீ., 1200மி.மீ., 1400மி.மீ., மற்றும் 1500மி.மீ.



"டிலக்ஸ்" 400மி.மீ
டேபிள் மாடல்

- பிரித்தெடுக்கக்கூடிய பாது காப்பு மூடி.
- இஷ்டப்படி மாற்றிக்கொள்ளக் கூடியது, ஆடி வீசக்கூடியது.
- துல்லியமான வடிவமும், சம அமைப்பும் உள்ள அலுமினிய விசிறித் தகடுகள்.
- மூன்று வேக அளவுகள்.
- எனாமல் மெருகிடப்பட்ட பல மாதிரிகள்.

AEI/11A-TAM

அஸோஸியேடெட் எலக்டிரிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்

தலைமை காரியாலயம் : க்ரௌன் ஹவுஸ், 13, ராஜேந்திரநாத் முக்கர்ஜி ரோடு, கல்கத்தா-1.,
கிளைகள் : பம்பாய் புது டெல்லி சென்னை பெங்களூர் கோயம்புத்தூர் நாகபுரி.

''அப்பாடா! இந்த வீட்டிலே சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு எத்தனை நாட்களாச்சு? இப்போதுதான் எனக்குக் கொஞ்சம் திருப்தியாக இருக்கிறது'' என்றாள் பார்வதி.

சட்டென்று முத்தையாவின் முகம் மாறியது. ''சந்தோஷப்பட நமக்கு ஒன்றுமில்லைதான். நமக்கும் சேர்த்து வைத்துத்தான் மற்றவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்களே. ஆனாலும் பாரு என்னவோ நீ வந்து பக்கத்தில் உட்கார்ந்தால் எனக்குவேறே எதுவுமே ஞாபகம் இருப்பதில்லை.''

''அதையேதான் நானும் கூற வந்தேன். நடந்ததையெல்லாம் ஏதோ ஒரு துர்ச் சொப்பனமாகக் கருதி மறந்துவிட்டு முன்னெப்போதையும் போல் அண்ணனுடன் சகஜமாகப் பேசிப் பழகக்கூடாதா நீங்கள்?''

''என்ன சொன்னாய்'' என்று ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்தார் முத்தையா. எழுந்த வேகத்தில் 'ஈஸிசேர்' கட கடத்து ஆடியது.


''இந்தச் சமயத்திலே பாரு ஆசைப்படற எதையும்இல்லேன்னுசொல்லப் படாது நீங்கள்'' என்றார் சிங்காரம்.

''நான் கற்றுக் கொடுத்த பாடத்தை என்னிடமே திருப்பிப் படிக்கிறீர்களா, மாப்பிள்ளை? நான் ஏமாற மாட்டேன்.''

''அப்பா! தயவுசெய்து'' என்று இழுத்தாள்.

''பேசாதே!'' — உத்தரவு போட்டார் முத்தையா. ''அந்த நாடகக்காரியைக் கூட்டி வந்து அவன் இங்கே ஆடிய தெருக் கூத்தையெல்லாம் பார்த்துக்கிட்டுத்தானே இருந்தீங்க? அவன் சார்பிலே வாதாட நாக்கு எப்படிப் புரண்டு கொடுக்குது உங்களுக்கு? சீ, வெட்கமாக இல்லே?'' உடல் பதறியது முத்தையாவுக்கு.

''அப்பாவும் பிள்ளையும் எப்படி வேணுமானாலும் போங்கள். எனக்கு அக்கறை இல்லே'' என்றாள் பார்வதி சற்றுக் கோபமாக. ''நான் கேட்டுக் கொள்கிறது என் சிநேகிதி இங்கே வருகிறப்போ எல்லாம் சுமுகமாக இருக்கணும் என்கிறதுதான். அதுக்குச் சம்மதிப்பீங்களா? இஷ்டமில்லே என்றால் அத்தானுடன் அவர் வீட்டுக்கு இப்பவே நான் கிளம்பிடறேன். தாராவையும் அங்கேயே தருவிச்சுக்கிறேன்.''



குழந்தையும் கையுமாகப் புக்ககம் திரும்ப வேண்டியவள் இன்றே போவதாகக் கூறியதும் திடுக்கிட்டார் முத்தையா. மாப்பிள்ளையின் தோற்றத்தைப் பார்த்தால் அவரும் அதற்கு உடந்தையாக இருப்பார் போலத்தான் தென்பட்டது. அவர் மௌனத்தைச்சரியானபடி அளந்துவிட்டாள் பார்வதி. தன் கட்சியை மேலும் வலியுறுத்தித் தனக்குச் சாதகமான மனமாற்றத்தை அவரிடம் உண்டு பண்ணுவதில் முனைந்தாள். ''அப்பா! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தாரா இங்கே இருக்கிற வரை உங்களுக்குள்ளே விரோதம் ஏதும் இல்லாத மாதிரி நாடகமாவது நடத்துங்களேன்.''

இந்தக் கோரிக்கைக்கான காரணங்களையும் பார்வதி விவரமாக எடுத்துக் கூறிய பின்னர் முத்தையா கீழே இறங்கி வந்தார். ''நீ சொல்வதும் நியாயமாகத்தான் படறது. நம்ப வீட்டுச் சமாசாரம் நம்ப ஊரோடு போனாலும் தேவலே. தேசம் முழுதும் பரவணும் என்கிற அவசியம் என்ன? என்னதான் இருந்தாலும் உன் தோழி பெரிய தியாகியோட பெண்டாட்டி இல்லேயா? அவளுக்கு விஷயம் எட்டியது என்றால் அது நாட்டுக்கே தெரிந்த மாதிரி!''—தாராவின் புகழைச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் வானளாவ உயர்த்தியதன்மூலம் மகளைத் திருப்திப்படுத்தியதுடன் தம்மைத் தாமேயும் சமாதானப்படுத்திக் கொண்டார் முத்தையா. இந்தத் தருணத்தில் தாம் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சலுகை காட்டுவது சரிதான் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி உணர்த்த அவர் கையாண்ட தந்திரம் அது.

சிங்காரத்தைச் சொக்க வைத்தாள் பார்வதி, பெருமிதப் புன்னகையோடு கூடிய ஒரு கண் வீச்சிலே. 'பார்த்தீர்

ளா என் சாமர்த்தியத்தை!' என்று தன் கணவரை அவள் கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

உள்ளங் கையில் இருந்த தயிர் சாதத்தைக் குழித்து வற்றல் குழம்பையும் அதில் சொட்ட விட்டுச் சாப்பிட்டதால் கழுவிய பின்னரும் கையும் வாயும் மணக்க, ஈரத்தை மேல் துண்டால் துடைத்துக் கொண்டு வந்தான் வடிவேலு. ''அப்பா! போய் விட்டு வரேன்.'' சுவரில் அடிக்கப்பட்டிருந்த ஓர் ஆணியில் தொங்கிய சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டவாறே அவர்களுக்கிடையில் புகுந்தான். நடைபெற்ற விவாதங்களைக் கேட்டுக் கொண்டிருந்தவன் தானே அவன்?



'உம், உம்' என்று உறுமினார் முத்தையா. ''இன்னிக்குப் பேப்பர் வந்திருக்கும். அதை கொடுத்துட்டுப் போகச் சொல்லு.''

''நீங்களே கேளுங்களேன் அப்பா!''

''தாரா வர இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. அதுக்குள்ளேயே இவளோட சந்தனக் கட்டையும் கல்லுமா இளையணும் என்கிறதில்லை....''

பார்வதி அண்ணனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''பத்திரிகை ஆற்றோடு போய் விட்டதப்பா!'' என்றான் வடிவேலு.

''ஆற்றோடா?'' வியப்புடன் ஒரே சமயத்தில் கேட்டனர் மாமனாரும் மருமகப் பிள்ளையும்.

''ஆமாம், 'காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினாமா' என படித்தேன். அவ்வளவுதான்; வந்தது கோபம்! பத்திரிகைகளைச் சுருட்டி விசிறி அடித்தேன் பாருங்கள், அது ஆற்று வெள்ளத்திலேபோய் விழுந்து விட்டது!''

''பாரு! கேட்டுக்கிட்டியா சங்கதியை? இவ்வளவு முக்கியமான சேதி வெளியாகியுள்ளது. என் கண்ணிலேயே காட்டாமல்ஆற்றிலே எறிந்துவிட்டேன் என்கிறான்! இந்தத் திமிர் பிடித்தவனோட எனக்கென்ன சல்லாபம்?''

''மாயவரம் டவுனிலே புதுசா வாங்கிக் கொடுத்து அனுப்பறேன். இப்போ கைச் செலவுக்கு ஒரு இருபது ரூபாய் கொடுங்க.''

''இருபது எதுக்குடா?'' என்றவாறே பெரிய தொந்திக்குக் கீழே தழைத்துக் கட்டியிருந்த வேஷ்டியின் ஒரு முனையைப் பிரித்து நைந்து போன மணி பர்ஸ் ஒன்றை எடுத்தார் முத்தையா. ''பத்து ரூபாய் போதும். இந்தா இதை வைச்சுக்க.''

''அந்தப் பொண்ணு தேனூருக்கு டிக்கெட் வாங்கியிருக்கானோ இல்லியோ? மெட்ராஸ் மட்டுமே டிக்கெட் எடுத்திருந்தால்?''

''அந்தக் குட்டிக்கு நீ ஒண்ணும் டிக்கெட் எடுக்க வேணும். அதிகப் பிரசங்கித்தனம் பண்ணாதே! தேவையானால் பட்டுன்னு அவனிடம் துட்டைக் கேட்டுவிடு.''

"உங்களுக்குத்தான் ஜங்ஷன் ஸ்டேஷன் மாஸ்டரைத் தெரியுமே அவரிடம் சொல்லி கார்டு வண்டியிலே மகனை ஏற்றிவிட்டு வாங்களேன், பாதிப் பணம் மிச்சம்" என்றாள் முத்தையாவின் சம்சாரம் சமையலுள்ளிலிருந்து.

தாயாரின் நையாண்டியைக் கேட்டுச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை பார்வதியினால். நகைப்பைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டபோது வடிவேலுவின் கண்கள் உப்பின. பலமாகத் தலையசைத்து அம்மாவைப் பாராட்டி விட்டு வாசலுக்குச் சென்றான் அவன்.

திண்ணையில் பெட்டியைத் திறந்து கவிழ்த்தான். படுக்கையையும் பிரித்து அதிலேயே ஓரிரண்டு ஆடைகளை வைத்துக் கட்டினான். தன் தோளில் அதைத் தூக்கி வைத்து விட்டு, "கூஜா பெட்டியெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்றான். "போய்விட்டு வரட்டுமா நான்?"

வேப்பிலைக் கொத்தைச் சட்டைப் பையில் செருகினாள் பார்வதி. உள் பக்கமாக எட்டிப் பார்த்துத் தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பது நிச்சயமானதும் கணவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டு வந்திருந்த இருபத்தைந்து ரூபாயை வடிவேலுவின் கரத்தில் திணித்தாள். "அண்ணா! பஸ்ட்கிளாஸே வாங்கிவிடு தாராவுக்கு. அவள் மோட்டாரிலேயே சவாரி செய்து பழகியவள். அவள் தகுதிக்கு ஏற்ற மரியாதையோடு நடந்து கொள்ளணும் நாம்."

"அத்தான்! வீட்டுக்குக் கிளம்பலையா நீங்கள்?" என்று கேட்டான் வடிவேலு சிங்காரத்தை நோக்கி.

"இன்னும் கொஞ்சம் நேரமாகும், தம்பி! நீ புறப்படு."

"நல்லாப் படிங்க. தங்கச்சியோட தோழி வந்தாச்சன்னா அப்புறம் உங்களுக்கு லீவுதானே?" என்று கிண்டலாகக் கேட்ட வடிவேலு, வீதியில் இறங்கி நடந்தான்.

கொஞ்ச தூரம் போனதும், "தம்பி, போகறச்சே எங்கே போறேன்னு கேட்கப்படாது; ஆனாலும் எங்கே படுக்கையைச் சுற்றிண்டு கிளம்பிட்டே?" என்ற குரல் கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான் வடிவேலு.

ஒரு மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்ட உருவத்தைக் கண்டதும், "ஓ, வாத்தியாரய்யாவா? அங்கே என்ன ஒளிஞ்சிக்கிட்டிருக்கீங்க?" என்று வினவினான் வடிவேலு.

"ஒத்தைப் பிராமணனாய் உன் கண்ணிலே எதிர்ப்படுவானேன் என்றுதான்... அது சரி. எங்கே பயணம்?"

"ஊருக்குப் போகிறேன், ஸார்!"

"அட, பெரிய தமாஷ் பேர்வழி அப்பா நீ!" என்று உதட்டைப் பிதுக்கி விழிகளை உயர்த்தி மூக்குக் கண்ணாடியின் மேலாக அவனை ஏற இறங்கப் பார்த்தார் அவர்.

"ஸார்! உங்களை ஒன்று கேட்கணும் என்று நினைச்சுக்கிட்டிருந்தேன். நம்ப நேருஜி இருக்கிறாரே, அவர் ஹிட்லருடைய 'பாஸிஸம்' தமக்குப் பிடிக்கவில்லைன்னு அடிக்கடி சொல்கிறார் அல்லவா? 'பாஸிஸம்' என்றால் என்ன?"

"போட்டயே ஒரு போடு!" என்றார் வாத்தியார் வெங்கிட்டு. "தம்பி! இந்த ஊரிலே இத்தனை பேர்கள் இருக்கிறார்களே அவர்களெல்லாம் இங்கிலீஷ் பேப்பரா படிக்கிறார்கள்? ஸ்கூல்பைனல் கூட ஒழுங்காகப் பாஸ் செய்யாத உனக்கு எதுக்கு இங்கிலீஷ் பேப்பர்னு கேட்கிறேன்! வீண் ஜம்பத்துக்காக என்னத்தையாவது படிக்கிறது, அர்த்தம் புரியாமல் திணறுகிறது, அப்புறம் என்னை நடுத்தெருவிலே நிறுத்திப் பிராணனை வாங்கறது. சமயம் போது கிடையாதா இதுக்கெல்லாம்?"

கடுமையாகப் பேசிய வெங்கிட்டு வாத்தியாரின் கெட்டிக்காரத்தனத்தை மனத்துக்குள் பாராட்டினான் வடிவேலு. எவ்வளவு சமத்காரமாக இக்கட்டான ஒரு நிலைமையைச் சமாளித்து விட்டார்? "ஏன் ஸார், உங்கள் பெண்கூடப் பட்டணத்திலேதானே இருக்கிறாள்? கூடுமானால் அங்கேயும் தலையைக் காட்டி விட்டு வருகிறேன்."

"ஓகோ! மெட்ராஸுக்கா போறே? முன்னாடியே சொல்லக் கூடாது? அங்கேதான் திருவல்லிக்கேணியிலே வாழ்க்கைப்பட்டிருக்கிறாள் தம்பி! நல்ல புளியாக அகப்பட மாட்டேன் என்கிறதென்று அடிக்கடி லெட்டர் போடுகிறாள். நொடிப் பொழுதிலே ஆத்துக்கு ஓடிப் போய் அரை மணங்கு புளி எடுத்துண்டு வந்துடறேன். போயிடாதே!"

"நான் காத்துக்கிட்டிருக்க முடியாது ஸார்! ரயில் போயிடும். வேணுமானால் ஸ்டேஷனிலே வந்து கொடுங்கள்."

நடையைக் கட்டினான் வடிவேலு. அவன் உள்ளத்தில் பல நாட்கள், மாதங்கள், வருஷங்கள், யுகங்களுக்குப் பிறகு இப்போது குதூகலம் நிரம்பித் ததும்பியது. தந்தைக்கும் மகனுக்கும் இடையில் உருவாகியிருந்த மனத் தாங்கலைத் தாற்காலிகமாகவேனும் தகர்த்துவிட்ட தாராவை அவன் நன்றிப் பெருக்கோடு நினைவு கொண்டான்.

இஞ்சின் ஊதிவிட்டு ரயில் மெல்ல நகருகிற சமயத்தில் உச்சிக் குடுமி கட்டவிழ்ந்து பறக்க, மேல் துண்டு நழுவித் தரையில் விழ, கயிற்றால் காதுகளைச் சுற்றிக் கட்டியிருந்த மூக்குக் கண்ணாடி ஒரு பக்கத்தில் அறுந்து தொங்கி ஊசலாட இரைக்க இரைக்க ஓடி வந்தார் வெங்கிட்டு வாத்தியார். (தொடரும்)


பவழத்தீவு
கதை:
வாண்டுமாமா
சித்திரம்:
ரமணி..
16
திருடன்... திருடன்.. பிடியுங்கள் காவல்.. காவல்.
ஆனந்தா.. இந்தப் பக்கமாகப் போகலாம் வா..
ஆனால் இவர்கள் தப்பி ஓடிய திசையிலும் காவல் வீரர் எதிர்ப்படவே....
இந்தப் பக்கமாகத்தான் ஒருவன் ஓடுகிறான். ஓடுங்கள் துரத்திச் செல்லுங்கள்.
பிடி.. பிடி... விடாதே!
சமயோசிதமாக அவர்களுக்குப் போக்குக் காட்டினும். தப்பிவிட்டோம். அது சரி, ஆனந்தா அந்தக் கட்டடத்தில் நீ என்ன பார்த்தாய்?
சொல்லுகிறேன். முதலில் நமது பாசறையை அடைவோம். வேகமாக ஓடு.
இளவரசே! எங்கே போயிருந்தீர்கள்? உங்களைக் காணாமல் நாங்கள் தவித்துப் போனோம். இனி இது மாதிரி அறிவிக்காமல் எங்கும் தனியே போகாதீர்கள்.
அந்தப் பெரிய வீட்டினுள் தான் பார்த்த காட்சியை நந்திவர்மரிடம் ஆனந்தன் விளக்குகிறான். தன் பெற்றோருடன் சென்ற தாதிகளையும் மற்றும் பணிப் பெண்களையும் அவ்வீட்டில் பார்த்ததாகவும் சூலபாணி அவர்களைச் சிறை வைத்துள்ள இடமாக அது இருக்கலாமென்றும் கூறுகிறான். உடனே அந்தக் கிராமத்தை முற்றுகையிட்டு அவர்களை விடுவிக்க வேண்டுமென்கிறான் ஆனந்தன்..


ஒரு வேளை என் பெற்றோரும் கூட அந்த வீட்டில் சிறை வைக்கப் பட்டிருக்கலாமோ என்று சந்தேகிக் கிறேன்.
நாம் அவர்களை உஷார்ப் படுத்தி விட்டோம். ஆகவே தாமதமின்றித் தாக்கினால் தான் தக்க பலன் கிடைக்கும்.
பின் நிலாக் காலம் தான். தாக்குதல் நடத்த வசதியாக இருக்கும். பொறுக்கி எடுத்த வீரருடன் கிளம்பு-வோம்.
ஆனந்தா, நீ சேனாபதியாருடன் இப்படிப் போ. நான் பாதி வீரருடன் அப்படி வருகிறேன். அப்போதுதான் கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொள்ளலாம்.
யாரையும் தப்ப விடாதீர்கள். கூடுமான-வரை யாரையும் கொல்லாதீர்கள்... ...ம்... தாக்குங்கள்.
இந்தக் கிழவனைப் பிடித்து விட்டால் நமக்குப் பாதி வெற்றி. சூலபாணியின் சூழ்ச்சிக் கெல்லாம் மூலகாரணம். இவன் தான்
இந்தப் பக்கமாகத் தானே ஓடி வந்தான். எங்கு மாயமாக மறைந்து போனான்?
தப்பி விட்டான். சரி வா. நாம் இங்கு தாமதிக்கக் கூடாது.


அதோ அந்த வீடு தான் நான் குறிப்பிட்ட இடம். வாருங்கள்.
அதோ, வஸந்தா.. அதோ எல்லோரும் நமது அரண்மனை அந்தப் புரத்துத் தாதிகள் தான்... ஆ.. அது...
அம்மா... அம்மா...!
ஆனந்தா, கண்ணே! ஆனந்தா என் கண்மணியே! உன்னைக் காண்பேன் என்று நினைக்கவுமில்லையடா.
மகாராணி! தங்களை மீட்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு வருந்துகிறேன். இந்த - வெற்றி கூட இளவரசரில்லாவிடில் கிடைத்திருக்காது.
அம்மா உங்களோடு அப்பாவையும் எதிர்பார்த்தேன். ஆனால் அவரை இங்கு எங்கு தேடியும் காணவில்லையே.
உன் தகப்பனாரை என்னிடமிருந்து பிரித்துத் தனியே எங்கோ கொண்டு போய் விட்டார்கள் பாவிகள்.
மன்னரின் உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டிருக்காதே.
இருக்காது. அந்தக் கயவர்கள் அவரிடமிருந்து எதையோ எதிர்பார்க்கிறார்கள். ஆகவே கொல்ல மாட்டார்கள். ஆனால் என்ன கொடுமைப் படுத்துகிறார்களோ?
ஆனந்தா- கிழவன்- தப்பி- விட்டான் தாமதிப் பது நல்லதல்

தொடரும்

அருமைத் தம்பி தங்கைகளுக்கு,


நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த விருந்து தயாராகி விட்டது. பரீட்சை யெல்லாம் அபாரமாக எழுதியிருப்பீர்களே! அடுத்த வருஷம் மேல் வகுப்பு இல்லையா? கோடை விடுமுறையின் குதூகலத்தில் இருக்கும் உங்களுக்கெல்லாம் விருந்தளிக்கப் போகிறோம். அறிவுக்கு விருந்து, சிந்தனைக்கு விருந்து!

உலகில் உள்ள அதிசயங்கள், விந்தைகள், விநோதங்களை எல்லாம் தொகுத்து உங்களுக்கு இந்தப் பகுதியில் வழங்கப் போகிறோம். புகழ்பெற்ற பெரியோர்களின் வாழ்க்கையிலே நடந்த சுவையான சம்பவங்களை, சரித்திரப் புகழ் பெற்ற இடங்களை, விசித்திரமான ஜீவராசிகளைப் பற்றி யெல்லாம் உங்களுக்குச் சொல்லப் போகிறோம். அது மட்டுமா? வேடிக்கைக் கணக்குகள், விளையாட்டுக்கள், நீங்களே செய்து பார்த்து மகிழும்படியான கை வேலைகள் இப்படி எத்தனை எத்தனையோ அம்சங்களை இந்தப் பகுதியில் உங்களுக்கு அளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். அவ்வப்போது உங்கள் திறமையை வெளிக்காட்டப் போட்டிகளும் கூட இடம் பெறும்.

'பரிசு?' என்று அங்கு யாரோ கேட்பது காதில் விழுகிறது. பேஷாக உண்டு! போட்டி என்றால் பரிசு இல்லாமலா?

— ஆசிரியர்

இது என்ன ?



சட்டென்று தாஜ்மஹால் என்று சொல்லுவீர்கள், இல்லையா? ஆனால் இது உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹால் இல்லை! ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஔரங்காபாத் நகரின் தென் கிழக்கே உள்ள பகுதி இது. மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் மனைவியான ரபீயா பேகமின் கல்லறை. தந்தை ஷாஜஹான் கட்டிய தாஜ்மஹாலைப் போலவே கட்ட வேண்டும் என்ற அவாவில் தனயன் ஔரங்கசீப்பினால் கட்டப்பட்டது. இதுவும் வெள்ளை சலவைக் கல்லினால் ஆனதுதான். டவர்னியர் என்ற அயல் நாட்டு யாத்திரிகர் தம் பிரயாணத்தின் போது இந்தக் கல்லறையைக் கட்டுவதற்கு ராஜபுதனத்திலிருந்து கற்களை வண்டிகளில் கொண்டு வந்ததைக் கண்டதாக எழுதியுள்ளார். முந்நூறுக்குமதிகமான வண்டிகள் சாரி சாரியாகச் சென்றதாகவும் அதில் மிகச் சிறிய வண்டியைப் பன்னிரண்டு காளைகள் இழுத்துச் சென்றதாகவும் எழுதி யிருக்கிறார். அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய இதுவும் தாஜ்மஹாலைப் போலச் சிங்கார நந்தவனத்தின் நடுவேதான் இருக்கிறது.

தெரியுமா?

1. ஒரு பறவை குதிரையை விட வேகமாக ஓடும். சிங்கம் போலக் கர்ஜிக்கும். ஆனால் பறக்காது. அதன் பெயர் என்ன?
2. வரிக் குதிரையைப் பார்த்திருக்கிறீர்களா? அதற்குக் கறுப்பு உடலில் வெள்ளைக் கோடா அல்லது வெள்ளை உடலில் கறுப்புக் கோடா?
3. பின்னோக்கிப் பறந்து செல்லும். பறவையைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?
4. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் 1900 வருடம் ஜனவரி முதல் தேதியிலிருந்தா அல்லது 1901-ம் வருடம் ஜனவரி முதல் தேதியிலிருந்தா ?
5. முதலைக் கண்ணீர் என்று பழமொழி வழங்குகிறதே, உண்மையிலேயே முதலைகள் கண்ணீர் வடிக்கின்றனவா?

(தெரிந்துகொள்)

1. நெருப்புக்கோழி.
2. வெள்ளை உடலில் கறுப்புக் கோடுகள்.
3. உண்டு. பறவை இனத்திலேயே மிகச் சிறியதான சங்கீதப் பறவை எனப்படும் 'ஹம்மிங் பேர்டு' மலர்களினுள்ளே தேனுக்காகவும் பூச்சிகளுக்காகவும் நுழையும். தேனை உண்ட பின் வெளியே வரும் போது பின்னோக்கித் தான் பறந்துவரும்.
4. 1901- ஜனவரி மாதம் முதல் தேதி.
5. முதலைகள் தனது வாயை அகலத் திறக்கும் போதெல்லாம் கண்ணீரை வடிக்கும் —நாம் கொட்டாவி விடும் போது நமது கண்களில் நீர் மல்குவது போல. ஆனால் அது, தான் உண்ணப் போகும் ஜீவராசிக்காக இரக்கம் காட்டி வடிக்கும் கருணைக் கண்ணீரல்ல!

சிறுவர் விருந்து

சின்னஞ் சிறுகதை

இடது கண்


ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவனுக்குப் பத்மாவதி என்று ஒரு பெண். ரொம்ப அழகி. அதே போல் சிறந்த புத்திசாலி. ஒருநாள் வியாபாரி தன்னிடமுள்ள மாடுகளை அரண்மனையில் விற்பதற்குக் கொண்டு வந்தான். அதில் ஓர் அழகிய செவலைக்காளைக்கு அரசரின் இடது கண்ணையே விலையாகக் கேட்டான். இதைக் கேட்டதும் மந்திரி பிரதானிகள் வெருண்டார்கள். வியாபாரியை மன்னரின் முன்கொண்டு போய் நிறுத்தினார்கள். தனது மகளின் விருப்பப்படியேதான் இப்படிக் கேட்டதாக வியாபாரி கூறினான். உடனே பத்மாவதி வரவழைக்கப் பட்டாள். அவள் ஆசையின் காரணத்தை அறிய விரும்பினார் மன்னர்.

''அரசே! தங்கள் முன் நியாயம் வேண்டி யாராவது இருவர் வருவார்களானால் அதில், பணமும் பதவியும் உள்ளவனை வலது கைப் பக்கமும் ஏழையை இடது கைப்பக்கமும் நிறுத்தி விசாரிப்பது வழக்கம், இல்லையா? தங்கள் தீர்ப்போ எப்போதும் பணக்காரனுக்கே சாதகமாக இருக்கும். நீங்கள் ஏழையின் பக்கம் திரும்புவதே இல்லை. ஆகவேதான் பயனில்லாத தங்கள் இடது கண்ணைக் கேட்டனுப்பி னேன்'' என்றாள் பத்மாவதி.

பத்மாவதியின் குற்றச்சாட்டினால் கோபமடைந்தார் அரசர். ஆனால் அதை அடக்கிக் கொண்டார். அவள் கூற்று புனைந்துரைக்கப் பட்டதா அல்லது உண்மையிலேயே அவள் அறிவாளியா என்பதைச் சோதிக்க ஒரு பரீட்சை வைத்தார். ''என் செல்வத்தின் அளவை உள்ளது உள்ளபடியே உரைக்க வேண்டும். சொன்னால் உனக்கு விடுதலை'' என்றார். மூன்று நாள் தவணை கேட்டாள் பத்மாவதி. அப்படியே அனுமதித்த அரசர் அந்த மூன்று நாளும் அவளுக்கு எந்த ஆகாரமும் கொடுக்கக் கூடாது என்று கட்டளை யிட்டார். நான்காம் நாள் காலை அவள் முன் உணவு பரிமாறப்பட்டது. அப்போது அவள் மன்னரைப் பார்த்து, ''அரசே உங்கள் செல்வம் எத்தனையானாலும் சரி, இந்த ஒருவேளைச் சாப்பாட்டுக்கு அது ஈடாகாது'' என்றாள்.

மன்னர் அவளது ஆழ்ந்த புலமையினைப் பாராட்டி அவளைத் தம் மருமகளாக்கிக் கொண்டார். அதோடு தனது இடது கண்ணைப் பயன் படுத்தத் தவறாமல் எச்சரிக்கும் பொறுப்பையும் அவளிடம் ஒப்படைத்தார்.

புலிக் கட்டான்



நம் நாட்டில் விளையாடப்படும் பிரபலமான விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று. ஆறு யானைகளைக்கொண்டு ஒரு புலியை வேட்டையாட வேண்டும். ரொம்பவும் சுவாரசியமான விளையாட்டு. ஆறு யானைக்கு ஆறு ஒரு பைசா நாணயங்களையும் புலிக்கு ஒரு இரண்டு பைசா நாணயத்தையும் வைத்துக் கொண்டு விளையாட ஆரம்பிக்கலாம். இந்த விளையாட்டை இரண்டுபேர்தான் விளையாட முடியும்.

மேலே காட்டியுள்ளபடி தரையிலோ அல்லது அட்டையிலோ பெரிதாக வரைந்து கொள்ளுங்கள். முதலில் புலி (2 ந. பை.) ஏதாவது ஒரு காலி வட்டத்துக்குள் இறங்க வேண்டும். யானைப்பாகன் தன்னிடமுள்ள யானைகளில் ஒன்றை (1 ந. பை.) ஒரு வட்டத்துக்குள் கொண்டு வந்து நிறுத்துவான். அடுத்த கட்டத்தில் புலி நகரப் பார்க்கும்—அதாவது தன் அண்டையிலுள்ள ஏதாவது ஒரு வட்டத்துக்குக் கறுப்புக் கோட்டின் வழியாக. உதாரணமாக புலி முதலில் 4-ல் இறங்கி இருக்கிறதென்றால் அது 1,3,5,7, ஆகிய வட்டங்களுக்குப் போகலாம். புலி நகர்ந்ததும் பாகன் அடுத்த யானையை ஒரு காலி வட்டத்துக்குள் இறக்க வேண்டும். இப்படியே புலி பதுங்கப் பதுங்கப் பாகன் ஒவ்வொரு யானையாகக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். ஆறு யானைகளும் களத்துக்குள் (கட்டானுக்குள்) வரும்வரை யானைகளை நகர்த்தக் கூடாது. புலி மட்டும்தான் நகர்ந்து கொண்டிருக்க வேண்டும். பிறகு தடவைக்கு ஒரு யானையைத்தான் காலியான வட்டத்துக்குள் நகர்த்த வேண்டும். தவிர, புலியினால் பாய முடியும். யானையினால் பாய முடியாது-கூடாது. உதாரணமாக புலி 2-ல் இருக்கிறது. 3-ல் ஒரு யானை இருக்கிறது. 4-வது கட்டம் காலி என்றால் புலி 3-ல் உள்ள யானையைத் தாண்டிப் போய் 4-ல் உட்காரலாம். அப்போது 3-ல் உள்ள யானையை வெட்டி விட்டதாக அர்த்தம். இரண்டு யானைகளைப் புலி வெட்ட முடியாது. யானைகள் இறங்கும்போதே கூடப் புலி பாய்ந்து வெட்டலாம். ஒரு யானையை வெட்டிய உடனே புலிக்குவெற்றி என்று கொண்டு ஆட்டம் முடிய வேண்டும்.

அதேபோல் புலியினால் நகரவோ தாண்டவோ முடியாதபடி யானைகள் அதை வளைத்துச் சூழ்ந்து கொள்ளும் நிலையில் யானைகளுக்கு வெற்றி.

புரிந்தது

வாதூலன்

வீடு சலனமற்று இருந்தது.

சிவராமன் முகம் சிவக்க ஏதோ படிப்பது போன்ற மும்முரத்தில் ஆழ்ந்திருந்தான். பூஜை உள்ளில் கவிழ்ந்து படுத்த வண்ணம் விஜயா விசும்பிக் கொண்டிருந்தாள். லீலா கைவிரலைக் கடித்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தாள்; தன்னால் தானே இவ்வளவும் என்ற எண்ணம் எழுந்து எழுந்து அவளை வதைத்துக் கொண்டிருந்தது.

லீலா சிவராமனின் செல்லத் தங்கை. சிறு வயது முதலே சிவராமனுக்கு அவளிடம் மிகுந்த பாசம் உண்டு. சென்னையில் ஐந்தாம் படிவம் படித்து முடிந்தவுடன் இருவருமே பிரிய நேரிட்டது.

அவர்கள் தகப்பனார் தியாகராஜனுக்கு அப்போதுதான் ஓய்வு பெறும் காலம். திருச்சியில் சின்னக் கிராமமொன்றில் சொந்த வீடும் நில புலங்களும் இருந்தன. இனிமேல் வாடகை கொடுத்துக் கொண்டு சென்னையில் இருப்பது அனாவசியம் தானே என்று நினைத்துக்கொண்டு அவர் கிளம்பி விட்டார்.

சிவராமனுக்கு உத்தியோக சம்பந்தமான பயிற்சி நடந்து கொண்டிருக்கும் தருணம். அது முடிந்த பிறகு ஓர் இடத்தில் நியமனம் செய்வார்கள். லீலாவுக்கு இனி அண்ணாவுடன் இருக்க முடியாது என்று தெரிந்து போயிற்று. இருந்தும் வேண்டுமென்றே அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள். சிவராமனுடன் தான் இருப்பேனென்று முரண்டினாள். தியாகராஜன் அவளைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

அப்பா அவ்வளவு கோபித்துப் பேசி லீலா கண்டதில்லை. அடங்கி விட்டாள். கிராமத்துக்குப் பெற்றோர்களுடன் போய் விட்டாள்.

அந்த இடைக்காலத்தில் சிவராமன் வாழ்க்கையில் இயல்பான மாறுதல் ஏற்பட்டது. அவனுக்குத் திருமணமாயிற்று; விஜயாவின் கரம் பற்றினான். அந்தத் திருமணத்தின்போது எல்லாரைக் காட்டிலும் மிகவும் உற்சாகமடைந்தவள் லீலாதான். 'மன்னி மன்னி' யென்று வளைய வளைய வந்தாள். விஜயாவும் நல்ல கெட்டிக்காரி. யாரையும் அனுசரித்து இதமாகப் போகும் சுபாவம் அவளிடம் இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. புடவை நகை ஆகிய பல விஷயங்களில் அவளுடைய ருசியும் எண்ணமும் லீலாவோடு ஒத்திருந்தன. இரண்டு பேர்களும் சேர்ந்தால், இந்த உலக நினைப்பே இல்லாமல் பேசிக்கொண்டு பொழுதைக் கழிப்பார்கள். அது போன்றதொரு சந்தர்ப்பம் வருஷத்துக்கு மூன்று தடவை ஒவ்வொரு விடுமுறையின் போது மட்டும் வாய்ப்பதுதான் லீலாவின் குறை. நிரந்தரமாக இருக்கும் வாய்ப்பு கிட்டாதா என்று ஏங்கினாள்.

பி. யு. ஸி.தேர்வு பெற்று, பட்டப் படிப்புக்கான கல்லூரியைத் தேர்ந்தெடுக்கும் போது தான் அவளுடைய நெடுநாள் ஏக்கத்துக்கு விடிவு பிறந்தது. பழைய கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. இருக்கும் வேறு சில கல்லூரிகளோ அவர்கள் வசிக்கும் இடத்துக்கு வெ; தொலைவிலிருந்தன.

"சரி! மெட்ராசில் சேர்த்து விடுகிறது. என்ன?" என்றார் தியாகராஜன் மனைவியைப் பார்த்து. அம்மா சம்மதம் தெரிவிப்பதற்கு முன்பு முந்திக் கொண்டாள் லீலா.

"சென்னைக்குப் போவதில்தான் எனக்கும் இஷ்டம். அண்ணா, மன்னி வேறு இருக்கிறார்கள்!" என்று மகிழ்ச்சி பொங்கக்கூறினாள்.

ஆனால் தியாகராஜனின் மனைவிக்கு இதில் அவ்வளவாகச் சம்மதம் இல்லை. வயது வந்த பெண்ணைப் புது மணத் தம்பதிகளிடம் விட்டு வைப்பதை அவளது அநுபவப்பட்ட மனம் விரும்பவில்லை.

தியாகராஜன் மனைவியின் அபிப்பிராயத்தை இது விஷயத்தில் மதிக்கவில்லை. மறு தினமே லீலாவை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போய்க் கல்லூரியில் சேர்த்து விட்டார். லீலாவுக்குப் பல புத்திமதிகள் கூறிவிட்டுத் திரும்பினார்.

நினைப்புக்கும் நடப்புக்கும் பெரும் வித்தியாசம் இருப்பதை நாளடைவில் உணர்ந்து கொண்டாள் லீலா. பத்து நாட்கள் அண்ணாவிடம் விடுமுறைக்கென வந்து தங்குவதற்கும் சற்று நிரந்தரமாகப் படிப்புக்கென்றே இருப்பதற்கும் உள்ள வேற்றுமையை அவள் இப்பொழுதுதான் அறிந்தாள்.

ஒரு நாள் பரீட்சைக்கு வெகு உற்சாகமாகப் படித்துக் கொண்டிருந்தாள் லீலா. அன்றைக்குப் பார்த்து மன்னியின் பிறந்தகத்து உறவினர்கள் வந்திருந்தார்கள். வயதான அம்மாள், நடுத்தர மாது, குழந்தைகள் ஆகிய பெரிய பட்டாளமே வந்து வீட்டை இரண்டாக்கினார்கள். விஜயாவும் லீலாவின் பரீட்சை, நினைப்பே இல்லாமல் அதிகக் கலகலப்பாக இருந்தாள்.

காதைப் பொத்திக் கொண்டு மனத்தைப் படிப்பில் செலுத்த முயன்றாள் லீலா. கஷ்டமாயிருந்தது. எழுந்து அவர்கள் இருக்கும் பக்கம் போனாள்.

"இவள்தான் உன் நாத்தனாரா?" என்று விசாரித்தாள் அம்மாள்.

"ஆமாம்" என்றாள் மன்னி.

லீலாவுக்குச் சிரிப்பு வந்தது. அரை டஜன் குழந்தைகளுடன் அசடு வழிய ஓர் உருவத்தைத் தான் நாத்தனாரென்று இதுவரையில் கற்பனை செய்திருந்தாள். தன்னைப் போல நாகரிக யுவதியும் நாத்தனாரா? நல்ல வேடிக்கைதான்!

"என்ன படிக்கிறே?" என்று லீலாவிடம் வினவிய அம்மாள் பதிலை எதிர்பார்க்காமல்,

''கல்யாணம் செய்ய வேண்டாமோ! ஜாதகத்தை வாங்கிக் கொடேன்'' என்று விஜயாவை விசாரித்தான்.

லீலா பனிச்சென்று நகர்ந்து விட்டாள். 'வேறே வேலை என்ன இவர்களுக்கு? சதா கல்யாணம் கல்யாணம் என்று ஸ்மரணை செய்து கொண்டு! சே!'

அவள் மனம் அவிழ்த்து விட்ட குதிரை போல் எங்கெங்கோ அலைந்தது. திடீரென்று சிறு வயதில் திருவல்லிக்கேணியில் குடியிருந்த சமயம், தன்னுடன் அன்பாகப் பழகிய கிருஷ்ணமூர்த்தியின் உருவம் ஏனோ ஞாபகத்துக்கு வந்தது. அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ? ஆமாம், 'அவரா'வது!

மொத்தத்தில் பரீட்சைக்கு உருப்படியாக எதுவும் தயார் செய்ய முடியாமற் போயிற்று. எல்லாரும் கிளம்பின பிற்பாடு ''இன்றைக்குப் படிக்கவே முடியவில்லை!'' என்று குறைப் பட்டுக் கொண்டாள்.

விஜயாவுக்கு அவள் சொன்னதின் பொருள் புரிந்தும் ''ஏன்?'' என்று கேட்டாள்.

லீலா நேரிடையாகப் பதில் தரவில்லை. ''அப்பா! எட்டு வீட்டுக்குக் கேட்கும்படி பேசினார்களே!'' என்றாள்.

விஜயாவுக்குச் சுருக்கென்று பட்டது.'' என்ன செய்யறது! உனக்குப் பரீட்சையென்பது தெரிந்திருந்தால் எங்களுக்குமட்டும் கேட்கும்படி ரகசியமாகப் பேசிக் கொண்டிருப்போம்!'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டாள். அநாவசியமாகப் பேச்சை வளர்க்க விரும்பவில்லை.

ஆனால் லீலாவுக்கு அது கூடத் தாளமுடியாததாயிருந்தது. அவளுடைய ஆத்திரமும் கோபமும் படிப்பின் மீதுதான் தாவின. 'சட்! சனியன் ஒன்றுமே ஏற மாட்டேனென்கிறது!' என்று புத்தகத்தை விசியெறிந்தாள்.

''பார்த்துப் பார்த்து! இவள் மேல் விழத் தெரிஞ்சதே!'' என்று கூறியபடி சிவராமன் வந்தான். பின்னால் திரும்பி ''என்ன ரொம்ப சங்கோஜப்படறே! வாயேன்'' என்றான்.

லீலா திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். அட யார் இது! அவரா? அண்ணாவின் வார்த்தைகள் ஊர்ஜிதம் செய்தன.

''என்ன கிட்டு! அடையாளம் தெரியறதா? பழைய லீலா இல்லை இப்போ. 'காலேஜ் ஸ்டூடண்ட்!' அவளுடன் இங்கிலீஷில் பேசு, பார்ப்போம்!''

நாணம் கவ்வ உள்ளே ஓடிவிட்டாள் லீலா. கிருஷ்ணமூர்த்தியின் வரவால் நிலைமையே மாறி விட்டது. சிறிது நேரம் பேசிய பின் லீலாவிடமும் தனிப்படச் சொல்லி விட்டுக் கிட்டு விடைபெற்றான்.

அன்றைக்கு விவரமில்லாத உறுத்தல் குடைந்தது. மன்னியின் நிஷ்டூரம் கலந்த பேச்சினால் ஏற்பட்ட ரோஷமும், கிருஷ்ண மூர்த்தியின் வரவால் முளைத்த ஆனந்தமும் கலந்த உறுத்தல்!

போகப் போகத் தான் எண்ணிய அளவுக்குக் குதூகலமாக இருக்க முடியவில்லையே என்று தோன்றியது லீலாவுக்கு. மிக மிக லேசாக அவளுக்கும் மன்னிக்கும் முரண்பாடு ஏற்படும் சமயங்களில் மன்னி கடிந்தால் கண்களில் நீர் துளித்து விடும். ஊரில் தினம் தினம் அம்மாவின் கோப வார்த்தைகளையும் எரிச்சல் மொழிகளையும் கேட்டுப் பழக்கப்பட்ட தன்னால் இதைப் பொறுக்க முடியவில்லையே என்று அவளே நினைத்து ஆச்சரியப்படுவாள்.

என்றைக்காவது ஒரு நாள் ரேடியோவில் நல்ல நிகழ்ச்சி இருக்கும். ஆசையுடன் விஜயா திருப்பும்போது, ''எனக்குப் படிக்கணும், மன்னி'' என்பாள் லீலா.

''என்ன லீலா! அரை மணி நேரம் வைக்கப் படாதா?'' என்று கேட்டு விட்டு, கணவனை நோக்குவாள் விஜயா.

சிவராமன் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டு விழிப்பான். பொதுவாக முக்கால் வாசி லீலா பக்கம்தான் சாய்வான். ''போதும் போதும்! எப்பவும் என்ன பாட்டு?'' என்பான். சில தடவைகள் மனத்தில் இன்ப நினைவுகள் தலைதூக்கும்போது, மனைவிக்குப் பரிந்து கொண்டு வருவான்.

''சும்மா படித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே லீலா. சொல்லிவிட்டேன். உன் உடம்பைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அப்பா போயிருக்கிறார்.''

லீலாவுக்குத் தமையனின் அந்தச் செய்கை கூடப் பெரிய தோல்வி கிடைத்தாற் போன்ற அவமான உணர்வை ஏற்படுத்தும். எவ்வளவு மெள்ள வைத்தாலும் ''மெதுவாக வையேன்'' என்று கூறுவாள்.

முழுக்க முழுக்க இந்த வீட்டு இடைஞ்சல்களை அடைத்து விடாமலிருக்கக் கிருஷ்ண மூர்த்தியின் நட்பு பெரிதும் உதவி செய்தது. அந்த முதல் நாள் அறிமுகத்துக்குப் பிறகு பொது இடங்களில் சந்திக்கும்படி நேர்ந்தது. தானாகப் பேசியும், அவரிடமிருந்தே பேச்சை வரவழைத்தும் சிநேகத்தை வளர்த்துக் கொண்டாள் லீலா.

மாதங்கள் உருள உருளச் சிவராமன்,— விஜயா ஆகிய இரண்டு பேருமே லீலா சம்பந்தப்பட்ட எதையும் கசப்பு மாத்திரையை



விழுங்குவது போன்ற ஒரு பாவத்தில் நடந்து கொண்டார்கள். வெளிப்படையாகச் சொல்லிக் காட்டா விட்டாலும் தன்னால் அவர்கள் அனுபவிக்கும் சங்கடங்களை உணர்ந்துதான் இருந்தார்கள். ஆனால் அது போன்ற நேரங்களில் வேண்டுமென்றே முரண்டு நின்று தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம்தான் மேலோங்கி யிருந்தது லீலாவுக்கு.

நத்தையாக நாட்கள் ஊர்ந்தன. அப்படித்தான் பட்டது மூன்று பேருக்குமே. இந்த நிலையில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

விஜயாவின் சிநேகிதி யொருத்திக்குத் திருமணம்; அவசியம் விஜயாவையும் சிவராமனையும் வரவேண்டுமென்று வற்புறுத்தி அழைத்து விட்டுப் போனாள். விஜயாவும் சம்மதித்தாள்.

அன்று காலையில் ''நாம் போகலாமே! லீலா நேரே அங்கிருந்தே காலேஜுக்குப் போகட்டுமே!'' என்று கணவன் சிவராமனிடம் கூறினாள் விஜயா.

''ரொம்ப அழகுதான்! காலேஜ் எங்கே இருக்கு, தாம்பரம் எங்கே இருக்கு! சாயந்திரம் 'ரிசப்ஷனுக்கு'ப் போகலாம்!''

விஜயா அரை மனத்துடனேயே ஒத்துக் கொண்டாள். வேறு என்ன செய்வது? லீலாவை நோக்கி, ''சாயந்திரம் சீக்கிரமே வந்து விடு! என்ன?'' என்றாள்.

''ஆகட்டும்!''

மாலையில் விரைவிலேயே டிபன் காப்பியெல்லாம் தயார் செய்து விட்டு நன்கு அலங்கரித்துக் கொண்டாள் விஜயா. சிவராமன் வந்ததும், ''போகலாமா?'' என்று கேட்டான்.

''லீலா!''

பட்டென்று ஞாபகம் வந்தது. இன்னும் ஏன் வரவில்லை? மணி இப்போதே ஐந்தாகி விட்டது; எப்போது கிளம்பி எப்போது போய்ச் சேர்வது?

''சாவியை அடுத்த வீட்டில் கொடுத்து விட்டு நாம் போகலாமே!'' என்றாள் விஜயா ஆசையுடன்.

''எனக்கு விருப்பமில்லை! அப்புறம் உன் இஷ்டம்!''

முணுமுணுவென்று எரிச்சலுடன் காத்திருந்தாள் விஜயா. லீலா வருகிற வழியாகக் காணோம். மணி ஐந்தரை ஆறு என்று ஓடிக் கொண்டிருந்தது. அவள் நிலையை உணர்ந்த சிவராமன் ''நீ வேண்டுமானால் போயிட்டு வாயேன்'' என்றான் கனிவுடன்.

''ம்'' என்று பதில் கொடுத்தாள் விஜயா அசட்டையாக. நான் மட்டும் போவதற்கு இவர் சொல்ல வேண்டுமாக்கும்!

திரும்பிக் கடிகாரத்தைப் பார்த்தாள். இனிமேல் போவதாவது! வெறுப்புடன் ஆடைகளைக் களைந்தாள். 'இது வேறு உறுத்திக் கொண்டு' என்று முனகினாள்.

எட்டு மணிக்கு வந்தாள் லீலா. அவள் முகத்தில் மகிழ்ச்சி பரவிக் கிடந்தது. ''அண்ணா இன்றைக்குக் காலேஜிலே நாடகம். எவ்வளவு ஜோராயிருந்தது தெரியுமா?'' என்று உற்சாகத்துடன் சொல்லப் போனவளைக் குறுக்கிட்டுத் தடுத்தாள் விஜயா.

''காலேஜுமாச்சு. மண்ணுமாச்சு! ஏன் இவ்வளவு நேரம்?''

அழுகைதான் முட்டிக் கொண்டு வந்தது லீலாவுக்கு.

''அடடே! உங்கள் சிநேகிதிக்குக் கல்யாணம் இல்லை? மறந்தே போய் விட்டேன், மன்னி!'' என்றாள் லீலா. வாஸ்தவத்திலேயே அவளுக்கு ஞாபகம் இல்லை. ''ஏன்? நீங்கள் போயிருக்கலாமே!''


விஜயாவுக்கு அந்தப் பதிலைக் கேட்டு எரிச்சல்தான் வந்தது. ''அதுதான் பாக்கி! வயசு வந்த பெண்ணை விட்டுவிட்டு வெளியே போனவள் என்ற பேச்சை வாங்கிக் கட்டிக்கவா!''








மாடல் 0724 : 6-வால்வ், ஆல்-வேவ், 8 பாண்ட்
முழு பாண்ட் ஸ்ப்ரெட், ஏஸி அல்லது ஏஸி/டிஸி
(இரு மாடல்கள்)
மற்றும் மாடல் 0737: (டிரை பாட்டரி) 7-வால்வ்
murphy radio
Delights the home!
மாடல் 0374 :
6 வால்வ் 9 வகை செயல் திறனுடன்
ஆல்-வேவ், 4 பாண்ட்
பியானோ-கீ ஸ்விட்ச், ஏஸி அல்லது
ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)

மர்பி ரேடியோ









என்று உதட்டோடு முணுமுணுத்தாள். பிறகு உள்ளே சென்று சாப்பிடத் தட்டுவைத்தாள்.

சிவராமன் அமர்ந்து புசிக்க ஆரம்பித்தும் லீலா வரவில்லை. ஏதோ காரியமாய் இருந்தாள் அவள்.

''வாயேன் சீக்கிரம்! கல்யாணத்துக்கு ஆசையாய்ப் போகாமலிருக்கத்தான் வழி பண்ணியாச்சு! காரியத்தைச் சுருக்க முடிக்கறத்துக்காவது உதவி பண்ணலாமோல்லியோ!'' என்று குரல் கொடுத்தாள் விஜயா.

சிவராமன் ஆரம்பத்திலிருந்தே மௌனமாக நடப்பவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். விஜயாவின் பேச்சு அவனை ஆத்திரமடையச் செய்தது. வெளிப்படையாய் லீலாவை அவள் சுட்டிக் காட்டியவுடன் அவனால் பொறுக்கவே முடியவில்லை.

''நானும் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்! என்ன வாய் ரொம்ப நீளுகிறது!'' என்று கை ஓங்கி விட்டான் சிவராமன்.

விஜயா அதிர்ந்து போனாள். அடக்கி வைத்திருந்த தாபம் எல்லாம் அழுகையாகப் பீரிட்டது. தொப்பென்று உட்கார்ந்து கண்ணீர் விடலானாள். ''நான் அப்படி என்ன சொல்லி விட்டேன்! ஒரு இடம் போயிருக்கிறேனா? ஒரு சினிமா, ஒரு நாடகம்...ஏதோ ஆசையாகக் கூப்பிட்டதுக்குக் கூட—''

''எங்கேயும் போக வேண்டாம்! அதனாலே ஒன்றும் குடி முழுகி விடலே!'' என்று தட்டை விசிறியெறிந்து விட்டு எழுந்தான் சிவராமன். டணாரென்ற ஓசை யெழுந்து அடங்கிற்று.

அதற்குப் பின் வீடு சலனமற்று இருந்தது.

ஒரு வாரம் சென்றது. மன்னி இன்னும் வீம்பை விட்டு முன் போல் சகஜமாகப் பழகவில்லை. லீலா அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தனக்கென்று சிருஷ்டித்த கனவு உலகம் ஒன்றில் மயங்கிப் போயிருந்தாள். கிருஷ்ணமூர்த்தியின் பரிச்சயம் அதிகப்பட்டதே அதற்குக் காரணம்.

அன்று பிற்பகல் யாரோ முக்கியமான ஒருவரின் மறைவு குறித்துக் கல்லூரி ஒருநாள் மூடப்பட்டது. வெளியே வந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள் லீலா.

''என்ன இங்கே இந்த நேரத்தில்!'' என்ற குரல் கேட்டது. லீலா நோக்கினாள். கிருஷ்ணமூர்த்தி நின்று கொண்டிருந்தான்.

''இன்று லீவ்'' என்றாள் சுருக்கமாக.

''சௌகரியமாகப் போச்சு! நான் இப்போது சினிமாவுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். துணை இல்லையே என்று தவித்துக் கொண்டிருந்த எனக்கு....'' சொல்லிவிட்டு ஆசையுடன் அவளையே பார்த்தான்.

லீலா தயங்கினாள். கிருஷ்ணமூர்த்தியுடன் செல்லக் கூச்சப்படவில்லை. அது விஷயத்தில் அவள் உறுதிப் படுத்திக் கொண்டு விட்டாள். அப்பா, அண்ணா — ஏன் குடும்பத்துக்கே — தெரிந்தவராதலால் தன் எண்ணம் நிறைவேறும் என்ற திடநம்பிக்கை அவளுக்கு இருந்தது. திரும்பும் போது நேரமாகி விடுமே என்றுதான் யோசித்தாள். மன்னி வேறு முன் மாதிரி இல்லை....

''விருப்பமில்லா விட்டால் வேண்டாம்!''

நொடியில் தீர்மானித்து விட்டாள் லீலா. இது போன்ற சந்தர்ப்பம் மறுபடியும் எப்போது வாய்க்கப் போகிறதோ?

ஆனந்தமாக மூன்றரைமணி நேரம் கழித்துவிட்டு வீடு திரும்பும் போது, சோதனையாக, பஸ் கிடைக்கவில்லை..

''டாக்ஸியில் கொண்டு விட்டு விட்டுப் போகட்டுமா? நேரமாகிறதே!'' என்றான் கிருஷ்ணமூர்த்தி. அவனும் கூடவே லீலாவுக்காக இருந்தான்.

''உம்'' என்று கூறினாள். லீலாவுக்கு வேறு வழி தெரியவில்லை.

தெரு முனையிலேயே இறங்கி நன்றி தெரிவித்துவிட்டு நடந்தாள் லீலா. மார்பு 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது.

''எங்கேடி போயிருந்தே! மத்தியானமே காலேஜ் விட்டாச்சாமே! ஊரைச் சுற்றிவிட்டு வந்தால், ஏதாவது நடந்தால் பதில் சொல்ல வேண்டியவர்கள் நானும் உன் அண்ணாவும்தானே?''

''ஏன் மன்னி, இப்படிப் பேசுகிறீர்கள்? நான் எங்கே போயிடுவேன்!'' என்ற வார்த்தைகள் அழுகையில் உள்ளடங்கிப் போயின. ஆத்திரமும் கண்ணீரும் ஒரே சமயத்தில் குமுறிக் கொண்டு வந்தன லீலாவுக்கு. ஒரு நாள் — ஒரே ஒரு நாள் — தனக்குப் பிடித்தமானவருடன் சினிமா பார்த்துவிட்டு வந்தால் எத்தனை ஆர்ப்பாட்டம் செய்கிறாள் மன்னி! 'இது கூடவா மன்னி, உங்களுக்குப் பொறுக்கவில்லை?' என்று கேட்க நினைத்தாள்.

ஆனால் கேட்கவில்லை. கேட்க எண்ணிய கேள்வி உள்ளுக்குள்ளேயே பதுங்கிக் கொண்டது. அதன் அர்த்தம் பளீரென்று அவளையே திருப்பித் தாக்கியது. மனத்தால் நினைத்துக் கொண்ட அளவிலேயே இப்படித் தான் வருந்திக் கோபம் கொண்டால், மனத்தால் நினைந்து மணத்தால் பெற்று வாழ்வால் அனுபவிக்கத் துடிக்கும் மன்னிக்கு எப்படி யிருக்கும்! எவ்வளவு நாட்கள் உட்கார்ந்திருக்கிறாள்? அப்போதெல்லாம் ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்லத் தோன்றிற்றா? முரட்டுத்தனமாக நடந்து கொண்டோமே! திடீரென்று மன்னியின் நிலை குறித்துப் பச்சாத்தாபம் சுரந்தது. தன்னுடைய நடத்தைக்குச் செய்கையால் பரிகாரம் காணத் துடித்தாள். லீலா


வாய்ப்பு தானாக ஏற்பட்டது. லீலாவுக்கு 'செலக்ஷன்' கிடைக்கவில்லை. மார்ச் மாதம் கல்லூரி முடிந்த உடனேயே லீலா கிளம்பி விட்டாள் திருச்சிக்கு.

''ஏன் லீலா! இங்கேயே இருந்து படிக்கப் போகிறேன் என்றாயே?'' என்றாள் விஜயா.

''இல்லை மன்னி! நான் வரேன்!''

''என் மேல் கோபம்! அதனால்தான்'' என்று கூறினாள் விஜயா. எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. ரயிலடியிலும் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டாள்.

''அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்! சரிதானே?'' என்றாள் லீலா சிரிப்புடன். புழுக்கமின்றித் தாம்பத்தியக் காற்றை நன்றாக அனுபவிக்கட்டும் மன்னி என்று எண்ணினாள். தான் இங்கு வருவது குறித்து அம்மா அவ்வளவு மகிழ்ச்சியடையாததின் காரணம் இப்போதுதான் புரிந்தது அவளுக்கு. 'முதலில் அண்ணாவுக்கு மனைவி. அப்புறம்தான் எனக்கு மன்னி!' என்று லீலா தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.








1. குமாரி ஜெயந்தியின் பரத நாட்டிய அரங்கேற்றம் ஏப்ரல் 2-ந் தேதி மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபை ஹாலில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

2. மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி ஹாலில் ஏப்ரல் 2-ந் தேதி நடைபெற்ற மைசூர் சௌடையாவின் பொன் விழாவில் திரு சௌடையா வரலாற்று நூலை வெளியிட்டார் அமைச்சர் திரு பக்தவத்ஸலம். மந்திரி அவர்களிடமிருந்து நூலாசிரியர் திரு எல்லார்வி வெள்ளித் தட்டைப் பெறுகிறார்.


3. கல்கத்தா ரவீந்திர சரோவர் ஸ்டேடியம் ஹாலில் ஒன்பது வயதுச் சிறுவன் நரசிம்மதாஸின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. இச் சிறுவன் கல்கத்தா ஸ்ரீ டி. ஜி. சர்மா அவர்களின் புதல்வன்.

4. சென்ற மாதம் திரு வி. க. நகரில் திரு ஆர். வேங்கடராமன் தேசிய நல சங்கத்தை அமெரிக்க உதவி கான்சல் மிஸ்டர் ஜே. ஆர். கிரஹாம் ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவத்துக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தலைமை வகித்தார்.



'தரத்தின் சின்னம்'

இதைப் பாருங்கள்



பயர்ஸ்டோன் டயர்களில் மட்டுமேயுள்ள இது உங்களுக்கு அதிக
படியான பாதுகாப்பிற்கும் நம்பிக்கைக்குமான உத்திரவாதச் சின்ன

உங்களிடம் ஒரு மோட்டார் ஸ்கூட்டர், கார் டிராக்டர் அல்லது டிரக்கிருந்தாலும் சரி, அல்லது உங்கள் மேற்பார்வையில் ராட்சஸ மண் அகற்றும் இயந்திரங்களிருந்தாலும் சரி, உங்களுடைய தேவைகளுக்குத் தகுந்த ஒரு பயர்ஸ்டோன் டயர் இருக்கிறது. ஒவ்வொரு டயரிலும், நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டதும் கூடுதலான பாதுகாப்பிற்கும் நம்பிக்கைக்கும் சின்னமான பயர்ஸ்டோனின் 'தரத்தின் சின்னம்' பொரிக்கப்பட்டுள்ளது.

பயர்ஸ்டோனைத் தேர்ந்தெடுப்பதால் உங்களுக்குக் கிடைப்பவை

- **பாதுகாப்பு** — பயர்ஸ்டோனுக்கேப் பிரத்தியேகமான டிரெட் டிசைன் மற்றும் டயர் அமைப்பு உங்களுக்குக் கூடுதலான நிறுத்தும் சக்தியையும் ரஸ்தா அபாயங்களிலிருந்து பாதுகாப்பையும் அளிக்கின்றன.
- [**சிக்கனம்** — பயர்ஸ்டோனின் நீடித்து [உழைக்கும் டிரெட் இந்தியாவில் நிலவும் உழைப்புச் சூழ்நிலைகளுக்கெனப் பிரத்தியேகமாகக் கலை செய்யப்பட்டது. ஒரிஜினல் டிரெட் மூல நீங்கள் நிச்சயமாக ஒவ்வொரு ரூபாய்க்கு கூடுதலான கிலோ மீட்டர்கள் ஓட்ட முடிகிறது

ரீடிரெட் செய்ய முடியும் — உங்கள் பயர்ஸ்டோன் டயர்களைப் பேணுங்கள். அவற்றி மீது தாங்க முடியாத பாரத்தை ஏற்றி தாறுமாறாக உபயோகிக்காதீர்கள். அவை மறுபடியும் மறுபடியும் ரீடிரெட் செய்வதற் லாயக்காக இருக்கும்.



பயர்ஸ்டோன் - இன்று சிறந்தவை—நாளை மேலும் சிறந்தவை



நந்தவனம்

15. வக்கீல் வருகிறார்!

சோமு

"செல்வந்தர்களில் மூன்று விதம் உண்டு" என்று ஆரம்பித்தார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

"அது எப்படி?" என்று ஆவலோடு கேட்டார் வல்லாளவேலர்.

"அவர்கள் சந்தோஷமாக இருப்பதோடு, அவர்களைச் சேர்ந்த உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லாரையும் சந்தோஷமாக வைத்திருக்கக் கூடிய பண்பு உள்ளவர்கள் ஒரு வகை. இவர்கள் மிகவும் அபூர்வம்!" என்றார் திவான்பகதூர்.

"வக்கீல் ஐயா! நீங்கள் சொல்வது ஆயிரத்தில் ஒரு வார்த்தை!" என்றார் வல்லாளர்.

"அவர்கள் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களைச் சேர்ந்தவர் உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லாரையும் கசக்கிப் பிழிவார்கள். இப்படிப்பட்ட சீமான்கள் இரண்டாவது வகை. இவர்களில் பலரைப் பல இடங்களில், பல ஊர்களில் பார்க்கலாம்!"

"மெய்யான பேச்சு வக்கீலய்யா!" என்று இதையும் ஆமோதித்தார் வல்லாள வேலர்.

"தாங்களும் சந்தோஷமாக இருக்க மாட்டார்கள். தங்களைச் சேர்ந்தவர்களையும் சந்தோஷமாக இருக்க விடமாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் மூன்றாவது வகை! இவர்களைப் பார்த்திருக்கிறீர்களா நீங்கள்?" என்று கேட்டார் திவான் பகதூர்.

"பார்த்திருக்கிறேன். வக்கீலய்யா! பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேனே தினசரி!" என்றார் வல்லாளர்.

"இல்லை. நீங்கள் சொல்வது தவறு. நம்முடைய ஜமீந்தார் அப்படியில்லை. அவர் இந்த மூன்றாவது வகையையும் சேராத ஒரு புது விதம்! அது நாலாவது வகை!" என்றார் வக்கீல்.

"அது என்ன நாலாவது வகை?"

"சந்தோஷம் வந்தது என்றால் அப்படியே கூத்தாடுவார்கள். தங்களைச் சேர்ந்தவர்களையும் கூத்தாட வைப்பார்கள். கோபம் வந்தது என்றாலோ, தங்களையும் வதைத்துக் கொள்வார்கள். மற்றவர்களையும் வதைத்து வாங்கிவிடுவார்கள்!"

வல்லாள வேலர் அப்படியே கையைத் தட்டிப் பலமாக ஆமோதித்துக் கொண்டே நாற்காலியில் குதித்துக் குதித்துக் குதூகலித்தார்!

"என்ன வேலரே! ரொம்ப பலமாக ஆமோதிக்கிறீர்களே! இந்த நாலு வகையான முதலாளிமார்களில் நீங்கள் எந்த வகை? அதைச் சொல்லுங்கள்!" என்று மெதுவாக ஒரு கேள்வியைப் போட்டார் வக்கீல்!

"நானா? என்ன வக்கிலய்யா, என்னையும் சீமான் ஆக்கி விட்டீர்களா? என்னையும் செல்வந்தர் வரிசையிலே சேர்த்து விட்டீர்களா?"

"வல்லாளரே! வேணுலிங்கம் என்ன சொன்னான் உங்களைப் பற்றி? மறந்து விட்டேனே!"

வேணுலிங்கம் என்ற வார்த்தை வந்ததும், வல்லாள வேலர் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். முகத்தில் குழப்பம் தெரிந்தது.

"வேணுலிங்கமா? அவன் என்னசொன்னான் என்னை?"

"முருகபாண்டிபுரத்தின் முடிசூடாமன்னர் என்றல்லவா அழைத்தான் உங்களை அந்தக் கடிதத்திலே?"

கடிதத்தை ஞாபகப் படுத்தியதும் வல்லாள வேலருக்கு முகம் சிவந்தது!

"வக்கீலேயா! அந்தப் பயலை நினைக்கும் போதே—"

"பயமாக இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தார் வக்கீல். வல்லாள வேலருக்கு முகம் மேலும் சிவந்து விட்டது.



''வக்கீலையா! நான் உங்களை நேராக ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுவீர்களா?''

இப்படிக்கேட்டார் வல்லாள வேலர். வக்கீல் சொல்லுவார்:

''நேராகவா? நீங்களா? அப்படியும் கேட்கப் போகிறீர்களா? நீங்களா? கேளுங்களேன்!''

''வக்கீலையா! இந்தச் சுடலையாண்டியும் வேணுவும் யாரென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? என்னிடம் மறைக்காமல் சொல்லுவீர்களா?''

திவான் பகதூர் செந்தில்நாயகம் சிரித்துக்கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

''ஐயா 'வேலரே! சரியான கேள்வி கேட்டீர்கள்! இந்த வேணுலிங்கத்துக்கும் எனக்கும் ஏதாவது இரகசிய உடன்படிக்கை உண்டா என்றே நீங்கள் கேட்டிருக்

கலாமே? அதுதானே உங்கள் சந்தேகம்?''

வக்கீல் இப்படிச் சொன்னதும் வல்லாள வேலருக்கு முகத்தில் ஒருவிதமான சங்கடம்



விம்மியது. அதைச் சமாளித்துக் கொண்டார்.

''அப்படியெல்லாம் இல்லை வக்கீல் ஐயா! உங்களுடைய சாமர்த்தியத்தினால் எதையும் கண்டுபிடித்து விடுவீர்களே! அதனால்தான் கேட்டேன். வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக் கூடாது!''

பனிச்சென்று பதில்சொன்னார் வக்கீல்.

''வல்லாள வேலரே! என்னுடைய தொழில் அப்படி ஐயா! நம்மிடம் எத்தகைய கொலையாளியும், எத்தகைய நயவஞ்சகனும் வருவான்! வேணுவின் கத்தைத் தூக்கிச் சாப்பிட நினைக்கிறவனும் வருவான். வேணுவும் வருவான். எல்லாரும் நமக்குக் கட்சிக்காரர்களாக வருவார்கள்! என்ன செய்ய! நம்முடைய பிழைப்பு அப்படி இருக்கிறது!''

''என்ன? என்ன? வக்கீலையா! அப்படியானால் அந்தக் கொள்ளைக்காரப் பயல் இங்கே வந்தானா? உங்களிடம் உதவி கேட்டு வந்தானா அவன்?''

இவ்வாறு கேட்டார் வல்லாளவேலர்.

''ஆமாம். என்னை வந்து சந்தித்தான். ஆனால் உதவி கேட்டு வரவில்லை! உதவி

செய்யாதீர்கள் என்று சொல்வதற்கு வந்தான்!''

வல்லாள வேலருக்குத் திகைப்பும் குழப்பமும் அதிகரித்தன!

''வக்கீலையா! என்னை எதற்காக இப்படிக் குழப்புகிறீர்கள்?'' என்று பரிதாபமாகக் கேட்டார் வல்லாள வேலர்! வேணுலிங்கம் வக்கீலிடம் வந்துபோனான் என்ற செய்தியே அவருடைய நாடிகளை ஒடுக்கி விட்டது!

''வல்லாளவேலரே! வேணுலிங்கத்துக்கு யாருடைய உதவிதான் வேண்டும்! சொல்லுங்கள் நீங்கள்! பணம் வேண்டுமா அவனுக்கு, ஊரிலுள்ள பணமெல்லாம் அவனுடைய பணந்தான்! ஆட்களுடைய சகாயம் வேண்டுமா? இந்த மாவட்டத்தில் உள்ள பெரிய பெரிய ஜமீந்தார்கள் எல்லாரும், அவனுக்குச் சகாயம் செய்யக் காத்திருக்கிறார்கள்! யாருக்காவது பயந்து வக்கீல்களை உதவி கேட்பானா, கிடையாது! எதற்கும் துணிந்தபிறகு அவன் யாருக்குப் பயப்பட வேண்டும்! சொல்லுங்கள் நீங்கள்!''

வக்கீல் இப்படிச் சொன்னதும் வல்லாள வேலர் யோசித்துக் கொண்டே மெதுவாகக் கேட்டார்:

''அது சரி வக்கீலையா! உதவி செய்யாதீர்கள் என்று சொல்வதற்கு வந்தான் என்றீர்களே! அது என்ன அப்படி?''

''வேலரே! அவன் என்ன சொன்னான் என்றால், நான் உங்களுக்கு உதவி செய்வது அவனுக்குப் பிடிக்கவில்லையாம்! அப்படிச் செய்யாதீர்கள் என்று சொன்னான்...!''

இப்படிச் சொல்லிக் கொண்டே திவான் பகதூர் சிரித்தார். வல்லாள வேலர் கேட்டார்:

''வக்கீலையா! உங்களுக்கே யோசனை சொல்லக் கூடிய அளவுக்கு வந்துவிட்டதா அந்தப் பயலுடைய பேச்சு! அவ்வளவு தொலைவுக்கு வந்து விட்டானா அந்தப் பயல்!''

பற்களை 'நரநர' வென்று கடித்தார் வல்லாளர்.

''இப்படி அவன் துணிகரமாக நடமாடினால், போலீஸ்காரர்களும் அரசாங்கமும் என்ன செய்கிறது? கொள்ளைக்காரர்களை இப்படி ஊருக்குள் நடமாட விட்டால், பிறகு ஊர் என்ன ஆகும்? இந்தக் கேள்வியைப் போலீஸ்காரர்களிடமே கேட்டு விட்டேன் நான்!''

இப்படிச் சொல்லி ஒரு சுடக்குப் போட்டார் வல்லாளர்!

''போலீஸ்காரர்களையே கேட்டு விட்டீர்களா? பலே, என்ன கேட்டீர்கள் நீங்கள்?''

''வக்கீலையா, போன தடவை நான் இங்கே வந்திருந்த போது—''

''வேணுலிங்கத்தின் கடிதம் இங்கே வந்தது!''

''அதைச் சொல்லவில்லை. நான் இங்கே வந்த போது அங்கே நம்முடைய ஊரில் கடலையாண்டி வந்து விட்டுப் போயிருக்கிறான்!''

''ஆமாம்; அதைத்தான் கடிதத்திலேயே எழுதியிருந்தானே வேணுலிங்கம்!''

''அது சரி வக்கீலையா. அந்தக் கடிதத்தை ஏன் இழுத்துக்கொண்டு வருகிறீர்கள் இப்பொழுது!''

''ஓ! சரி சரி!' அந்தக் கடிதத்தை ஞாபகப்படுத்தினாலே உங்களுக்குக் கோபம் வருகிறதா! சரி. அதை ஞாபகப்படுத்தவில்லை. நீங்கள் மேலே சொல்லுங்கள்!''

''வக்கீலையா! இந்தச் கடலையாண்டி போலீஸ் உடையில் வந்து நம்முடைய வீட்டிலிருந்த ஏலமலைத் துப்பாக்கியைக் கொண்டு போய் விட்டான்!''

''ஓ! அப்படியா! ஏலமலைத் துப்பாக்கியைக் கொண்டு போய் விட்டானா! அதாவது கைத்துப்பாக்கியை!''

''ஆமாம். ரிவால்வரை!''

''ரிவால்வரை! அப்படிச் சொல்லுங்கள். வெறுந் துப்பாக்கி என்று சொன்னால், எனக்குக் கொக்கைச் சுடுகிற நீளமான துப்பாக்கிதான் உடனே நினைவு வருகிறது. இது ரிவால்வர். அதாவது மனிதர்களைச் சுடுவது! கொக்கைச் சுடுகிற துப்பாக்கி இல்லை! சரி, மேலே சொல்லுங்கள்!''

''மேலே என்ன மேலே வக்கீலையா! துப்பாக்கி போய் விட்டது!''

இப்படி ஒரே எரிச்சலோடு சொல்லி விட்டுச் சற்று மௌனமாக இருந்தார் வல்லாள வேலர். அந்த மௌனத்தைக் கலைத்தார் திவான்பகதூர்.

''வல்லாள வேலரே! பிறகு என்ன நடந்தது?'' என்று கேட்டார் வக்கீல் செந்தில்நாயகம்.

''பிறகு என்ன நடந்தது? மறுநாள் இரண்டு போலீஸ்காரர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள்!''

''போலீஸ்காரர்களா? முருகபாண்டிபுரத்துக்கா?''

''ஆமாம். அந்தத் திருட்டுப் பயல்கள்தான் மறுபடியும் மாறு வேஷத்தில் வந்து விட்டார்களோ என்று —''


''பயந்து விட்டீர்களாக்கும்?''

''பயமா! சே சே! கொள்ளைக்காரர்களாக இருக்குமோ என்று யோசித்தேன் முதலில்! பிறகு அவர்களே சொன்னார்கள், தாங்கள் இருவரும் போலீஸ்காரர்களென்று!''

''ஓ! அவர்களே சொன்னார்களா? சரி சரி. என்ன சொன்னார்கள்?''



திரு பி. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் புதல்வர் திரு ராமசுவாமிக்கும், சௌ. பார்வதிக்கும் பம்பாயில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



ஆர்ய வைத்திய பார்மஸி திரு பி. வி. ராமவாரியர் அவர்களின் புதல்வி சௌ. கஸ்தூரி திரு கோபாலன்குட்டியை மணம் புரிந்து கொண்டார்.



யாழ்ப்பாணம் கொழும்புத் துறையைச் சேர்ந்த திரு வே. தங்கவேலுவுக்கும் சௌ சரோஜினிக்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

''துப்பாக்கிகளையும் திருடிக்கொண்டு போய் விட்டு, போலீஸுக்கும் எழுதியனுப்பி விட்டார்களாம் அந்தக் கொள்ளைக்காரப் பயல்கள்!''

''என்ன! என்ன! நீங்கள் போலீஸுக்குச் செய்தி அனுப்புவதற்கு முன்பு அவர்களே அனுப்பி விட்டார்களா?''

''ஆமாம். வக்கீலையா! முருகபாண்டிபுரத்திலே இன்னொர் வீட்டிலிருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளையும் நாங்கள் எடுத்துக் கொண்டு விட்டோம், முறைப்படி நீங்கள் இந்தச் செய்தியைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்று, கடலையாண்டியே போலீஸுக்கு எழுதி விட்டானும்!''

வல்லாள வேலர் இப்படிச் சொல்லிக் கொண்டே மீசையை முறுக்கினர்!

''பலே! திருடர்களிலேயும் இப்படி ஒரு வகையா! வேடிக்கையாக இருக்கிறதே!'' என்று சொல்லி ஆச்சரியத்தை வரவழைத்துக் கொண்டார் செந்தில் நாயகம்.

''அது சரி வக்கீலையா! உங்களிடம் இந்தப் பயல்கள் எதற்காக வந்தார்கள்? அதைச் சொல்லுங்கள்!''

''இங்கே வரவில்லை! ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கேஸுக்காகப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன் காரிலே! அப்போது ஆதிச்சநல்லூர்ப் பரம்பு இருக்கிறதே, அந்த இடத்தில் வந்து காரை மறித்தான் வேலு!''

''வக்கீலையா! உங்களுடைய காரையே மறித்தானு அவன்!''

''மறிக்கிறது என்றல் என்ன! பஸ் போகும்போது சாலையின் ஓரத்திலிருந்து கையைக் காட்டுகிறர்கள் அல்லவா, அப்படிக் காட்டினன் வேலுலிங்கம்!''

''வக்கீலையா! என்ன துணிச்சல், அந்தப் பயலுக்கு! நீங்களும் காரை நிறுத்தினீர்களா?''

''டிரைவர் வேகத்தை அதிகப்படுத்தினன். நான்தான் நிறுத்தும்படி....''

''அதென்ன அப்படிச் சொன்னீங்க?''

''வல்லாளரே, காரை நாம் நிறுத்தா விட்டால் அதை அவனே நிறுத்தி விடுவான்! சற்றுத் தொலைவில் மரத்தின் மேலே ஆட்களை உட்கார்த்தியிருப்பான்! சாலைக்கு மத்தியிலே மரக்கிளை ஒடிந்து விழும்! அதையும் சமாளித்துக் கொண்டு மேலேபோனல், டயரைக் குறிபார்த்துத் துப்பாக்கியினல் சுட்டு விடுவான்! எத்தனையோ வழி வைத்திருப்பானையா!''

வல்லாள வேலர் எதுவும் பேசாமல் வக்கீலின் பேச்சையே கேட்டுக் கொண்டிருந்தார். வக்கீல் தொடர்ந்தார்:

''காரை நிறுத்தியதும் வேலுலிங்கம் மட்டும் வந்தான் — பெரிய கும்பிடு போட்டுக் கொண்டே!''

''திருட்டுப்பயல்! திருட்டுக்கும்பிடு!'' என்றார் வல்லாள வேலர்.

சிரித்துக் கொண்டே மேலே பேசினார் செந்தில் நாயகம். ''வேணுலிங்கம் அதிகமாக என்னிடம் பேசவில்லை!''

''என்னதான் சொன்னான் வக்கீலையா அந்தப் பயல்?''

''நீங்களும் பொன்னுத்துரையும் யாரையோ ஒழித்துக் கட்டுவதற்காகத் திட்டம் போடுகிறீர்களாம். அந்தத் திட்டத்தைத் தடுப்பதற்காகத்தான் உங்களுடைய துப்பாக்கிகளை அபகரித்துக் கொண்டானாம்! துப்பாக்கிகளைக் கொண்டு போனதற்கு அதுதான் காரணமாம்!''

இப்படி வக்கீல் சொன்னதும் 'பளிர்' என்று பதில் சொன்னார் வல்லாளவேலர்:

''வக்கீலையா! இந்தக் கைத்துப்பாக்கி போனால், வேறு துப்பாக்கியே எங்களுக்கு அகப்படாது என்று நினைத்து விட்டானோ இந்தப் பயல்!''

வல்லாள வேலர் இப்படிச் சொன்ன போது மீசை துடித்தது.

''வல்லாளரே! அப்படியானால் வேணுலிங்கம் சொன்னது உண்மை தானோ? நீங்களும் பொன்னுத்துரையும் யாரையோ ஒழித்துக் கட்டத் திட்டம் போட்டிருப்பது உண்மைதானா?''

வல்லாள வேலர் பதறிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்!

''இல்லை! இல்லை! அதற்குச் சொல்லவில்லை ஐயா! ஒரு பேச்சுக்குச் சொன்னேன். துப்பாக்கிகளுக்குப் பஞ்சம் வந்து விடவில்லை என்பதற்குச் சொன்னேன்!''

''ஓ! அப்படியா! அதையேதான் வேணுலிங்கமும் சொன்னான்!''

''என்ன சொன்னான் வக்கீலையா?'' என்று கேட்டார் வல்லாளர்.


''இந்தத் துப்பாக்கிகள் போனால் போகட்டும் என்றும், வேறு எத்தனையோ துப்பாக்கிகள் கிடைக்கும் என்றும் வல்லாளர் நினைக்கலாம். அதெல்லாம் நடக்காது என்பதாக அவரிடம் எச்சரிக்கை செய்யுங்கள் என்றான்!''

''இதை ஏன் உங்களிடம் வந்து சொல்லுகிறான் திருட்டுப் பயல்!''


''அதுதான் எனக்கும் புரியவில்லை. உங்களிடமே வந்து நேரில் சொல்லியிருக்கலாமே? சொல்லுவான் என்றுதான் நினைக்கிறேன். அதையும் சொன்னானே என்னிடம்!''

''என்ன! என்ன!'' என்று பதற்றத்தோடு கேட்டார் வல்லாளர்.


''அந்தப் பாதையில் தற்செயலாக என்னுடைய கார் வருவது தெரிந்ததால் இந்தச் செய்தியை என்னிடம் வந்து சொன்னானாம். உங்களையே நேரிலே சந்தித்து எச்சரிக்கை செய்யப் போவதாகவும் சொல்லியிருக்கிறான்!''



ரமணாசிரமத்தின் தலைவரும் மானேஜருமான திரு வெங்கடராமனின் புதல்வி சௌ அழகம்மாளுக்கும் திரு சுந்தரரமணனுக்கும் மார்ச் மாதம் 23-ந் தேதி ரமண நகரில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.



புதுதில்லி உணவு விவசாய இலாகா அண்டர் செகரட்டரி திரு வி. பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. உஷாவுக்கும் திரு கே. வி. ரமணிக்கும் திருமணம் நடந்தது.



திரு நாராயணன் செட்டியார் புதல்வர் திரு கிருஷ்ணனுக்கும், சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் பொதுக்குடியில் திரு மு. கந்தசாமி மனவராயர் தலைமையில் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

''வரட்டும் பார்க்கிறேன்!''

''சரி, பாருங்கள். அதோடு நிறுத்தி விடாமல், எல்லாச் செய்திகளையும் விவரமாகவே கேளுங்கள்!''

''என்னத்தைக் கேட்கச் சொல்லுகிறீர்கள்? திருட்டுப் பயலிடம் நமக்கு என்ன பேச்சு வக்கீலையா?''

''பேசிக் கொண்டு இருக்கச் சொல்லவில்லை வல்லாளரே! உங்களுடைய திட்டங்களில் பிரவேசிக்க இவனுக்கு என்ன உரிமை என்று கேளுங்கள். அது மட்டும் கேட்டால் போதுமே!''

இப்படிச் சொல்லிக் கொண்டே வக்கீல் நாற்காலியிலிருந்து எழுந்தார். வல்லாள வேலருக்கு அவர் இன்னும் மேற்கொண்டு ஏதாவது சொல்ல மாட்டாரா என்று ஆவலாக இருந்தது.

''வல்லாளரே! எனக்கு வெளியூரில் அவசரமாக ஒரு வேலை இருக்கிறது. நான் புறப்பட வேண்டும். நீங்கள் வேணுலிங்கத்தையும் சுடலையாண்டியையும் கொஞ்சம் மறந்துவிட்டு, இந்தக் காகிதக் கட்டுகளைக் கொண்டுபோய் ஜமீந்தாரிடம் கொடுங்கள். சென்னையில் நடத்தவேண்டிய கலைக் கல்லூரிக்கான பத்திரங்கள், டாகுமெண்டுகள் எல்லாம் இதில் இருக்கின்றன. ஜமீந்தாரிடம் கொடுங்கள். நான் வெளியூர் போய் விட்டு வருகிற வழியில், இன்று சாயந்திரம் நேரம் இருந்தால் வருகிறேன். இல்லையென்றால் நாளைக்காலையில் கட்டாயம் வந்து பார்க்கிறேன் என்று சொல்லுங்கள். அதற்கு இடையில் உங்களுக்கு ஓய்வு இருந்தால் நீங்களும் இந்தப் பத்திரங்களை யெல்லாம் ஒரு முறை படித்துப் பாருங்கள்!''

வக்கீல் இப்படிச் சொன்னதும் வல்லாள வேலருக்கு ஆத்திரம் வந்தது.

''இந்தப் பத்திரத்தை எல்லாம் நான் ஏன் படிக்க வேண்டும் வக்கீலையா! யார் எப்படிப் போனால் நமக்கு என்ன வந்தது!'' என்றார் வல்லாளர்.

''அப்படியெல்லாம் கையைக் கழுவி விட முடியுமா வல்லாளரே! ஜமீன் நிர்வாகியே இப்படிச் சொன்னால் எப்படி? நாளைக்கு இந்தப் பத்திரங்களில் சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டியவரல்லவா நீங்கள்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே, ''அப்படியானால், புறப்படுகிறீர்களா நீங்கள்?'' என்று வணக்கம் செலுத்தினார் வக்கீல்.

வல்லாள வேலர் அந்த அறையிலிருந்து புறப்பட்டுச் சென்ற சற்று நேரத்துக்குப் பிறகு, திவான் பகதூர் செந்தில் நாயகமும் வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமானார். நீண்ட அங்கி, ஜரிகைத் தலைப்பாகை, பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய மஸ்லின் ஆகிய அணிகளோடு அவர் நடந்து வந்து காருக்குள்ளே ஏறியதும், வக்கீல் குமாஸ்தா முன் ஸீட்டில் வந்து ஏறுவதற்குத் தயாராக நின்றார். ''நீ வர வேண்டியதில்லை! இங்கேயே இரு!'' என்றார் வக்கீல். கார் புறப்பட்டது!

'நம்மைக் கூப்பிட்டுக் கொள்ளாமல் தனியாக எங்கே போகிறார்கள் வக்கீலையா' என்று யோசித்துக் கொண்டே கார் போகும் திசையையே பார்த்து நின்றார் குமாஸ்தா! அவருடைய பார்வையிலிருந்து கார் மறைந்த மறு விநாடி, அவருக்குப் பின்னால் வந்து நின்று முதுகைத் தட்டினார் வல்லாள வேலர். திரும்பிப் பார்த்த குமாஸ்தா, வல்லாளவேலர் டாகுமெண்ட் கட்டுக்களோடு நின்றதைப் பார்த்ததும், ஏதோ தெய்வ தரிசனம் செய்ததைப் போல ஆனந்தம் பொங்கக் கைகூப்பினார்.

''சரி. வாருங்க. அந்தக் காகிதக் கட்டை யெல்லாம் இப்படிக் கொடுங்க, நம்ப கையிலே. இப்படியே சந்திர விலாஸிலே போயி, ஸ்ட்ராங்கா ஒரு கப் காப்பி அடிச்சுட்டு, அதுக்கு மேலேதான் பேச்சு'' என்றார் வக்கீல் குமாஸ்தா! இருவரும் நடந்தார்கள்.

வண்ணார் பேட்டையிலிருந்து புறப்பட்ட வக்கீலையாவின் கார் மிக வேகமாக ஓடியது. பேட்டை, மேலக்கல்லூர், கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம் எல்லாம் தாண்டிச் சிங்கம்புத்தூர் எல்லையையும் கடந்து, செண்பக வனத்தை நோக்கி ஓடியது!

மலையடிவாரத்துக்கு வந்து சேர்ந்த பிறகுதான் திவான்பகதூரின் கார் நின்றது. காரில் வைத்திருந்த ப்ளாஸ்கிலிருந்து, ஒரு கப் ஓவல்டின்னை ஊற்றிக் குடித்து விட்டுத் தன்னந்தனியாக மலைப் பாதையிலே நடக்க ஆரம்பித்தார் திவான்பகதூர் செந்தில்நாயகம். தன்னையும் உடனழைத்துக் கொள்ளாமல் வக்கீலையா தனியாக நடந்து சென்றதைப் பார்த்த போது, ஏதோ மிகவும் இரகசியமான காரியம் என்று டிரைவருக்குப் புரிந்தது!

மலைப்படிகளிலே நடந்து சென்ற திவான்பகதூர் அப்படியே திகைத்து நின்றார். கானகக் கோவிலின் சந்நிதியிலே வில்வநாதன், சுந்தரேசப்பட்டர், கம்பர் ஆகிய மூவரோடு, நாலாவதாக நின்றது யார் என்று கூர்ந்து பார்த்தார். குமுதவல்லியின் குமாரி செண்பக சுந்தரியா அது? திவான்பகதூரின் நடை தளர்ந்தது. மேலே செல்லாமல் அப்படியே வியப்பில் மூழ்கி நின்றார். அவருடைய சிந்தனைச் சக்கரம் சுழலத் தொடங்கிற்று!


(தொடரும்)

சேமிப்பு குறைவது ஏன்?

சித்ரா எஸ். நாராயணசாமி

வரப் போகும் மத்திய சர்க்கார் வரவு செலவுக் கணக்கில் என்னென்ன புது வரிகள் வருமோ என்று வர்த்தகர்களும் தொழிலதிபர்களும், அனாதைகளாக விடப்பட்ட 'வர்க்கத்தைச் சேர்ந்த உபயோகிப்பவர்களு'ம் பீதியுடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றனர். மிகவும் கெட்டிக்காரர்கள் என்று புகழ் பெற்ற ஜோஸ்யக்காரர்கள் கூட என்ன புது வரிகள் வரக் கூடும் என்று கணித்துச் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நிதிமந்திரி தனது புதுவரி ஜாபிதாவைப் படித்து முடிப்பதற்குள் பல பொருள்களின் விலை எப்போதையும்விட ஏகத்தாறாக ஏறத்தான் போகிறது. இதைப் பற்றி அமைச்சர் ஒன்றும் கவலை கொள்ளப் போவதில்லை. திட்டங்களை நிறைவேற்றி வைப்பதன் அவசியத்தைப் பற்றியும், நிதி தேவைகள் பற்றியும், என்னென்ன பொருள்களை மக்கள் வாங்காமல் ஒதுக்கித் தள்ளப் பழகிக் கொள்ள வேண்டுமென்பதுபற்றியும், வருங்கால சந்ததிகளின் வாழ்வுக்கு இந்தத் தலைமுறையினர் தியாகங்கள் புரியத்தான் வேண்டும் என்றும் நிதிமந்திரி நீண்டதொரு பிரசங்கம் செய்வார் என்று எதிர்பார்க்கலாம். கூடிய சீக்கிரத்திலேயே, ''அடுத்த தலைமுறையினராவது, மண்ணாங்கட்டியாவது!'' அப்படி இந்தத் தலைமுறையினருக்கு அவர்கள் என்ன பிரமாதமாகச் செய்து விட்டார்கள், அவர்களுடைய நலனுக்கு நாங்கள் தியாகம் செய்வதற்கு ?'' என்று இந்தத் தலைமுறை மக்கள் கேட்கவும் ஆரம்பிக்கலாம். அப்படிக் கேட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நேர்முக வரியை மட்டும் எடுத்துக் கொண்டால் வருமான வரி, அதற்கு ஓர் உபரி வரி, உயர் வருமான வரி, அதற்கு ஓர் உபரி வரி, எல்லாவற்றுக்கும் மேல் பிரத்தியேக உபரிவரி என்று அடுக்கடுக்காகப் பல கட்டங்களில் வரியின் சுமை மிகவும் உயர்ந்தே யிருக்கிறது. உதாரணமாக, ஆண்டுக்கு லட்சம் ரூபாய் வருமானம் உள்ள ஒருவன் 58,824 ரூபாய் வரியாகச் செலுத்துகிறான். இரண்டாவது லட்சம், அதற்கு மேலும் வருமானம் இருந்தால் ஒவ்வொரு லட்சத்துக்கும் 84,000 ரூபாய் வீதம் வரி மூலம் அவன் கொடுக்கிறான். அதாவது வருவாய் லட்சம் என்றாலும், கையில் மிஞ்சுவது 16,000 ரூபாய்தான். இதைக் கொண்டுதான் அவனுடைய அந்தஸ்துக்கேற்ற முனிசிபல் வரி, தொழில் வரி முதலிய பல வரிகளைச் செலுத்தி (இவை யெல்லாம்கூட இக்காலத்தில் மிகவும் உயர்ந்தே இருக்கின்றன.) தனது செலவுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும். 10 லட்சம் வருமானம் உள்ள ஒரு பெரிய பணக்காரனுக்கு வரி கொடுத்த பின் கையில் மிஞ்சுவது இரண்டு லட்சத்துக்கும் குறைவே. லட்ச ரூபாய்க்கு மேல் வருஷ வருமானம் ஒருவருக்கு இருக்க வேண்டுமானால், செல்வ வரி செலுத்த வேண்டிய பணக்காரராகவே அவர் இருப்பார். இப்போது நிலவும் விகிதாசாரப்படி ஐந்து லட்சம் செல்வம் உள்ளவர் 3000 மும், 15 லட்சம் உள்ளவர் 14 500-ம் 25 லட்சம் உள்ளவர் 29,500ம் செல்வ வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆண்டுக்குப் பத்து லட்சம் வருமானமும், சுமார் முப்பது லட்சம் சொத்தும் உள்ள ஒருவர் செலுத்தும் மொத்த வரி வருஷத்துக்கு 8,55,824. சமீப ஆண்டுகளில் உயர் வருமானமும் செல்வமும் உள்ளவர்கள் விஷயத்தில் வரியின் தொகை மொத்த வருமானத்தின் தொகையைவிட உயர்வாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக வருமானம் முழுவதையும் கொடுத்துவிட்டு, பற்றாக் குறைக்குத் தங்கள் சொத்தை விற்று வரி செலுத்தும் நிலைமையில் இருக்கின்றனர். வரி கொடுப்பதற்கே இந்தப் பாடு என்றால் அவர்கள் செலவுக்கு விளைநிலன்களை விற்றுச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்துடன் முனிசிபல் வரி மற்றும் சில்லறை வரிகளையும் சேர்த்துப் பார்த்தால் பெரும் பணக்காரர்கள் என்று உதாசீனமாகப் பேசப்படும் தனிகர்கள் வரி செலுத்தக் கையில் ரொக்கப் பணம் இல்லாது தவிப்பது பரிதாபகரமாகக்கூட இருக்கும். செல்வந்தர்களை யெல்லாம் தீர்த்துக் கட்ட வேண்டும் என்று கோஷமிடும் கோஷ்டியினர்கள், எவ்வளவு கடுமையான வரிச் சுமையினால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை முற்றிலும் உணராதவர்கள் என்றே கருத வேண்டும்.



இந்தியாதான் வறுமை மலிந்த நாடாயிற்றே; இங்கே ஆண்டுக்குச் சராசரி தலை வருமானம் 300 ரூபாய்க்கும் குறைவுதானே; அவர்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் வசிக்க இருக்கையும் தேடித் தருவதில் முனைந்து திட்டங்கள் வகுத்துக்கொண்டு செயலாற்றும் நம் நாட்டில் லட்சக்கணக்கில் வருமானம் உள்ளவர்கள் வரிப் பளு தாங்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்வது நகைப்புக்கிடமாகாதா. எளியவர்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, பணக்காரர்களைப் பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லையே என்று எண்ணத் தோன்றும். ஆனால் இது சரியன்று. பணக்காரர்கள் கவலையில் ஏழைகளுக்கும் அக்கறை உண்டு. நாட்டில் தொழில் வளம் செழிக்க ஆரம்பித்து, பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்க அத்தியாவசியமான மூலதனம் பெரும்பாலும் இத்தகைய செல்வந்தர்களிடமிருந்து தான் வர வேண்டும். ஏனெனில் செல்வம் படைத்தவர்களால் தான் இது முடியும். மற்றவர்களால் முடியாது. கடந்த மூன்று ஆண்டுகளாக வரம்பு கடந்து உயர்ந்துவிட்ட விலைவாசி

களால், செலவு கட்டுக்கடங்காமல் போனதுடன் கடும் வரியினால் பணக்காரர்களுடைய வருமானத்தில் கூட மிச்சம் தங்கவில்லை.

மத்திய வருமானமுள்ளவர்கள் சேமிப்பு செய்வது, மிச்சம் பிடிப்பது எல்லாம் இயலாத காரியம். மாதச் சம்பளம் பெற்று ஜீவிப்பவர்கள் இப்போதுள்ள விலைவாசிகளில் வாழ்க்கை நடத்துவதே கஷ்டம். சேமிப்பு செய்வது எப்படி?

ஆனாலும், திட்டம் வகுத்துள்ள நிபுணர்கள் சிறு சேமிப்பு மூலம் பெருந் தொகை திரட்ட வேண்டும் என்று கணக்குப் போட்டிருக்கின்றனர். தேசிய வருமானம் உயர்ந்துள்ளது. அதனால், அந்த அளவுக்காகிலும் சேமிப்பு செய்யப்படுவதும் உயரத்தானே வேண்டும் என்பது அவர்களுடைய குருட்டுக் கணக்கு. இந்த ஏட்டுச் சுரைக்காய் கணக்குகள் தவறிப் போவதற்குக் காரணம் எந்தச் சேமிப்புத் தொகையைக் கொண்டு திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமோ அந்தச் சேமிப்புக்களை விலைவாசிகள் உயர்வுகள் கபளீகரம் செய்து விடுவதுதான்.

மக்களிடம் சேமிப்பு எவ்வளவு அதிகரித்து உள்ளது என்பதற்குத் தேசிய சேமிப்புப் பத்திரங்களின் விற்பனை ஓர் அளவுகோல். இது விஷயத்தில் 1962 மார்ச்சு 31ந் தேதியுடன் முடிவடைந்த ஆண்டு அறிக்கை தனது சோகக் கதையைக் கூறுகிறது. நிகர விற்பனைத் தொகை கணிசமாகக் குறைந்துள்ளது. முந்திய ஆண்டுகளில் வாங்கப்பட்ட பத்திரங்கள் பெருவாரியாக மாற்றப்பட்டுப் பலர் ரொக்கப் பணம் பெற்றுப் போயினர். அதாவது மக்கள் சேமிப்பு செய்வதற்குப் பதிலாகச் சேமித்து வைத்ததைச் செலவு செய்யத் தொடங்கி விட்டனர். அரசாங்கமே விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் கொள்கைகளை வகுத்துச் செயல்புரிவதால், எந்தக் கட்டங்களிலுமே மக்களிடம் சேமிப்பு தங்குவதற்கு வாய்ப்பில்லை. நேர்முகவரிகளை மேலும் உயர்த்துவதோ, அல்லது விரிவுபடுத்துவதோ, இப்போதுள்ள நிலைமையில் நிச்சயமாக முடியாது என்று நிதிமந்திரி அடிக்கடி சொல்லி வருகிறார். ஆகையால் திட்ட முயற்சிக்குப் பணம் சேகரிக்க, மறைமுக வரி, அதாவது 'எக்ஸைஸ் வரி'களையே நிதி அமைச்சர் நாட வேண்டும். ஏனெனில் இதர வருமான இனங்களில் வருமானத்துக்கு வாய்ப்புக்கள் இல்லை. இறக்குமதி அளவுகள் கடுமையாகக் குறைக்கப்பட்டிருப்பதால், இறக்குமதி வரியினின்று கிடைக்கும் வருமானமும் குறைந்து விட்டது. விசேஷ லைசென்சுகள் மீது இறக்குமதியாகும் இனங்கள் மூலம் சிறிது வருமானம் கிடைத்தாலும், இதனுடைய தொகை மிகக் குறைவுதான். ஏற்றுமதி வரிகளை விரிப்பதற்கோ வாய்ப்பில்லை. ஏனென்றால், இப்போதே நம் நாட்டிலுள்ள ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன. அதனால் ஏற்றுமதி வர்த்தகம் சிரமத்துடனே தான் நடைபெறுகிறது. இவற்றை மேலும் உயர்த்துவது சாத்தியமன்று. மாறாக, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதி வரிகளிலிருந்து விலக்குகள் அளிக்கப்படுகின்றன. ஆகவே நிதி மந்திரியின் கணக்கில் வருவாயைப் பெருக்க ஒரு துறைதான் உண்டு — எக்ஸைஸ் வரிகள்.

பண வீக்கம், பொருள்களின் உற்பத்தி விலை உயர்வுகள், உற்பத்திக் குறைவினாலும், இறக்குமதிக் குறைவினாலும் உபயோகத்துக்குத் தேவையான பல பொருள்கள் கிடைக்காமை,— இவையனைத்தும் விலை உயர்வுக்குக் காரணங்கள். இந்த நிலையில் மேலும் எக்ஸைஸ் வரிகளை விதித்தால், ஏற்கெனவே உள்ள பண வீக்கத்தை அதிகப்படுத்தவே நேரும்: **இனிமேல் விதிக்கப்படும் எக்ஸைஸ் வரிகளை உற்பத்தியாளர்கள் தாங்களே ஏற்றுக் கொள்ள முன் வர மாட்டார்கள். அவற்றை மக்கள் மீது சுமத்திவிட நேரிடும்.** அதன் மூலம் பொருள்களுக்கு மக்கள் கொடுக்க வேண்டிய விலைகள் உயரும். அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் மக்களுடைய வருமானம் குறைந்திருக்கும்: அதாவது தொழில் வளர்ச்சி வேண்டும் என்று உற்பத்தியை அதிகரிக்க ஒருபுறம் தூண்டப்படுகிறது. மக்களுடைய வாங்கும் சக்திக்கும் உயர்வாக விலைகளை வைத்திருக்கும் நடவடிக்கைகளினால், அவற்றை வாங்க முடியாமல் போகிறது மற்றொருபுறம். இவ்வாறு முரண்பாடான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நிலைமையைத்தான் எக்ஸைஸ் வரிகள் தோற்றுவிக்கும். ஆனாலும் இப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்தான் புதுடில்லி சர்க்கார் உண்டாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

விலைவாசி உயர்வு, மக்களிடமுள்ள சேமிப்புத் தொகையைக் கபளீகரம் செய்து விட்டது என்று மேலே கூறப்பட்டது. தவிரவும், சேமிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையே மக்கள் மனத்திலிருந்து அது அகற்றி விடுகிறது. பொருளாதார விஸ்தரிப்புக்கு எக்ஸைஸ் வரிகள் மூலம் நிதி தேட முற்படுவது, தன்னுடைய வாலையே தின்று பசியாற்றிக் கொண்ட மலைப்பாம்பின் கதையைப் போன்றது. கொஞ்சம் நீளம் விழுங்கிய பின்னரே தனது முட்டாள்தனத்தைப் பாம்பு உணர்ந்தது என்று நீதிக்கதை கூறுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அங்கங்கே தடைகளையும், சிக்கல்களையும் ஏற்படுத்தி விட்டுப் பிறகு தேசிய வருமானப் பெருக்கம் எங்கே, எப்படி மறைந்து போயிற்று என்று கண்டுபிடிக்கப் பிரத்தியேக கமிட்டிகளை நியமிப்பது அசட்டுத்தனமாகும்:

ஏற்கனவே நமது தொல்லைகள் பலவாறாகப் பெருகி விட்டன. அந்நியச் செலாவணி இல்லாதது ஒன்று; உள் நாட்டு மூலதன வசதிகளும் சுருங்கிக் கொண்டு வருவது மற்றொன்று.

உண்மை என்னவென்றால், நம் திட்டங்கள் எல்லாம், நமது வசதிகளுக்கு அதிகமாகவே வகுக்கப்பட்டுள்ளன. நமக்கு உதவி புரிய வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ள அயல் நாடுகளின் கடன் வழங்கும் வசதிகளுக்கு அதிகமாகக் கூடத் திட்டம் போட்டிருக்கிறார்கள். திட்ட இனங்களை வசதிக்கேற்றவாறு திருத்திக் கொள்ளுவது தான் விவேகமாகும். இப்படிச் செய்வதில் நமக்கு அகௌரவம் ஒன்றும் இல்லை. வசதி இன்மையால் நமது திட்டங்கள் அரைகுறையாக விடப்பட்டால் தான் அகௌரவம். பொய்யான லட்சியங்களைக் கைவிடுவதினால் தேசிய கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படாது.

சட்டம் ஒரு கழுதை!

கும்பகோணம் வீடு தன் வசத்துக்கு வந்தபோதே 'இதென்னடா தலைவலி' என்று நினைத்துக் கொண்டவன் சாமிநாதன். நாம் வசிப்பதோ, தொழில் நிர்ப்பந்தத்தால், சென்னை நகரில்; கும்பகோணத்தில் ஒரு வீட்டை வைத்துக் கொண்டு நாம் ஏன் சிரமப்படவேண்டும்; சென்னையில் சிறியதாய் ஒரு வீடு இருந்தாலும் பிரயோசனப்படும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். கும்பகோணம் வீட்டை விற்றுச் சென்னையில் சிறு வீடொன்று கட்டிக் கொள்ளலாம் என்பது அவன் யோசனை. ஆனால், அவனுடைய தாயார் வேறு விதமாக நினைத்தாள். ''பல தலைமுறையாய் ஆகிவந்த வீட்டை நான் மூச்சோடு இருக்கிறவரையாவது விற்காதே!'' என்றாள் கிழவி.

தாயின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டவன் சாமிநாதன். வீட்டில் குடி வைத்து, அதிலிருந்து வாடகை வரட்டும் என்று தீர்மானித்தான். தனக்கு வசிக்கத்தான் பயன்படவில்லையே, வாடகையாவது ஒழுங்காக வரக்கூடாதா! அதிலும் அவனுக்கு ஏமாற்றம்!

கும்பகோணம் வீட்டில் பல வருஷங்களாய் ராஜா அய்யங்கார் என்பவர் குடியிருந்தார். சாமிநாதனிடம் வீடு மாறினபோது, அவர் மிகவும் நல்லவராகவே தென்பட்டார். பட்டணத்துக் கணக்குப்படி இரண்டு மாத வாடகை முன் பணமாய்த் தந்துவிட வேண்டும் என்றபோது, ''ஆஹா, அதற்கென்ன!'' என்று கொடுத்து விட்டார். அதன் பிறகு மாதா மாதம் வாடகையை ஒழுங்காக அனுப்பி வந்தார் — ஆறு மாத காலத்துக்கு. அதற்கப்புறம் ஒரு மாத வாடகை பாக்கி நின்று கொண்டேயிருந்தது. அதன் பிறகு, இரண்டு மாத முன் பணத்துக்குச் சரியாக இரண்டு மாதவாடகை பாக்கி நின்றவண்ணம் இருந்தது. அதற்கப்புறம், முன் பணத்தைக் கழித்துக் கொண்டாலும் இரண்டு மூன்று மாத வாடகை பாக்கி நிற்பது வழக்கமாயிற்று.

சாமிநாதன் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதுவான். சில சமயம் பதிலே இராது. சில சமயம் இதோ அனுப்பி விட்டேன் என்று பதில் வரும். பல சமயம், 'வீடு பழைய வீடு; ரிப்பேர் செய்து வருஷக் கணக்காகிறது. பூராவும் ஓடு மாற்ற வேண்டும். கூரை முழுதும் ஒழுகுகிறது' என்று மெய்யும் பொய்யுமாய்ப் புகார்கள் வருமே தவிர, வாடகைப் பணம் வராது.

சாமிநாதனுக்கு இது மிகவும் அலுத்துப் போய் விட்டது. போன வருஷம் வீடு முழுதும் ஓடு மாற்றி ரிப்பேர் செய்தான். அதன் பிறகாவது ராஜா அய்யங்காரிடமிருந்து வாடகை ஒழுங்காய் வருமா என்று பார்த்தான். 'வீடு ரிப்பேர் செய்தது சரியாகச் செய்யவில்லை; கூரையில் ஒழுகல் குறையவேயில்லை' என்று வேறு விதமாகப் புகார் வந்து கொண்டிருந்ததே தவிர, வாடகை ஒழுங்காக வரவில்லை. முடிவில், ஒரு வக்கீலைக் கலந்தாலோசித்து, வீட்டைக் காலி செய்யும்படி நோட்டீஸ் கொடுத்தான். வாடகை பாக்கியிருப்பதால் வாடகைக் குடியிருப்புச் சட்டத்தின்படி குடியிருப்பவர் காலி செய்தாக வேண்டும் என்பதை வக்கீல் சுட்டிக் காட்டினார்.

ராஜாவிடம் வக்கீல் நோட்டீஸ் பலிக்கவில்லை. வாங்கி வைத்துக் கொண்டு சும்மா இருந்தார். வாடகையும் வரவில்லை, வீட்டையும் காலி செய்யவில்லை.

வக்கீலிடம் மறுபடியும் போனான் சாமிநாதன். ''ஆசாமி அழுத்தமான பேர்வழி போலிருக்கிறது. நீங்கள் கோர்ட்டில் தாவா செய்து, வாடகைப் பாக்கியை வசூலித்து ஆளை வெளியேற்ற வேண்டியிருக்கும் போல் இருக்கிறது'' என்றார் வக்கீல். சாமிநாதன் யோசனை செய்தான். கோர்ட்டில் தாவா செய்தால் அது சீக்கிரத்தில் முடியக்கூடிய விஷயமல்ல என்பதை அவன் அனுபவத்தில் அறிந்திருந்தான். வாய்தா தவணைகளையெல்லாம் தாண்டி 'ஈரங்கி'க்கு வந்தாலும், மறுபடியும் வாய்தா வாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? வழக்கென்று வந்தால், குடியிருப்பவர் ஏதாவது பொய்க் காரணங்கள் ஜோடிக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்? 'யோசனை செய்து சொல்கிறேன்' என்று வீட்டுக்கு வந்தான்.

வீட்டுக்கு வந்ததும் அவனுக்கு ஒருயோசனை தோன்றியது. கொடாக்கண்டனுக்கு மருந்து விடா முண்டன்தான். தான் நேரில் கும்பகோணம் போய், ஒரு வாரம் அங்கேயே இருந்து ஆளைக் காலி செய்யச்சொல்வது என்று தீர்மானித்தான். அதன்படியே இந்தத் தேதியில் தான் வருவதாகவும், அந்தத் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் காலி செய்து விட வேண்டும் என்றும், வாடகை பாக்கியையும் தந்துவிட வேண்டும் என்றும் கண்டிப்பாக ஒரு கடிதம் எழுதினான். நோட்டீஸுக்கு அவகாசமளித்து, ஒரு மாதகாலம் கழித்துக் கும்பகோணத்துக்குக் கிளம்பிச் சென்றான் சாமிநாதன்.

கும்பகோணத்தில் தன் வீட்டு வாசலில் வண்டியை விட்டு இறங்கிய போது, சாமிநாதன் வீடு பூட்டியிருப்பதையே கண்டான். அண்டை அயலில் விசாரித்த போது, ராஜா அய்யங்கார் தம் குடும்பத்தாருடன் எங்கோ கிராமத்துக்குப் போயிருப்பதாயும், வீடு ஒரு வாரமாய்ப் பூட்டிக் கிடப்பதாயும், அவருடைய விலாசம் தெரியாதென்றும் அறிந்து கொண்டான். அவர் எப்போது வருவார் என்பதும் யாருக்கும் தெரியவில்லை.

''இதெல்லாம் யார் விசாரித்து வைக்க முடிகிறது! வேறு வேலை இல்லையா என்ன?'' என்று பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்கள் சற்று சலிப்புடனேயே பதில் சொன்னார்கள்.

ரா. அ. பத்மநாபன்

சாமிநாதன் வெறுப்புடன் கடைத் தெருப் பக்கம் சென்று ஒரு ஹோட்டலில் தங்கினான். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. இரண்டு நாள் பொழுதும் ரயில் செலவும் வியர்த்தம்தானா என்று நினைத்துக் கொண்டே பகல் போஜனத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தான். உள்ளூரில் உள்ள தன் பால்ய சிநேகிதர்கள் யாரையாவது பார்க்கலாம் என்று கிளம்பினான். திடீரென்று கடுமையான மழை பிடித்துக் கொண்டது. "இந்தக் கஷ்டம் வேறு! நம் காரியம் எல்லாமே தடங்கல் படுகிறதே!" என்று சபித்துக் கொண்டே ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு மடத்துத் தெருவில் வக்கீல் ராஜகோபாலன் வீட்டுக்கு விடச் சொன்னான். வண்டியில் பாதி நனைந்திருந்தது. மழை மேலும் சுழற்றிச் சுழற்றி அடித்தது.

வக்கீல் ராஜகோபாலன் சாமிநாதனுடைய பழைய நண்பர். எதிர்பாராதபடி அவனைக் கண்டதும் மிகவும் உபசாரம் செய்து, வந்த சமாசாரம் என்னவென்றார். சாமிநாதன் விஷயத்தை விளக்கிச் சொன்னான்.

"குடியிருப்பவர் ராஜா அய்யங்கார் என்றா சொன்னாய்? அவன் காலிப் பயலாயிற்றே!"

"ஆமாம். நானும் கேள்விப் பட்டேன். வீட்டைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை. அத்துடன் சதா காஷ்டி சேர்த்து வீட்டில் சீட்டாடிக் கொட்டமடித்து வீட்டுக்கே கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுக்கிறான்!"

"நீ வரப் போகிறாய் என்று தெரிந்து வேண்டுமென்றுதான் அவன் வெளியூர் போய் விட்டான். அவனைக் கண்டுபிடித்துப் பேசினால் தானே பதில் சொல்ல வேண்டும்! நீ இந்த ஊரில் இருக்கிறவரை அவன் உன் கண்ணில் படாமலே ஏமாற்றுவான்."



"அவனை வழிக்குக் கொண்டு வரச் சட்டத்தில் இடமில்லையா?"

"அப்படியென்றால்?"

"அவன்தான் வாடகைகொடுக்கவில்லையே? வாடகை தராமல் வீட்டையும் பூட்டிக் கொண்டு போய் விட்டான். வீட்டைத் திறந்து வேறு குடி வைக்கக் கூடாதா?"

"ஐயய்யோ, நன்றாய்ச் சொன்னாய்! வீட்டில் பூட்டியுள்ளது அவன் பூட்டு. மறந்து விடாதே. அந்தப் பூட்டை உடைத்தாயானால் தன் வசமுள்ள வீட்டில் சட்ட விரோதமாய்ப் புகுந்தாயென்று போலீஸில் புகார் செய்து உன்னைக் குற்றவாளியாக்கி விடுவான்! அது மட்டுமல்ல. உள்ளே ஏதேதோ மதிப்புள்ள சாமான்கள் இருந்ததாம் அவை காணாமல் போய் விட்டதாயும் அவன் புகார் செய்தானானால் உன் மீது திருட்டுக் குற்றமும் சேரும். ஜாக்கிரதை!"

"அட ராமா! இது மாதிரி பித்தலாட்டப் பசங்களுக்கு உதவத்தான் சட்டம் பயன்படுகிறது! நமக்கு வீட்டைப் பெறச் சட்டத்தின் வழி இல்லை போல் இருக்கிறது."

"இல்லாமலில்லை. இருக்கிறது. ஆனால், சட்டம் நிதானமாகத்தான் வேலை செய்யும். நீயோ பட்டணத்தில் இருப்பவன். சில தினங்களுக்கு இங்கே வந்திருக்கிறாய். அதற்குள் சட்டப் பிரகாரம் அவனை வெளியேற்றுவது அசாத்தியம்."

சாமிநாதனும் வக்கீல் ராஜகோபாலனும் அதன் பிறகு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பேச்சு அவர்களுடைய பால்ய நினைவுகளைப் பற்றித் திரும்பி விட்டது.

சாமிநாதன் கிளம்பின போது, "வீட்டு விவகாரத்தைப் பற்றிக் கவலைப்படாதே... நான் வேண்டுமானால் சட்டபூர்வமாய் எல்லா நடவடிக்கையும் எடுத்து உதவி செய்கிறேன்" என்றார் வக்கீல்.

"எனக்கு எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது. நாளை வந்து சொல்கிறேன்" என்று சாமிநாதன் கிளம்பினான்.

வெளியே மழை விட்டிருந்தது. கால் நடையாகவே போனான் சாமிநாதன். பெரிய தெருவில் திரும்பி அவன் போய்க் கொண்டிருந்த போது, ஒரு வெற்றிலை சீவல் கடையிலிருந்து யாரோ தன்னைக் கூப்பிடுவது போலிருந்தது. "யாருடா, ஷாமிநாதன்தானே! என்னப்பா ஷௌக்கியமா?" என்று வாயில் குதப்பிய புகையிலைக்கிடையில் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்தான் ஒருவன்.

சாமிநாதன் திரும்பிப் பார்த்தான். தன்னை அழைத்தது வேறு யாருமில்லை; கிட்டிப் புள் கிருஷ்ணமூர்த்தியே! இளமைத் தோழன்! ஒரு மாமாங்கத்துக்குப் பின் சந்தித்ததும் பல வருஷ க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டார்கள். சாமிநாதன் தான் கும்பகோணம் வந்த காரணத்தையும், வக்கீல் ராஜகோபாலனைப் பார்த்ததையும் சொன்னான்.

"என்ன செய்வதென்று புரியவில்லை. எனக்கோ ஒரு வாரம்தான் லீவு. அதற்குள் காரியத்தை முடிக்கலாமென்று நினைத்தேன். முடியாது போலிருக்கிறது!" என்று சலிப்புடன் சொன்னான்.

"உம். சட்ட பூர்வமாக முடியாதுதான். சட்டம் ஒரு கழுதை. சட்டத்தை மீறுமனும்

சில காரியங்களைச் சாதிக்க அது இடம் தரு கிறது!'' என்று கிருஷ்ணமூர்த்தி சொன்னதும் சாமிநாதன் வியப்புடன் பார்த்தான்.

''என்ன காரியத்தைச் சாதிக்க முடியு மென்று சொல்கிறாய்?'' என்றான் அவன்.

''மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா? தகுந்தபடி ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.

''தகுந்தபடியென்றால் ?''

''பாரப்பா நான் பெரிய வக்கில் அல்ல. வெறும் வக்கீல் குமாஸ்தாதான் ஆனாலும் இந்த வழக்குகளிலே அடிபட்டு அடிபட்டுச் சட்ட விவகாரம் தண்ணி பட்டபாடமா யிடுத்து. சட்ட விவகாரத்தை விட மனுஷா விவகாரம் அதுக்கு மேலே பாடமாயிடுத்து. என் கூட வீட்டுக்கு வா. ஆர அமர யோசித்து முடிவு செய்யலாம்'' என்று கிருஷ்ணமூர்த்தி சொல்ல, இருவரும் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுக்குக் கிளம்பினார்கள். கிளம்பும்போதே மழை மறுபடியும் பிசுபிசுவென்று பிடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

''சை இந்த மழை வேறு உபத்திரவம்!'' என்றான் சாமிநாதன்.

''மழையை வையாதே. இன்னும் இரண்டு மூணு நாட்கள் விடாத மழை பெய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்!''

''மழை வேண்டுமென்றா! என் வேலையை யெல்லாம் பாழ் செய்து விடும் போலிருக் கிறது. மழையையா கேட்க வேண்டும்!''

''உன் வேலையில் வெற்றி வாங்கித் தரப் போவது மழைதானப்பா! மூன்றாவது நாள் தம் ராஜா அய்யங்கார் காலி பண்ணும்படி செய்து விடுகிறேன்''

''அவ்வளவு தைரியமாய்ச் சொல்லு கிறாயே. அது எப்படி நடக்கும்?''

''பார் பார் தானே தெரியும் மழை பலமாய்ப் பிடித்துக் கொள்ளுமுன் போவோம் வா'' என்றான் கிருஷ்ணமூர்த்தி உறுதியுடன்.

❦ ❦ ❦

மறு நாள் கிருஷ்ணமூர்த்தியும் சாமி நாதனும் வீட்டு வாசலில் குடையைப் பிடித்துக் கொண்டு கூரையைப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தார்கள். கூரை மேலே ஓடு மாற்றுபவன் ஒருவன் ஏறி வேலை செய்து கொண்டிருந்தான். கிருஷ்ணமூர்த்தி கீழே யிருந்தபடியே அவனுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான். ஓடு பழுது பார்க் கும் பாவனையில் பல இடங்களில் ஓட்டை அகற்றிக் கூரையைப் பிரித் துப் போட்டான் ஓடு மாற்றுபவன். மழை வீட்டுக்குள்ளே சுகமாகப் பெய்தது

''சரி. போதும் கீழே இறங்கு. மழை அதிகமாக இருக்கிறது. பாக்கி ரிப்பேர் வேலைகளை நாளை அல்லது மறுநாள் வந்து பார்த்துக் கொள்ள லாம்'' என்று பரமசாது போல் உரக்கக் கத்தினான் கிருஷ்ணமூர்த்தி. அண்டை அயலில் இருந்தவர்கள் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ''ஓட்டை வீடு பல நாட்களாக ரிப்பேர் செய்யாதது போல இருக்கு தொட்ட இடமெல்லாம் ஒழுக்கு!'' என்று பக்கத்து வீட்டுக்காரர் காதில் விழ உரக்கக் கூறிவிட்டு, கிருஷ்ணமூர்த்தி சாமிநாதனுடன் கிளம்பி னான். மழை 'ஜோ' வென்று கொட்டியது

'சரி வா, போவோம் நாளை வரலாம். எனக்கென்னவோ தோன்றுகிறது. நாளை வீடு நிச்சயம் திறந்திருக்குமென்று!'' என்று கிருஷ்ணமூர்த்தி சாமிநாதனிடம் சொன்னான்.

மறுநாள் காலை அவர்கள் திரும்பி வந்த போது உண்மையிலேயே வீடு திறந்திருந்தது. உள்ளே ராஜா அய்யங்கார். அடிக்கடி கூரை யைப் பார்த்துக் கொண்டே வீட்டுச் சாமான் களை மழை படாதபடி நகர்த்தி வைத்துக் கொண்டிருந்தார். திறந்த கூரை செய்த வேலை. திறவாத கதவைத் திறக்க வைத்து விட்டது! வீட்டில் நெல் களஞ்சியத்தைப் பற்றித்தான் ராஜாவுக்கு முக்கியகவலை. அதன் மேலே கிழிசலும் கந்தலுமாகப் பல சாக்கு களைப் போட்டு மூடிக் கொண்டிருந்தார்

'யார் உள்ளே?'' என்று அதிகார தோர ணையில் கேட்டுக் கொண்டே கிருஷ்ணமூர்த்தி



ப்ளாமாஞ்ச் செய்ய நீங்கள் சிரமப்பட வேண்டாம்



ப்ரௌன் & போல்ஸனின் ப்ளேவர்ட் கார்ன்ப்ளவர் உபயோகித்தால் போதும்

ப்ரௌன் & போல்ஸனின் ப்ளேவர்ட் கார்ன்ப்ளவர் உபயோகித்துத் தயாரித்த சுவைமிக்க, நாவில் நீர் ஊறச் செய்யும் ப்ளாமாஞ்சுகளை உங்கள் குடும்பத்தினருக்கு அளியுங்கள். செய்வது மிகச் சுலபம் ... எனவே எப்பொழுதுமே சுகிருசியாக அமைந்துவிடுகிறது. தவிர ஜீரணிக்க எளிதானது, சத்து நிறைந்ததும் கூட. படைத்தவருக்குப் பாராட்டுத்தான்! ப்ரௌன் & போல்ஸனின் ப்ளேவர்ட் கார்ன் ப்ளவர் உபயோகித்துத் தயாரித்த ப்ளாமாஞ்சுகளை அப்படியே தனியாகவோ, அல்லது பழங்கள், ஜாமுடனோ உண்ணலாம். ஸ்ட்ராபெரி, ராஸ்பெரி, பைன்ஆப்பிள், வனில்லா, காரமல் ஆகிய ஐந்து அருஞ்சுவைகளிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். 5 பைண்ட் பாக்கெட்டுகள்கொண்ட கார்டன்களில் கிடைக்கிறது.



கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரை. லிட்.,

இலவசம் இக்கூப்பனைப் பூர்த்திசெய்து, ப்ரௌன் & போல்ஸன் ப்ளேவர்ட் கார்ன் ப்ளவர் அல்லது வெனிலா கஸ்டர்ட் பவுடர் பாக்கெட்டிலுள்ள 5 உள்ளுறைகளை இத்துடன் இணைத்து அனுப்பி, ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், உருது, வங்காளி அல்லது மராத்தி மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள சுவைமிக்க சமையல் புத்தகம் ஒன்றை, மொழியைக் குறிப்பிட்டுப் பெறவும்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/குமாரி ....

....

விலாசம் ....

....

டிபார்ட்மெண்ட் நெ. KLK-9

கார்ன்ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரை. லிட்.,
தபால் பெட்டி நெ. 994, பம்பாய்—1.
இச் சலுகை இந்தியாவிலுள்ளவர்க்கு மட்டுமே.

ரும் சாமிநாதனும் நுழைந்தார்கள். முனு முனுத்துக் கொண்டே ராஜா அய்யங்கார் வெளியே வந்தார். சாமிநாதனைக் கண்டதும், ''வாங்கோ, வாங்கோ! எப்ப வந்தாப் பலே! சௌக்கியமா? நீங்கள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். உங்களை நானே பார்க்க வேண்டுமென்றிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்'' என்றார் ராஜா. உள்ளூற எவ்வளவு ஆத்திரம் இருந்தாலும் உதட்டில் உபசாரத்துக்குக் குறைவில்லை!

சாமிநாதன் பதில் சொல்வதற்குள் கிருஷ்ணமூர்த்தி, ''அவரைப் பார்க்க வேண்டுமென்றிருந்தீர்களா ஏன், என்ன சமாசாரம்?'' என்று கேட்டான்.

''என்ன சமாசாரமா? உங்களுக்குத் தெரியாதா? இந்தக் கொட்டு மழையில் இப்படிக் கூரையைப் பிரித்துப் போட்டு விட்டீர்களே! அக்கிரமம்!'' என்றார் ராஜா.

''என்ன செய்யறது! வீட்டை ரிப்பேர் செய்யவில்லையென்று நீர்தானே ஓயாமல் புகார் செய்கிறீர்? பட்டணத்திலிருந்துமெனக் கெட்டு வந்திருக்கிற போது இதைச் செய்யா விட்டால் வேறு எப்போது செய்வது?'' இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்பது போல அப்பாவி வேஷம் போட்டான் சாமிநாதன்.

''இது தர்ம நியாயமில்லே. மழை பெய்யற சமயம் பார்த்தா கூரையைத் திறந்து போடுவது?''

''சேச்சே! மழைக்கு முன்னாடியே ஒழுங்கு செய்து விடலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால் நம் இஷ்டப்படி மழைவராமல் நிற்கிறதா?'' அப்பாவி வேஷம் தொடர்ந்தது.

''இப்படி அக்கிரமம் செய்தால் சட்டப்படி உங்கள் பேரில் நடவடிக்கை எடுக்க முடியும். ஜாக்கிரதை'' என்றார் ராஜா, சாமிநாதனுடைய அப்பாவி வேஷத்தைப் பொருட் படுத்தாமல்.

'சட்டப்படியா?''

''ஆமாம். வீட்டில் ஆள் இல்லாதபோது வீட்டில் பிரவேசிக்க உங்களுக்கு உரிமை உண்டா? சொந்தக்காரராகவே இருந்தால் தான் என்ன?'' என்றார் ராஜா.

சாமிநாதன் சிரித்தான். ''அதுவும் உண்மைதான்'' என்றான். கிருஷ்ணமூர்த்தி இடைமறித்து, ''ஆமாம். சட்டம் இதில் கறார் கண்டிப்பாகத்தான் இருக்கிறது. பிறர் பூட்டின வீட்டில் சொந்தக்காரனானாலும் உள்ளே நுழையக் கூடாது என்பது சட்டம் தான். ஆனால் வீட்டுக்காரர் வீட்டை ரிப்பேர் செய்யக் கூடாது என்று சட்டம் சொல்வதாகத் தெரியவில்லையே!'' என்றான்.

''அதற்காக?''

''குடியிருப்பவரே பல தடவைகள் கூரை ஒழுகுகிறதென்று புகார் செய்திருக்கும்போது வீட்டுக்காரர் கூரையை ரிப்பேர் செய்து கொடுப்பது பிசகாகுமா?''

''அதற்காகக் கூரையைப்பிரித்துப் போட்டு விடுவதா?''

''சேச்சே! அப்படிச் செய்யலாமோ!'' என்று கேட்டு நீலிக் கண்ணீர் வடித்தான் கிருஷ்ணமூர்த்தி.



''பின்னே அதுதான் செய்திருக்கிறீர்கள்?''

கிருஷ்ணமூர்த்தி தன் வேஷத்தைக் கலைத்துக் கொண்டான். ''பாரப்பா! ராஜா! சும்மா பேசுவானேன். கூரையை ரிப்பேர் செய்ய ஆரம்பித்தோம். மழை வந்து தடுத்து விட்டது. என்ன செய்வது?'' என்றான்.

''என்ன செய்வதா முதல் காரியமாகக் கூரையை மூடுங்கள்''

''பார்த்தாயா? அந்தப் பேச்சுத்தானே வேண்டாம் என்கிறது. மிரட்டுகிறாயே கூரையை ரிப்பேர் செய்து தராமலா போய் விடுவோம்!''

''எப்போது?''

''எப்படிச் சொல்ல முடியும்? இரண்டு நாட்களாகலாம், இரண்டு மாதங்களாகலாம். இரண்டு வருஷங்களுமாகலாம். நல்ல வேலை, இத்தனை காலத்துக்குள் வீட்டு ரிப்பேரை முடிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தமில்லே!''

ராஜா விழித்துக் கொண்டார். ''ஒரே வார்த்தை. நீங்கள் கூரையை மூடப் போகிறீர்களா இல்லையா?'' என்றார்.


நகைப்புடனேயே, ''அதற்கென்ன, ஆகட்டும், பார்க்கலாம்'' என்றான் சாமிநாதன்.

''உங்கள் நோக்கம் தான் என்ன? பளிச் சென்று சொல்லி விடுங்கள்'' என்றார் ராஜா.

''எல்லாம் தெரிந்தது தானே. தயவுசெய்து வாடகைப் பாக்கியைக் கொடுத்து விட்டு வீட்டைக் காலி செய்து விடுங்கள்'' என்று சாமிநாதன் சொல்ல, ''இதைப் பல தடவை கடிதத்திலும் எழுதியிருக்கிறோமே!'' என்று கிருஷ்ணமூர்த்தி முத்தாய்ப்பு வைத்தான்.

''வாடகைப் பாக்கி கொடுக்க முடியாவிட்டால்? நினைத்த நிமிஷத்தில் எனக்குப் பணம் கிடைக்கிறதா?''

''அதுவரை எனக்கும் கூரை ரிப்பேரைத் தொடர்ந்து செய்யச் சௌகரியம் இருக்காது! அது மட்டுமல்ல. கூரையை ஒரேயடியாகப் பிரித்துப் புதுக் கூரை போட வேண்டும் என்ற எண்ணம்கூட எங்களுக்கு இருந்து கொண்டேதானிருக்கும்!''



பாட்டி: ஏண்டா, மணி! உங்கப்பாவும் பெயிலானதில்லே, உங்க தாத்தாவும் பெயிலானதில்லே. நீ இப்படிப் பெயில் ஆகியிருக்கயே?

மணி: ஏன் பாட்டி பொய் சொல்லறே? தாத்தாவுக்கு 'ஹார்ட் பெயில்' ஆகியிருக்காமே?

ராஜா பதில் பேசவில்லை. அவருக்கு அதற்குமேல் என்ன செய்வதென்று புலப்படவில்லை. தம் ஜம்பம் அவர்களிடம் இனிமேல் சாயாதென்று தெரிந்து கொண்டு விட்டாரோ என்னவோ?

° ° °

இரண்டே நாட்களில் வீடு காலியாகி விட்டது. வாடகைப் பாக்கியைக்கூட நெறித்துப் பிடித்து வாங்கி விட்டான் சாமிநாதன். ராஜா வீட்டைக் காலி செய்து கொண்டு போய் விட்டதால் வீட்டுக் கூரை ரிப்பேர் கூட அடுத்த இரண்டே நாட்களில் முடிந்து விட்டது!

''இவ்வளவு சுலபத்தில் இது நடக்கும் என்று நான் நம்பவேயில்லை'' என்றான் சாமிநாதன் மிகுந்த மகிழ்ச்சியோடு. விடாக்கண்டர் ராஜாவை சுலபமாகக் காலி செய்ய வைத்துவிட முடியும் என்று சாமிநாதன் கனவிலும் கருதவில்லை.

கிருஷ்ணமூர்த்தி சிரித்தான். இருவரும் கிருஷ்ணமூர்த்தி வீட்டில் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன கிருஷ்ணமூர்த்தி! சட்டப்படி ஒன்றும் செய்ய முடியாது என்றாயே. இப்போது நீயே அவரைச் சட்டப்படி வெளியேற்றி விட்டாயே!'' என்று கூறிச் சாமிநாதன் நகைத்தான்.

கிருஷ்ணமூர்த்தி கடகட வென்று சிரித்தான். வாயில் அடக்கியிருந்த புகையிலைச் சாறு வெடெங்கும் சிந்திவிடும் போல் இருந்தது. அதை ஒருவாறு சமாளித்துக் கொண்டே, ''சட்டப்படியா? சட்டப்படி வெளியேற்றினேன் என்று யார் சொன்னது? வீட்டுக்காரர் வீட்டை ரிப்பேர் செய்யச் சட்டம் இடம் தருகிறதே தவிர, பூட்டின வீட்டின் கூரை மேல் ஏறச் சட்டம் இடம் தருகிறதா, என்ன! ஹ்ஹ்ஹாம்! அது எனக்குத் தெரியும்தான். ஆனால் அரை குறைச் சட்டம் தெரிந்து கொண்டு உன் போன்ற அப்பாவிகளை வாட்டி வதைக்கிற பேர்வழிகளை வழிக்குக் கொண்டு வரச் சட்டத்தின் கடைசி எல்லைவரை போக அவசியமிராது என்று தெரியும். தகலடி அடித்தேன்! பலித்து விட்டது!'' என்றான். தனது சட்ட ஞானத்துக்கும் நல்ல பலன் கிடைத்து விட்டதை நினைத்து அவன் பெருமைப் பட்டுக் கொண்டதில் அதிசயமில்லை.

''அவ்வளவுதானா: சட்டம் ஒரு கழுதை தான்னு சொல்லு!''

கிருஷ்ணமூர்த்தி பதில் சொல்ல வில்லை. சட்டம் ஒரு கழுதையாக இல்லாவிட்டால் தன் போன்ற ஆட்களுக்கு ஜீவனம் எப்படி நடக்கும் என்று தன்னுள் நினைத்துக் கொண்டே சிரித்தான்.

வளர் பிறை



கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தமோ அதே சம்பந்தம் தான் வளர்பிறை என்ற பெயருக்கும் படத்துக்கும்.

படம் ஆரம்பிக்கும்போது உண்டாகும் அதிர்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. எடுத்த எடுப்பிலேயே மரணக் காட்சி! படுத்த படுக்கையிலிருக்கும் ஒரு பெரியவர் ''என்னும் எழுத்தும் கண் எனத் தகும்'' ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' ''தீயாரைக் காண்பதுவும் தீது!'' என்ற மூன்று நீதி வாக்கியங்களைச் சொல்லிவிட்டுக் கண்ணை மூடினால் நாமும் அதன் பிறகு கண்ணை மூடிக்கொண்டு விட வேண்டுமா என்ன?

ஒரு மிராசுதாரருக்கு ஓர் அசட்டுப் பையனும் ஒரு பெண்ணும் சந்ததி. அசட்டுப் பையன் ஓர் அனாதைப் பெண்ணைக் காதலிக்கிறான். தந்தை சம்மதிக்கவில்லை. தாய் சம்மதித்துக் கல்யாணம் செய்து வைக்கிறாள்! இதனால் பெண்ணின் கல்யாணம் தடைப்படுகிறது. தந்தைக்கு மணி என்ற துஷ்டன் சகவாசம் ஏற்படுகிறது.—இதுவரை திரைக் கதையை நாம்தான் தள்ளுகிறோம். அசட்டுப் பிள்ளைக்கு நாக்கு இழுத்துக் கொண்டு போய்ப் பேச முடியாத நிலை ஏற்படுகிறது. மகனின் மனைவி வீட்டைவிட்டு ஓடி விடுகிறாள்! துஷ்டன் கூட்டுறவினால் தந்தை கடன்களுக்கு ஆளாகி, கொலைக்கேசும் வரும் போலிருக்கிறது. இதிலிருந்து தப்பத் துஷ்டன் அவர் மகளைத் தனக்குக் கட்டித் தருவதுதான் வழி என்கிறான்! தந்தையின் மனம் ஒப்பவில்லை. தந்தைக்காக மகள் சம்மதிக்கிறாள். பிறகு கதை தானாகவே வேகமாக ஓடிச் சுபமாக முடிகிறது!

அசட்டுப் பிள்ளையாக சிவாஜி கணேசனும், அனாதைப் பெண்ணாகச் சரோஜா தேவியும் நடிக்கின்றனர்.

சிவாஜி கணேசன் ஊமையாகிப் போய், முகபாவங்களினால் ''டைலாக்'' பேசும் இடங்கள் அவர் இதுவரையில் நடித்த பாகங்களையே வென்று விடுகின்றன!


தாயாக நடிக்கும் எம். வி. ராஜம்மா அவர்கள் தற்கொலை செய்து கொள்ளப் போகும் தனயனைத் தடுத்து, ''உன் உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கு உரிமை ஏது?'' என்று கேட்கிற கட்டம் உணர்ச்சி மயமாக இருக்கிறது!

வில்லனாக நடிக்கும் எம். ஆர். ராதா பாகத்தில் புதுமை எதுவும் இல்லை.

மேக்கப்காரர்கள் கிழவியைக் குமரியாக்கலாம், குமரியைக் கிழவியாக்கலாம். ஆனால் முகத்தில் வெடிக்கும் பருக்களை எப்படி மறைப்பார்கள்? சரோஜாதேவியின் முகத்தில் காட்சிக்கு ஒரு பரு அதிகமாகக் காட்சி தருகிறது.

கதையில் பல ஓட்டைகளைக் காணலாம்! 'இதற்கும் அதற்கும் பொருத்தமில்லையே!' என்று நினைக்கலாம். இருந்தாலும் ஆங்காங்கு சிதறி இருக்கும் நல்ல அம்சங்கள் மனத்தில் உறைக்கும்படியாக இருப்பதால் ஒருவித மன நிறைவு ஏற்படுகிறது!

வளர்பிறையை ஒரு முறை பார்த்து வைக்கலாம்; அல்லது பார்த்து வையலாம். இரண்டுக்கும் இடம் இருக்கிறது.



எல்லோரும் வாழவேண்டும்

சில படங்கள் உள்ளத்துக்கு இதமளித்து இனிக்கும்; வேறு சில படங்கள் மனக் கசப்பை உண்டாக்கும்; இன்னும் சில சினிமாக்கள் பார்த்துப் புளித்துப் போன பழைய சமாசாரமெனத் தோன்றும். இம் மூன்று வகையிலும் சேராது தனித்து நிற்கும் உப்புச் சப்பில்லாத நான்காவது விதம் ஒன்று உண்டு. 'விக்ருவிட் பாரபின்' தெரியுமோ இல்லையோ . . . . ருசியுமின்றி மணமுமின்றி வழவழ கொழ கொழவென்று . . . . . இந்த வகையைச் சேர்ந்ததுதான் எல்லோரும் வாழ வேண்டும்!

படத்தில் சம்பந்தப்பட்டவர்களையே உண்மையைச் சொல்ல வைப்பது சாத்தியமாகி விட்டால் அவர்கள் இப்படிப் பேசலாம்:

எம். ஆர். ராதா : இந்தப் படத்திலே 'ஸ்டார்' நான்தான். பார்த்து விட்டுத் திரும்புகிறவங்க என்ன சொல்லுறாங்க கேட்டீங்களா? 'எம். ஆர். ராதா பாருடா! அசல் ரிக்ஷாக்காரனைப் போலவே இன்னுக்கின்னு போறான். படா தேக்கா' என்கிறார்களல்லவா? வேறே என்னேய்யா வேணும்? ஆனால் காதல் காட்சிகளிலே நடிக்கிற வயசில்லே இதுங்கிறது டைரக்டருக்குப் புரியவில்லே. நல்ல வேளையா சமயத்திலே முழிச்சுக்கிட்டு அந்த ஸீன்களையெல்லாம் தபால் தலையளவுக்குச் சின்னதாக்கித் திரையின் மற்றப் பகுதிகளைக் கறுப்பா அடிச்சுட்டாங்க. அப்பா, பிழைச்சேன்!

கதை வசனம் - ரவீந்தர்: 'இடை வேளை' என்கிற வார்த்தை எப்படிச் சுழன்று சுழன்று வருது கவனிச்சீங்களா? பார்க்கிறவன் தலையும் சுழலுகிற மாதிரியில்லே நம்ப கதை? மெட்ராஸுக்குப் பக்கத்திலே தேக்கு எஸ்டேட் இருக்குது. அதிலே ஆதிவாசிகள் போன்ற ஒரு கூட்டம் வசிக்குது – ஆ! அது தான் புதுமை!– ஊட்டி, கோடை போன்ற மலைச் சாலை வழியே மேலே போகிறப்போ திடீருன்னு சவுக்குத் தோப்பு வருது—இன்னும் என்னென்னவோ ஜகஜ்ஜாலப் புரட்சியெல்லாம் நடக்குது – விஷயம் என்ன தெரியுமா? இங்கொன்றும் அங்கொன்றுமாய்க் கொஞ்சம் 'ஐடியாஸ்' கிடைச்சுது. எல்லாவற்றையும் சேர்த்து வைச்சு ஒட்டுப் போட்டேன். பட்பட்டுன்னு தையல் விட்டுப் போச்சு. நான் என்ன பண்ண!

எஸ்பது அழகி லேலா: என்ன கேட்டீங்க? 'எஸ்பது நாட்டை விட்டு, இங்கே வருமாறு யார் வருந்தி அழைச்சது' என்றா? ஏனய்யா, எனக்குத் தெரியாதா, இங்கேதான் நான் பிழைக்க முடியும்னு.

பாலாஜி: ஹீரோவுக்கு மட்டுமென்ன, யாருக்குமே அதிகமா வேலை ஒண்ணுமில்லே. மூக்கும் முழியுமா ஒருத்தன் வேணும்னு என்னைப் புடிச்சுப் போட்டிருக்காங்க போலே இருக்கு. சே! நல்ல 'சான்ஸ்' ஒண்ணு கிடைக்க மாட்டேங்குதே நம்ப திறமையைக் காட்ட?

நாகேஷ்: எம். ஆர். ராதா பேசற வசனத்திலே ஒரு வரி:– 'உனக்கென்று ஒரு பாணியை ஏற்படுத்திக் கொள்ளணும்டா. யாரையாவது பார்த்துக் காப்பி அடிச்சா அந்த ஒரிஜினல் நடிகன் ஞாபகம்தான்டா வரும்! அவன் புகழ்தான் வளரும்!' என்கிறார் யாரோ ஒரு நடைபாதை நடிகனிடம். என்னைத் திரையிலே பார்க்கிற போது அமெரிக்க ஹாஸ்ய நடிகர் ஜெர்ரி லூயிஸ் ஞாபகம் வருதா? அவர் புகழ் ஓங்குக!

அசோகன்: கரடித் தோலைப் போர்த்திக்கிட்டுக் கரடியாக் கத்தினேன். சில இடங்களில் 'ஓவரா'ப் போயிடுத்து. ''விசித்திரமே மனிதன் சரித்திரமே' என்ற பாட்டின்போது முக பாவங்களால் உணர்ச்சிகளைக் கொட்டி நடிச்சேன். படத்தை மொத்தமா பார்க்கிற போது இந்த நல்ல அம்சம்கூட எடுபடாமல் போயிடுதே. என்ன செய்ய?


புளிமூட்டை: ரொம்ப இளைச்சுட்டேன்!

மாலினி, ராஜேஸ்வரி: ஏதோ வந்தோம், போனோம்.

பாடல் – வில்லிபுத்தன்: விடியும் வரை... என்று சீர்காழி கோவிந்தராஜன் கம்பீரமாக ஆரம்பிச்சுப் பாடுகிறாரே அது ஒண்ணுமட்டும் போதாதா? பாக்கியைப் பற்றி ஏன் நீங்க கவலைப்படறீங்க?

படாதிபதி: திரைப்பட உலகக் காரியங்கள் யாவற்றையும் பச்சையாக வெளியிடச் செய்திருக்கிறேன். அப்படியும் சனிக்கிழமை மாலையில் கூடத் தியேட்டரில் கூட்டத்தைக் காணுமே. மக்கள் அவ்வளவு தூரம் முன்னேறி விட்டார்களா, என்ன?

ஆக்கக்கூடி: கார் ரிக்ஷா சவாரி – அரை மணி, நடனக் கூத்து - அரை மணி, சிரிப்பு வராத தமாஷ்—அரை மணி, குத்து, அடி, உதையோடு கட்டிப் புரளல் – முக்கால் மணி, பாட்டுக்கள் – அரை மணி, உணர்ச்சிமிக்க நடிப்பு – பத்து நிமிஷம் என்று கணக்குப் போட்டால் ஏறக்குறைய சரியாகத் தான் இருக்கும். இருந்தாலும் இடைவேளைக்கு ஈடாகுமோ!



புது வெள்ளம்

அகிலன்

அத்தியாயம் முப்பத்தேழு

வாழ்க்கையே நாடகமா?

கோடம்பாக்கம் 'ஸ்டுடியோ'வில் எதிர்பாராத விதமாகச் சுகுணாவைச் சந்தித்த குருசாமிக்கு, அதை விட்டு வெளியேறி அவனுடைய அறைக்கு வந்து சேர்ந்த பிறகும் அவளைக் கண்ட அதிர்ச்சி தீரவில்லை. உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டிச் சட்டை நனைந்து விட்டது. தரையில் வந்து குப்புற விழுந்தான். கண்களை இறுக மூடிக் கொண்டான். எந்தக் கோலத்தில் சுகுணாவை அவன் கண்டு வந்தானோ அந்தக் கோலத்தை அவன் தனது நினைவிலிருந்து அழிக்கப் பார்த்தான்.

சுகுணாதான் அவள்! இந்தச் சில மாதங்களுக்குள் எப்படி அவளால் இவ்வளவு தூரம் உருக் குலைந்து போக முடிந்தது?

முதன் முதலில் அவளை அவன் கண்ட காட்சி இன்னும் அவனுடைய மனத்தின் அடித்தளத்தில் பசுமையாக இருந்தது. ஏதோ ஒரு நாடகத்தில் அவள் நடித்தபோது அவன் பார்வையாளனாகச் சென்றிருந்தான். அவளது துடுக்குத்தனமான பேச்சும், மிடுக்கான நடையழகும், குறுகுறுத்த விழிகளும், கட்டுக் குலையாத உடல் வனப்பும், பொங்கும் இளமையின் பூரிப்பும் அவனை அப்போதே ஆட்கொண்டு விட்டன. மீண்டும் சில முறை அவளுடைய நடிப்பைக் காண்பதற்காகச் சென்றான். பிறகுதான் தன்னுடைய நாடகக் குழுவில் அவள் நடிக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அவளைத் தேடிக் கொண்டு அவளுடைய வீட்டுக்கு வந்துசேர்ந்தான்.

கலைக்குழுவின் பொறுப்பாளனாக இருந்த ஒரே காரணத்தால் குருசாமி அவளிடம் தன்னுடைய மனத்தின் ஆழத்திலிருந்த எண்ணங்களை வெளியிடவில்லை. பிறவி நடிகையல்லவா? அவளுடைய நடிப்புக்காக மட்டுமே அவளைத் தன் குழுவுக்கு அழைத்தது போல் கடைசி வரையில் சாதிக்கப் பார்த்தான். அவனுடைய சாதனைக்கு வெற்றி கிடைத்தது; அவனுக்கு மட்டும் அது கிடைக்கவில்லை.

வெளியில் பல இடங்களில் சுகுணாவையும் அந்த இளைஞனையும் ஒன்றாகக் கண்டபோதுகூட இவ்வளவு துன்பம் அவனுக்கு ஏற்படவில்லை. அவள் அப்போதெல்லாம் தனது உடல் வனப்பில் புது மெருகு பெற்றிருந்தாள். புத்தாடைகளும் புதிய நகைகளுமாய்க் கண்ணைக் கவரும் வகையில் அவள் காட்சியளித்தாள். 'என்னால் உனக்குக் கொடுக்க




முடியாத வாழ்வும் வசதியும் அவனால் கிடைக்கிறது. எப்படியாவது நீ நன்றாக இருந்தால் போதும்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்ள முயன்றிருக்கிறான்.

ஆனால் இப்போது?....ஒரு சிறு நகையில்லை; நல்ல துணியில்லை; நல்ல சாப்பாடு கூடப் பல நாட்களாகக் கிடைத்திருக்காது போலிருக்கிறது. இந்த நிலையில் அவள் ஒரு தாய்.!

கூட்டத்தில் ஒருத்தியாக நிற்பதற்குத் தினக் கூலியை எதிர்பார்த்து அவள் அங்கே 'நடிக்க' வந்திருக்க வேண்டுமென்றால், அவளுடைய நிலை எவ்வளவு பரிதாபகரமாக இருந்திருக்குமென்று அவன் ஊகித்துப் பார்த்தான். அவனால் அதைத் தாங்க முடியவில்லை; தாங்கவே முடியவில்லை.

அவள் இன்னும் 'ஸ்டுடியோ'வை விட்டு வீட்டுக்கு வந்திருக்க மாட்டாள் என்பதால், அவள் இல்லாத சமயத்தில் அந்த இளைஞனை மட்டும் சந்திக்க வேண்டுமென்பதற்காக, அவசரமாகப் புறப்பட்டான் குருசாமி. எப்படியாவது அவனிடம் விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும், எப்படி அவர்களுக்கு இந்த நிலை வந்தது? எப்படி அவன் வாயும் வயிறுமாக இருக்கும் ஒருத்தியை மனம் துணிந்து அங்கே அனுப்பலாம்?



முன்பின் அறிமுகமில்லாத ஒருவனிடம் எப்படிப் பேசிப் பழக வேண்டும் என்பது பற்றித் தனக்குள் ஓர் ஒத்திகை நடத்திப் பார்த்துக் கொண்டு, மீண்டும் கோடம்பாக்கத்துக்குக் கிளம்பினான் குருசாமி. ஆனால் அங்கே அவர்களுடைய வீடு பூட்டிக் கிடந்தது. ஒரு வேளை அவனும் அவளுடன் புறப்பட்டிருப்பானோ என்று கூட நினைத்தான்.

விசாரிப்பதற்காக அடுத்த வீட்டுக்குள் நுழைந்த போது, அங்கு ஒரு கிழவி வெற்றிலை பாக்கை இடித்துத் துவைத்துக் கொண்டிருந்தாள். நீட்டிய கால்களை மடக்காமல் குருசாமியை வெறித்துப் பார்த்தாள். அவளுடைய தனிமையில் குருசாமி குறுக்கிட்டதை அவள் விரும்பவில்லை என்று தெரிந்தது.

குருசாமி மெதுவாகப் பேச்சுக் கொடுத்துக் கிழவியிடம் செய்தியைக் கேட்டுக் கொள்ளப் பார்த்தான். தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறாமல், அடுத்த வீட்டு நடிகையை நாடகத்துக்காகப் பார்க்க வந்திருப்பதாய்த் தெரிவித்தான்.

கருணாவின் பெயரைக் கேட்டவுடனேயே கிழவிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்து விட்டது. வந்திருப்பவன் புதிய மனிதன் என்பதைக்கூடப் பாராமல் வாய்க்கு வந்தபடி கருணா

வைத் திட்டத் தொடங்கி விட்டாள். பேசுவதை அவள் நிறுத்தக் காணோம். 'அடுத்த வீடு பகை வீடா?'

''பாட்டி! பாட்டி! நான் வந்து...''

''நாடகம் நடிக்கிறாங்களாம், நாடகம்! என் கிட்டயா நீ நாடகத்தைப் பத்திப் பேச வந்திட்டே? அவளோட சொந்த நாடகமே பெரிய நாடகமாப் போயிடுச்சே. இனிமே எப்படி அவள் நடிக்கப் போறாளாம்? நீ பாட்டுக்கு வந்த வழியைப் பார்த்துக்கிட்டுத் திரும்பிப் போ! அவளோட திமிருக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேணும். ரத்தத் திமிருடா, ரத்தத் திமிரு!''

''விஷயத்தைச் சொல்ல மாட்டேங்கிறியே பாட்டி!'' என்று மெதுவாக அவளுடைய வெற்றிலைக் கலவைக்கு உதவி செய்யத் தொடங்கினான் குருசாமி.

''எல்லாம், வழக்கமா உங்களோட நாடகத்திலே நடக்கறதுதான் இங்கேயும் நடந்திருக்கு!.... அந்தப் பயலை அவனோட அப்பன்காரன் வந்து கட்டையாலே அடிச்சு இழுத்துக்கிட்டுப் போய் விட்டான். இவ இங்கே...சொல்றதுக்கு வாய் கூசுது; நீ போய்த் தொலை!...தெரியாமலா எவனோ சொல்லி வைச்சிருக்கான்? பொண்ணு சிரிச்சாப் போச்சு; புகையிலை விரிச்சாப் போச்சு!....''

பொக்கை வாய்க் கிழவி குருசாமி கொடுத்த வெற்றிலைக் கலவையோடு, ஒரு துண்டுப் புகையிலையை எடுத்து, வாயில் அடக்கிக் கொண்டாள்.

குருசாமியின் கண்கள் கலங்கின. சட்டைத் துணியால் கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு எழுந்திருக்கப் போனான். பாட்டிக்கிழவி தன் கண்களை இடுக்கிக் கொண்டு அவனை உற்றுப் பார்த்தாள். அவனுடைய கண்களின் வழியாக அவன் மனத்தை ஊடுருவினாள்.

''ராஜா! ஏண்டா ராஜா நீ அவளுக்காக அழுகிறே? அவளோட தலையெழுத்தை இனிமே நீயோ நானோ அழிச்சு எழுத முடியுமா?...உன்னை நான் முதல்லே தப்பா நினைச்சிட்டேன்...சில நாய்கள் இங்கே நாடகம் சினிமான்னு சொல்லிக்கிட்டு அவளோட மிச்சம் உசிரையும் வாங்கப் பாக்குது......பாவம்! அவளை என்னோட பேத்திக்குச் சமமா நினைச்சுக்கிட்டிருக்கேன்...பயந்துக்கிட்டு அவ என்கிட்டே ஒளிஞ்சுக்கிட்டிருக்கிறா. நான்தான் இப்படி யார் வந்தாலும், வர்றவங்களைப் பார்த்து நாயாக்குலைச்சு அனுப்பறேன். ... என்னாலே அவளுக்காகக் குலைக்கத்தான் முடியுது. வயசாயிடுச்சு பாரு!'' — கிழவியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''பாட்டி! அவளுக்குச் சாப்பிட்றதுக்கு வழி?''

''வழி?...போய், இந்த வடபழனி ஆண்டவனையே கேள்!.....எப்படியோ காலத்தை ஓட்டுறா. ஆனால், அந்தப் பயல் ஓடிப் போனதுக்கப்புறம், வேறே யாரையும் கண்ணெடுத்துப் பார்க்கலேங்கறது அந்த முருகனுக்கு நல்லாத் தெரியும்.''

குருசாமியின் மனம் விவரிக்க முடியாத ஒரு சுமையிலிருந்து விடுபட்டது போல் உணர்ந்தது.

''ஆமா, நீ யாருன்னு சொல்லலையே?'' என்று கேட்டாள் பாட்டி.

''நான் அவளுக்குச் சொந்தக்காரன்; ஆனால் நான் வந்ததோ கேட்டதோ அவளுக்குத் தெரிய வேண்டாம். தெரிஞ்சா அவ ரொம்பவும் கஷ்டப் படுவாள்.''

''இனிமே அவள் பட வேண்டிய கஷ்டந்தான் சகிக்க முடியாத கஷ்டம். எப்படிக் குழந்தையைப் பெத்து எப்படி வளர்க்கப் போகிறாளோ?''

அதற்கு மேலும் குருசாமியால் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. தான் வந்ததைச் சுகுணாவிடம் சொல்ல வேண்டாமென்று திரும்பத் திரும்ப அவளைக் கேட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான். கையில் காசில்லை; காதலியோ தாயானாள்; மருத்துவம் பார்க்கப் பணம் வேண்டும். எங்கு போவது? எப்படித் தேடுவது?

அத்தியாயம் முப்பத்தெட்டு

கைகொடுத்த தெய்வம்

ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்த சிங்கரேணியிலிருந்து வழக்கம் போல் இப்போதும் சுந்தரம் முருகையனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். முருகையன் பிரித்துப் படிக்கலானான்.

அன்புள்ள முருகையனுக்கு ஆசி.

இங்கு மீனாட்சி குழந்தைகள் முதலிய யாவரும் நலம். அங்கு உன்னுடைய நலனையும் எழுது. இப்போது எனக்கும் மீனாட்சிக்கும் இந்த ஊர் மிகவும் பிடித்து விட்டது. குழந்தைகளும் சென்னையிலிருந்ததை விடக் குதூகலத்தோடும்

ஆரோக்கியத்தோடும் இருக்கிறார்கள். என்னுடைய வேலை அலுவலகத்தில் உள்ளவர்களுக்குப் பிடித்திருப்பதால் அவர்களும் என்னிடம் அன்போடு நடந்து கொள்கிறார்கள். கடவுள் அருளால் எங்களுக்கு இப்போது ஒரு குறையுமில்லை.

காடுகளும் மலைகளும் நிறைந்த வளமான இடத்தில் ஊர் இருக்கிறது. ஊருக்குச் சிறிது தூரத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டியிருக்கிறார்கள். சுரங்க வேலைத் தொழிலாளர்களுக்கு மட்டிலும் மிகவும் சிரமமான வேலை தான். கம்பெனி இன்னும் வெள்ளைக்காரர்களிடம் இருப்பதால், தொழிலாளர்களுக்கான வசதிகளை அவர்கள் சரிவரக் கவனிக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். என்றாலும் உழைத்தால் கட்டாயம் உணவு கிடைக்கும் என்ற நிலைக்கு இப்போது வந்திருக்கிறார்கள். விரைவில் இதிலும் முன்னேற்றம் தெரியும். நான் நிர்வாக அலுவலகத்தில் இருப்பதால் குடும்பத்துக்குப் போதுமான சம்பளம் கிடைக்கிறது.

சாந்தாவுக்கு உடல் நலமில்லாதிருந்த சமயத்தில் நீ போய்ப் பார்த்து வந்ததாகத் தெரிகிறது. இப்போது முழுவதும் தேவலாமாம். கூடுமானால் சாந்தாவுக்கும் அவள் தங்கைக்கும் ஏதாவது வேலை தேடிக் கொடுத்து அவர்களை இங்கே அழைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். மீனாட்சிக்கும் அது உதவியாக இருக்கும்.

ஆமாம்! உன்னுடைய கல்யாண விஷயத்தைப் பற்றி நீ ஏன் இன்னும் எனக்கு எழுதவில்லை? சாந்தா எழுதிய பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அந்தச் செய்தியைப் படித்தவுடன் எங்களுக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா? நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன். கல்யாணம் நிச்சயமானவுடன் முன்கூட்டியே எனக்குத் தேதியைக் குறிப்பிட்டு எழுது. அவசியம் நாங்கள் எல்லோரும் வருகிறோம்.

சித்திராவை எங்களுக்கு நேரில் தெரியாதென்றாலும் இப்போதே எங்களுடைய வாழ்த்துக்களைச் சொல்லிவிடு. கல்யாணம் முடிந்தவுடன் நீங்கள் இருவரும் எங்களுடன் புறப்பட்டு வந்து இங்கு ஒரு வாரமாவது தங்க வேண்டும். காடுகளும் மலைகளும் நிறைந்த இயற்கை அழகை நீங்கள் இங்கு ரசிக்கலாம். இயற்கையின் மடியிலிருந்து மனிதன் தோண்டி எடுக்கும் கறுப்புத் தங்கப் பாளங்களையும் பார்க்கலாம். நிலக்கரியை இங்கே கறுப்புத் தங்கம் என்றுதான் சொல்கிறார்கள்.



''கிளி வியாபாரம் எப்படி இருக்கு?''

''அமோகம் போங்க! நூறு கொண்டுவந்தாலும் உடனே பறந்து போயிடுதுங்க.''

பாதாளச் சுரங்கத்துக்குள் இறங்கி, மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் மனிதர்கள் பாடுபட்டு உழைக்கும் காட்சியை நான் இங்கு கண்டது போல் வேறு எங்குமே கண்டதில்லை. இது ஒரு தனியான உலகம்; இதை ஒரு முறை சுற்றிப் பார்ப்பதே வாழ்க்கையில் தனியான அநுபவம்; நீங்கள் இங்கே வரும்போது உங்கள் இருவரையும் சுரங்கத்துக்குள் அழைத்துச் சென்று காட்ட ஏற்பாடு செய்கிறேன். — முதலில் கல்யாணத் தேதியைத் தெரிவி.

உன் அன்புள்ள,
சுந்தரம்

கடிதத்தை மூன்றாவது முறையாகப் படித்துக் கொண்டிருந்தான் முருகையன். தன்னை மறந்து அவன் கடிதத்தில் மெய்ம்மறந்திருப்பதைக் கண்ட சித்திரா, மெதுவாக அவனருகில் சென்று எட்டிப் பார்த்தாள். தானும் ஒன்றாகவே நின்று அதைப் படித்தாள்.

படித்து விட்டு, ''அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறினாள் எதையோ நினைத்துக் கொண்டவள் போல்.

முருகையனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''எதற்காக மன்னிப்பது சித்திரா?'' என்று கேட்டான்.

''அந்தப் பெண் சாந்தாவைப் பற்றி நான் தவறாக நினைத்து விட்டேன். நம்முடைய கல்யாணத்தைப் பற்றி அவளுக்கு இவ்வளவு ஆவல் இருக்குமென்று எனக்குத் தெரியாது.... நீங்கள்கூட அவள் இதையெல்லாம் விசாரித்ததாக என்னிடம் சொல்லவில்லையே?''

''சொல்வதற்கு நீ என்னை விட்டால் தானே? நீதான் அவள் பெயரைக் கேட்ட வுடனேயே ஆத்திரப்பட்டாயே?''

''அதற்காகத்தானே இப்போது நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்!... சீக்கிரம் நாம் இருவருமே ஒரு முறை அவளைப் போய்ப் பார்ப்போம். நாமே சேர்ந்து போய் அவளை நம் கல்யாணத் துக்கு நேரில் அழைப்போம்.''

முருகையனுக்கு இப்போது பெருமை தாங்கவில்லை. திடீரென்று சந்தேகப்பட் டுக் கொண்டு அவனுக்குத் தடை உத் தரவு விதித்த அதே சித்திரா, இப் போது மனம் மாறி விட்டது கண்டு பூரிப்படைந்தான்.

''உங்கள் நண்பர் எழுதியிருப்பது போலவே அவருக்கும் முன்னால் எழுதி விடுங்கள். அவர்கள்தான் இங்கு வந் திருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரர்களாக இருந்துதிருமணத்தைநடத்திக் கொடுக்க வேண்டும். கட்டாயம் நாம் அவருடைய ஊருக்குப் போவோம். நான் கூட நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்த்ததில்லை, அத்தான்! பூமிக்குள்ளே எங்குமே இருளாக இருக்கும் பாதாளச் சுரங்கத் துக்குள் நாம் போவதென்றால் பயமாக இருக்காதா?''

சிறு குழந்தை போல் கேள்வி கேட் கும் அவளைப் பார்த்து இலேசாகச் சிரித் தான் முருகையன்.

''நான் பக்கத்தில் இருக்கும்போது உனக்கென்ன பயம்? அவசியமானால் நமக்கெல்லாம் தலையில் ஒரு விளக்குத் தொப்பி மாட்டி விடுவார்கள். அந்தத் தொப்பி இருப்பதால் ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொள்ளாமல் வழி கண்டுபிடித்துச் சுரங்கத்துக்குள் வளைந்து வளைந்து போகலாம்.''

''தலையில் என்னைக் குல்லாய் போட் டுக் கொள்ளச் சொல்கிறீர்களா? வேண் டவே வேண்டாம்! உங்களுடைய கரத்தை இறுகப் பிடித்துக் கொள் கிறேன். அது போதும் எனக்கு!''

''அப்படியானால் இன்றைக்கே நான் நிலக்கரிச் சுரங்கத்துக்குள் இறங்கத் தயார்!'' என்று கூறிக் கலகல வென்று சிரித்தான் முருகையன்.

வீட்டுக்குள் ஏற்கனவே திருமணப் பேச்சு வெளிப்படையாக ஆரம்பமாகி விட்டது. சித்திராவின் தாயார் பொன் னம்மாள் அதற்கு வேண்டிய சாமான் களை வாங்கிக் குவிப்பதில் தீவிரமாக இருந்தாள். பெண்ணும் மாப்பிள்ளை யும் தனியாகக் குடித்தனம் நடத்து வதாக இருந்தால், அதற்கு எவ்வளவு சாமான்கள் வேண்டுமோ, அவ்வளவை யும் சேகரிக்கத் தொடங்கி விட்டாள். வெள்ளிப் பாத்திரங்களும் தங்கநகை களும் பட்டுப் புடவைகளும் வீட்டுக்குள் வரிசைக்கிரமமாக நுழைந்து வந்தன.

சித்திரா இது பற்றியெல்லாம் உற் சாகத்துடன் முருகையனிடம் பேசிக் கொண்டிருந்த போது, அங்கு குருசாமி வந்து சேர்ந்தான். குருசாமியைச் சித் திராவுக்கு அறிமுகம் செய்து வைத் தான் முருகையன். ஏற்கெனவே குரு சாமியை அவள் நாடக மேடைகளில் பார்த்திருக்கிறாள். அவன் முருகைய னுடைய நண்பன் என்று தெரிந்தவுடன் அவனுக்கு ஆவலுடன் உபசாரங்கள் செய்ய முற்பட்டாள் சித்திரா. பழங் கள், பலகாரங்கள், காப்பி இவ்வளவும் வீட்டுக்குள்ளிருந்து வெளி அறைக்கு வந்து சேர்ந்தன.

சாப்பிட்டுக் கொண்டே மெதுவாகத் தான் வந்த விஷயத்தைக் கூறினான் குருசாமி. எதற்காக உதவி என்ற காரணத்தைச் சொல்லாமல், தனக்கு மிகவும் அவசரமாகப் பண உதவி தேவை என்பதை மட்டும் குறிப்பிட் டான். முருகையன் ஒரே ஒரு கணம்

யோசனை செய்து விட்டு, வீட்டுக்குள் சென்று சித்திராவின் காதில் விஷயத்தைச் சொல்லி வைத்தான். மறு நிமிஷமே இருநூறு ரூபாய்க்கு நோட்டுக்கள் வந்து சேர்ந்தன.

''இந்தச் சமயத்தில் நீங்கள் செய்த உதவியைமறக்கவேமாட்டேன், அண்ணு! மறக்கவே மாட்டேன் அண்ணி!'' என்று நாத் தழுதழுக்கக் கூறி விட்டு, அங்கிருந்து விரைந்தான் குருசாமி.

சுகுணுவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்த பாட்டிக் கிழவியிடம் பணம் கைமாறியது. ''பாட்டி! சுகுணுவுக்குக் கடவுளருளால் ஒரு கஷ்டமும் இல்லாமல் குழந்தை பிறக்க வேண்டும். இந்த நிலைமையில் இந்தப் பணத்தைக் கொண்டு அவளை எவ்வளவு தூரம் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவும் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பேத்திதான் அவள். ஆனால் உங்களுக்கும் உதவி செய்ய வசதி வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இதைக் கொடுக்கிறேன். தயவுசெய்து மறந்தும்கூட நான் வந்ததையோ பணம் கொடுத்ததையோ அவளிடம் சொல்லி விடாதீர்கள். முடிந்தால் ஆஸ்பத்திரியில் வைத்துப் பாருங்கள்'' என்றுன் குருசாமி.

கிழவியால் வாய்விட்டுப் பதில் பேச முடியவில்லை. தன்னுடைய கடைசிக் காலத்தில் பழைய காலத்து மனிதர்களைப் போன்ற ஓர் உயர்ந்த மனிதனைப் பார்த்த உணர்ச்சி அவளுக்கு. ஆனந்தக் கண்ணீர் அவளுடைய இமைகளில் தேங்கி நின்றது.

''குழந்தை பிறக்க எவ்வளவு மாதம் ஆகும், பாட்டி?''

''இது எட்டு மாசமோ ஒன்பது மாசமோ தெரியலே. இதையெல்லாம் யார் கணக்கு வச்சுக்க முடியும்? எந்த நேரத்தில் கடவுளுக்கு மனசு இருக்கோ, அந்த நேரத்திலே அவர் ஒரு புது உசிரை இந்தஉலகத்துக்கு அனுப்பிவைக்கிறுர்.''

''கவனித்துப் பார்த்துக் கொள்ளுங்கள், பாட்டி!''

பாட்டியின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து எழுந்தான் குருசாமி. பாட்டியின் உதடுகள் துடித்தன.

''போயிட்டு வாடா என் தங்கம்! சாகப் போகிற காலத்திலே என்னை ஒரு நல்ல காரியம் செய்யச் சொல்லியிருக்கே. இதைவிட வேறே புண்ணியம் எதுவுமே கிடையாது. நீ போயிட்டு வா; நான் கவனிச்சுக்கிறேன்.''

குருசாமி தெய்வத்தின் ஆசி பெற்றவன் போல் திரும்பி நடந்தான். (தொடரும்)



அன்ன விசாரம்

தாமரைமணாளன்

வெகு சுவாரசியமாகத் தலையை வருடிக் கொடுத்தவாறு தம் அந்திரிருப்புக் கேந்திரமாகிய தைப்பூச மண்டபத்தில் படியேறினார் சிவன் பண்டாரம். பண்டாரத்தின் கரங்கள் தலையை வருடும் சேஷ்டையில் ஈடுபடவேண்டுமென்றால் அதற்கென்று ஒரு மகிழ்ச்சிகரமான வேளை வர வேண்டும்; காரண காரியங்கள் பொருந்தியமைய வேண்டும். பிரஸ்தாப சந்தர்ப்பத்திலும் அப்படியொரு சூழ்நிலை இருந்தது. எண் சாண் உடம்புக்கும் சூட்சுமப் பிரதேசமாகிய ஒரு சாண் வயிற்றுக்கான அன்ன விசாரத் திருச்சேவையில் பகல் முழுதும் ஈடுபட்டிருந்ததில் பண்டாரத்துக்கு ஏற்பட்ட பலாபலன்கள்தாம் அவை.

சிவன் பண்டாரத்தின் பூர்வாசிரமத்திலும் சரி, நிகழ்கால வாழ்க்கையிலும் சரி, கிளறிப் பார்க்கத் தக்க விசேஷம் ஒன்றுமில்லை. அவர் தற்சமயம் நிர்வகித்து வரும் பிச்சையெடுக்கும் உத்தியோகம் அவருக்கு வாரிசு பரம்பரையாக 'ஆகி' வந்ததொன்றுதான். அந்தக் காலத்தில் அவர் தகப்பனார் ரயிலிலும் தெருவிலும், 'தொழில்' செய்தார். மகன் கொஞ்சம் ஞானஸ்தர். அதைக் கோவில் வாசலில் செய்கிறார். அவ்வளவுதான்.

நேற்று வரை அதே தொழில்தான். இன்றும் அதைத்தான் செய்து விட்டுத் திரும்பியிருக்கிறார் சிவன் பண்டாரம். ஆனால் இன்று அவர் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகப் பூரிப்பு. அதற்குக் காரணம், இன்றைய வருமானத்தில் ஏற்பட்டிருந்த மகத்தான ஏற்றமே.

அதென்னவோ, நேற்றுவரை எப்படி வருவோர் போவோருக்கெல்லாம் 'புண்ணியாத்மா' பட்டம் சூட்டி, அவர்களுடைய 'தர்ம சிந்தனை'யைத் தட்டியெழுப்பினாரோ, அப்படித்தான் இன்றும் செய்தார். ஆனால் இன்றைய வரவோ இதுவரையிலிருந்து வந்த வருமான உச்சகட்டப் புள்ளிகளையெல்லாம், 'ரெக்கார்ட் பிரேக்' செய்து விட்டது! நாளது வரை அவருக்குக் கிடைத்து வந்ததில் அதிகபட்சத் தொகை எட்டணாத்தான்; அதுவும் திருவிழாக் காலங்களில்தான். மற்றுப்படி ஆறணாவோடு சரி. இன்றைய வரவோ பதினாறு அணா!

உற்சாக மிகுதியில் சமையலுக்குச் சாமான் வாங்க வேண்டியதைக் கூட மறந்து, தன்

ஜாகையான அக்னிமூலேத் தூணில் சாய்ந்தவாறு சிந்தனையில் ஈடுபட்டு விட்டார் பண்டாரம். நினைக்க நினைக்க இந்தத் திடீர் வருமான உயர்வு அவருக்குப் பெரும் புதிராக இருந்தது.

திடுமென்று ஒரு பொழுதுக்குள் நகரத்துத் 'தர்மப்பிரபு'க்களின் தொகை இப்படிக் கணிசமாகப் பெருகி விட்டதாக அவரால் நம்ப முடியவில்லை. எல்லாம் வழக்கமாக வரும் மாமூல் சேவார்த்திகளின் மாமூல் தான். அவர்களில் கூட ஒன்றிரண்டு பேர் மட்டம் போட்டு விட்டார்கள். குறிப்பாக, பரீட்சை ஒப்பந்தத்தின் பேரில் சுவாமிக்குக் காணிக்கையும் பண்டாரத்துக்கு ஐந்து பைசாவுக்குக் குறையாமல் கொசிறு தர்மம் செய்யும் 'டெம்பரரி' பக்தனை கல்லூரி மாணவன்கூடப் புதுத் திரைப்படம் வெளியாகி யிருந்ததால் அன்று கோவிலுக்கு வரவில்லை. இப்படி எதிர்பாராத வெட்டுக்கள் ஏற்பட்டும் மொத்தத்தில் வருமானம் எக்கச்சக்கமாக ஏறியிருப்பதற்குக் காரணம் அவருக்குப் புலப்படவில்லை.

சிந்தித்துக் கொண்டிருந்தவருக்குத் திடீரென்று நினைவு வரவே, மண்டபத்தின் எதிர் மூலேப் பகுதியை உற்றுப் பார்த்தார். அவருக்கு எல்லாம் புரிந்து விட்டது! 'அந்தப் பயல் சப்பாணி இன்று கோவிலுக்கு வரவில்லையா? அதுதானே பார்த்தேன்! அவன் வந்திருந்தால் தான், 'கால் விளங்காதவன் சாமி, இரக்கம் காட்டுங்க' என்று காது கிழியக் கத்தி வர்றவங்களே உறிஞ்சி எடுத்துடுவானே! அவன் வராததனுல் தான் எல்லாரும் போட வேண்டியதை நம்ம ஓட்டிலே போட்டுவிட்டுப் போயிட்டாங்க!'

சப்பாணி சிவன் பண்டாரத்தின் சகத் தொழிலாளி. மண்டபத்தில் ஆளுக்கொரு மூலேயில் குடியிருப்பு. ஒரேயிடத்தில்தான் பிச்சை யெடுப்பதுவும். பண்டாரம் கோவிலின் உட்பிரகாரத்தில்; சப்பாணி வெளிப்புறத்தில்.

சப்பாணி பேரில் பண்டாரத்துக்கு எப்போதுமே கொஞ்சம் அரிச்சல் உண்டு. காரணம், அவரைவிடப் பொதுஜன அநுதாபம் சப்பாணிக்குத்தான் அதிகம். இருந்தாலும் தம் மன விகாரங்களே வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார் பண்டாரம்.

முந்திய நாள் சப்பாணி அவரிடம், 'எனக்குக் கால்வலி அதிகமாயிருக்கு. நடக்கவே முடியலே, அண்ணுச்சி! உடம்புக்கும் குருகுருன்னு வருது!' என்று கூறியபோது 'த்லொ' என்று பச்சாத்தாபம் தொனிக்க வருத்தப் பட்டுக்கொண்டார். ஆனுல் மனத்துக்குள், 'என்ன பாவம் பண்ணிணுளே, ஆண்டவன் இப்படித் தீராத கால்வீக்கத்தைக் கொடுத்திருக்கிறுன்!' என்றுதான் சிரித்துக் கொண்டார். அப்படியொரு இரட்டை மனப் பம்மாத்து உறவு இருவருக்கும்.

சப்பாணியின் போட்டி யில்லாததுதான் தம் பதிஞ்ை அணு வரும்படிக்குக் காரணம் என்று உணர்ந்ததும், பண்டாரத்துக்கு அந்த விஷயத்தில் கொஞ்சம் சுவாரசியம் குறைந்தாற் போலாயிற்று. ஆனுல் அதன் பேரில் புதிய பிரச்னைகள் தோன்ற ஆரம்பித்தன.

எதிர்மூலேயில் சப்பாணி சுருண்டு கிடந்தான். முந்திய நாள் சாயங்காலமே படுத்தவன்தான். இரவில் பண்டாரத்தோடு அவன் சமையல் செய்யவில்லே. இது அவனேப் பொறுத்தவரை ரொம்ப சகஜம்தான். இரவு வலியென்று படுப்பான். விடியுமுன் ஒன்றுமே யில்லாதது போல் எழுந்து கோவில் வாசலுக்குப் போய் விடுவான். ஆனுல் இன்று எழுந்திருக்கவேயில்லே போலிருக்கிறது!


சிறிது நேரம் தூணில் சாய்ந்தவாறு யோசித்தார் பண்டாரம். இப்போது மனத்தில் வருமானப் பெருமையில்லே; அதைத் தொடர்ந்து ஈடுபடவிருக்கும் உணவுப் பிரச்னையை ஒட்டிய உலோகாயத எண்ணங்கள்: இந்தப் பயல் இரண்டு நாட்களாகச் சோறு தண்ணியில்லாமல் கிடக்கிருனே, பட்டினிக்காரன் முன்னுல் வைத்து எப்படிச் சமைத்துச் சாப்பிடுவது?

கால்மணி நேரத்துக்கு மேலாக இந்தச் சிக்கலில் உழன்ருர் பண்டாரம். இடையே ஒரு வித்தியாசமான எண்ணம். அவனுக்குச் சேர வேண்டிய வருமானமும் சேர்ந்துதானே நமக்குக் கிடைத்திருக்கிறது? அவனுக்கும் சேர்த்துச் சமைத்துக் கொடுத்தாலென்ன? இந்த எண்ணம் தோன்றியதுதான் தாமதம்; அவருடைய உரிமையுணர்ச்சி வீறு கொண்டெழுந்தது. எது அவன் வருமானம்? கண்ட கண்ட நொண்டிப் பயல்களேயெல்லாம் 'மகாராஜா' 'தர்மப் பிரபு' என்று அவனு கெஞ்சினுன்? நான் உழைத்துச் சம்பாதித்ததை அவனுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்ன அவசியம்? அவன் ஒரு மூலேயில் கிடந்தானென்ருல் ஒதுக்குப்புறமாக வைத்துச் சமைத்தால் போகிறது!

அதே தீர்மானத்துடன் எழுந்து, தான் வாடிக்கையாகச் சாமான்கள் வாங்கும் கடையை நோக்கி நடந்தார் பண்டாரம்.

பண்டாரத்திடம் ஓர் உறுதியான கொள்கை உண்டு. மனிதன் எந்தச் சந்தர்ப்பத்திலும் விரலுக்குத் தக்கபடி வீங்கிக் கொள்ள வேண்டும் என்பதே அது. தற்சமயம் அவரது விரல் ஆறணுவிலிருந்து பதினைணுவுக்குப் பருத்திருக்கிறது. அதற்குத் தக்கவாறு சாப்பாட்டின் தரத்தை விஸ்தரித்துக் கொள்வது அவசியமே. மனத்தில் திட்டம் உருவாகியது. ரொம்ப நாட்களாயிற்று, பாயசம் சாப்பிட்டு. கமிஷன் கடை முத்தையாப் பிள்ளே வீட்டுக் கல்யாணத்தில் சாப்பிட்டது தான். நாலேந்து மாதங்களிருக்குமே! பாயசத்துக்கும் சாமான்கள் வாங்கிக் கொள்ளவேண்டும்.


ஹோட்டலில் பால்வாங்கிக் கொள்ளலாம். பவுடர் பாலாகத்தானிருக்கும். பரவாயில்லே. வேறு எவன் இப்போது கொடுப்பான்



‘மனக்கொதிப்பும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன’



நம் வயிறும், மூளையும் நரம்புகளின் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நாம் மனக் கொதிப்பினாலோ அல்லது கவலையினாலோ பாதிக்கப்படும்பொழுது இந்த நரம்புகள் ஜீரணம் செய்வதை தற்காலிகமாக தடுப்பதுடன் ஆட்ரினலின் என்ற சக்திவாய்ந்த அமிலத்தை வெளிப்படுத்தி ரத்தத்துடன் கலக்கிறது. இந்த அமிலம் ஓடியாடி வேலை செய்வோருக்கு மனக்கொதிப்பை எதிர்த்துப் போராட உதவுகிறது. ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் இது தீமையைப் பயக்குவதுடன் அவர்கள் ஜீரண சக்தியையும் குறைக்கிறது. அதனால்தான் வியாபாரத் துறையிலுள்ளவர்களில் 10 பேர்களில் 6 பேர் அஜீரணத்திற்குள்ளாகி, அதன் விளைவாக சாப்பிட்டபின் வயிற்று வலியினால் கஷ்டப்படுகிறார்கள்.





ஹ்யூலட்ஸ் மிக்சர் வயிற்றுவலியை விரைவாகவும் அடியோடும் நிவர்த்திக்கிறது. எரிச்சலை உண்டாக்கும் அமிலத்திலிருந்து இரைப்பையின் சுவற்றைக் காப்பாற்றுவதோடு உணவை நன்றாக கரைத்து ஜீரண சக்தி ஏற்படுவதற்கும் உதவுகிறது. 80 வருஷங்களுக்கு மேலாக உலகத்திலுள்ள எல்லா டாக்டர்களும் சிபாரிசு செய்யும் மருந்து இதுவே. குழந்தைகளின் வயிற்று உபாதையையும் தீர்க்கவல்லது ஹ்யூலட்ஸ் மிக்சர்.

வயிற்றுக் கடுப்புக்கு அபினி கலந்த ஹ்யூலட்ஸ் மிக்சரை உபயோகியுங்கள்.

“ஹ்யூலட்ஸ் மிக்சரை

உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து நான் நன்றாக சாப்பிட முடிகிறது.”



ஸி.ஜே. ஹ்யூலட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, லிங்கியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

கடை வாசலில் போய் நின்றார் பண்டாரம். கூட்டம் வாசற்புறத்தை அடைத்துநின்றதால் கொஞ்சம் ஒதுங்கியே நின்றார். ஆனால் கடைக்காரர் அவர் தலையைக் கண்டதும், 'டேய், சாமி வந்துட்டார்' என்று உள்ளேயிருந்த உதவியாளுக்குக் குரல் கொடுத்தார். பண்டாரத்தால் கடைக்காரருக்குத் தினம் ஆறணாவுக்குத் தவறாத வியாபாரம். அதனால் அவரைக் கண்டதும் ஓர் உபசார வரவேற்பு கொடுப்பதற்குக் கடைக்காரர் தவறுவதில்லை. அதில் பண்டாரத்துக்கும் பெருமை.

பெருமிதப் பூரிப்பில் கூட்டம் கலையட்டும் என்று நின்று கொண்டிருந்தவரிடம், ''சாமி! இதோ உங்கள் சாமான்களைப் போட்டாச்சு. வழக்கம் போல் ஆறணாத்தான்'' என்றவாறு பொட்டலத்தை நீட்டினார் கடைக்காரர். பாவம், கடைக்காரர்! பண்டாரத்தின் செல்வ நிலை உயர்ந்திருப்பதையோ, அவருடைய மகத்தான உணவுத் திட்டங்களையோ அவர் கண்டாரா? வழக்கப்படி கால்படி அரிசியையும் அதற்குரிய வியஞ்சனப் பொருட்களையும் கட்டிக் கொடுத்து விட்டார்! பண்டாரத்துக்குச் சப்பென்று போய் விட்டது. சே! அவருடைய அந்தஸ்தும் தேவையும் ஆறணாத்தான் என்று தீர்ந்து விட்டதா?.... சூழ்நிலை அவரை எதுவும் பேச விடவில்லை. சாமான்களை வாங்கிக் கொண்டு நகர்ந்தார்.

சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து விட்டாலும் அவருக்குச் சமையலை ஆரம்பிக்க மனமில்லை. உபரியாக இருந்த எட்டணா உறுத்த ஆரம்பித்தது. மூட்டைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து சிந்தித்தார். எந்நாளும் போல் இன்றைக்கும் புளித் தண்ணியும் வெங்காயத் தொவையலும்தானா! அதுவும் அந்தப் பயல் சப்பாணி திடுக்கென்று விழித்துப் பல்லைக் காட்டினால் இந்தப் புளித் தண்ணி சாதத்திலேயும் பாதி பறிமுதலாகி விடும்; அல்லது மேலும் ஆறணாவுக்குச் சாமான் வாங்கி வந்து அவனுக்கும் அழ வேண்டியதாகிவிடும். அபூர்வமாய்ப் பதினொணா சம்பாதித்து இப்படி ஏன் சிரமிக்க வேண்டும்?....

''அண்ணாச்சி!'' என்று சப்பாணியிடமிருந்து குரல் வந்தது.

சட்டென்று சாமான்களை மூட்டை மறைவில் வைத்து விட்டு அவனருகில் சென்றார் பண்டாரம். காய்ந்து போன உதடுகளில் உலர்ந்து போயிருந்த நாக்கால் ஈரப்பசையேற்ற முயன்றுகொண்டிருந்தான் சப்பாணி.

''என்னவே?'' என்றார் பண்டாரம்.

''சமைக்கலையா, அண்ணாச்சி!''என்று கேட்டான் சப்பாணி ஈனக்குரலில்.

திக்கென்றது பண்டாரத்துக்கு. ''இல்லை'' என்றார் கீழ்க்குரலில்.

''கடைக்குப் போயிட்டு வந்தீங்களே!'' என்று உள்ளடங்கிய குரலில் முணுமுணுத்தான் சப்பாணி.

'பயலே, உனக்காகவா கடைக்குப் போய் விட்டு வந்தேன்? இந்தச் சோற்றிலேயும் பங்கு அடிக்கப் பார்க்கிறாயா?' என்று மனத்துக்குள் கறுவியவர், வெளிப்படையாக, ''கடைக்குப் போனேன். ஆனால் அரிசி வாங்கலை. இன்னிக்கு ரொம்ப டல். ஓரணாத் தான் கிடைச்சது. வெற்றிலை பாக்கு வாங்கிட்டு வந்தேன். தாம்பிரபரணித் தண்ணியைக் குடிச்சுட்டு வெற்றிலைச் சருகை ஒதுக்கிக் கொண்டு காய வேண்டியதுதான்!'' என்று கூறி விட்டு மேற்கொண்டு பேச்சுக்கு இடம் வைத்துக் கொள்ளாமல் நகர்ந்தார்.

இரண்டு நிமிஷங்கள் சிந்தித்தார். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவராக அரிசிப் பொட்டலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, சப்பாணியின் பார்வைக்கு மறைவாக மண்டபத்திலிருந்து நழுவினார்.

நேராகக் கடைக்குச் சென்று பொட்டலத்தைக் கடைக்காரரிடம் திருப்பிக் கொடுத்து, ''இன்றைக்கு சாமான் வேண்டாங்க. உடம்புக்குச் சுகமில்லை. சமைக்க முடியாது. டவுனுக்குப் போய்ச் சுக்குத் தண்ணி குடிச்சுட்டு வரலாம்னு பார்க்கிறேன்'' என்றார். கடைக்காரர் சாமான்களை வாங்கி வைத்துக்கொண்டு ஆறணாவைப் பண்டாரத்திடம் ஒப்படைத்தார். மீண்டும் பதினொணா பண்டாரத்தின் கைக்கு ஏறி விட்டது!

டவுனுக்குப் போகும் ராஜ பாட்டையில் தலையை உற்சாகமாகத் தடவிக் கொண்டு கம்பீர நடை போட்டார் பண்டாரம். அவர் மனத்துக்கும் நாவுக்கும் இலக்காகியிருந்தது முக்காலணா சுக்குத் தண்ணீரல்ல; 'கீதா' விலாஸ் சைவான் சாப்பாட்டுக் கிளப்பின் முக்கால் ரூபாய் ஸ்பெஷல் சாப்பாடு. வயணமாய் நாலு கறி வைத்திருப்பான். அசல் ஆனைக்கொம்பன் அரிசி. பரமானந்தமாயிருக்கும். அப்புறம் மேலுக்கு இரண்டு ரஸ்தாளிப் பழத்தையும் உள்ளே தள்ளிக் கொள்ள வேண்டியது. எல்லாம் ஆன பிறகு கிராம்பு வைத்த பீடா ஒன்றையும் போட்டுக் கொண்டால் சம்பூரணமாகி விடும். இன்றைக்கு அனுபவிக்காவிட்டால் வேறு என்றைக்குக் கிடைக்கப்போகிறது?.... அந்தப் பயல் சப்பாணி?



''இதென்ன நாய்க்கு நகை போட்டிருக்கு!''

''நகைகளை உள்ளே வைத்திருந்தால் திருடன் வந்து திருடிப் போய்விடப் போகிறானே என்று ஜாக்கிரதையாக இருக்க எல்லா நகைகளையும் நாய் மேலே போட்டுவிட்டு நாங்க நிம்மதியாகத் தூங்குகிறோம்.''



''இந்த உலகத்திலே நாம் பிறருக்கு நல்லது கொடுத்தால் அது தானே நமக்குத் திரும்பிவிடும்!''

''ரொம்ப கரெக்ட்! நல்ல கதை எழுதிப் பத்திரிகைக்குக் கொடுத்தேன், அது தானே எனக்கே திரும்பி விட்டது!''

ஜிலு ஜிலுவென்று மண்டபத்தை யொட்டி ஆறு ஓடுகிறதே, நாலு வாய் குடித்து விட்டுப் படுத்தானென்றால் விடிந்து போகிறது!

* * * *

ஹோட்டலில் ஏகப்பட்ட கூட்டம். ஸ்பெஷல் சாப்பாட்டுக்காக 'கியூ' வரிசை. அந்த ஸ்பெஷல் திருக்கோஷ்டியில் தாமும் ஒருவராக 'அறுசுவை' எண்ணங்களுடன் நின்று கொண்டிருந்தார் சிவன் பண்டாரம். திடீரென்று ஒரு குரல் அவருடைய உணவுத் தியானத்தைக் கலைத்தது.

''பாரும், வே! ஸ்பெஷல் சாப்பாட்டுக்கு கியூவிலே நிற்கிறது யாருன்னு தெரியுமா? கோவில் வாசலில் 'பட்டினி' ன்னு தர்மம் எடுப்பாரே அந்தப் பண்டாரம் தான். பட்டினி ஸ்பெஷல் சாப்பாடு கேட்குது. ஸ்பெஷல் பட்டினி போலிருக்கு!''

திரும்பிப் பார்த்தார் பண்டாரம். அவருடைய வாடிக்கைத் 'தர்ம பிரபு'க்களில் ஒருவர் தம் நண்பரிடம் வழிப் போக்கில் சொல்லிச் சிரித்துக் கொண்டு போனார்.

பண்டாரம் தடுமாறி விட்டார். என்ன பயல்கள்! பரதேசி என்றால் வாய்க்கு ருசியாகக் கூடச் சாப்பிடவிடமாட்டானுகபோலிருக்கே. இப்போ பார்த்து விட்டுப் போகிறவன் இனி நமக்குத் தர்மம் போட மாட்டான். இப்படிப் பத்து பேர் பார்த்தால், பிழைப்பே போச்சு. பந்தியிலும் உட்காரக் கூடாது. பின் பக்கமாகப் போய்ச் சாப்பாட்டை இலையில் வாங்கித் திருவோட்டில் வைத்துக் கொண்டு, மண்டபத்துக்குப் போய்விட வேண்டியது தான். இந்நேரம் சப்பாணி நன்றாகத் தூங்கியிருப்பான். அவன் கண்ணைப் பார்த்துச் சாப்பிட்டு விடலாம்!

உடனே 'கியூ'விலிருந்து உருவி, ஹோட்டலுக்குப் பின் பக்கமாகப் போய்க் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பினார் பண்டாரம்.

பசியில் இரண்டு வகை. ஒன்று வயிற்றுப் பசி; இன்னொன்று நாக்குப் பசி. இரண்டு ரகத்துக்கும் ஆளாகி யிருந்தார் பண்டாரம். வாங்கி வந்த சாப்பாட்டை ஒரு மூலையில் வைத்து விட்டு, உண்ணுவதற்குச் சந்தர்ப்பம் பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தார். ஒரு முறை இலையைப் பிரித்த போது, சப்பாணி இலேசாக முனகும் குரல் கேட்டது. உடனே இலையை மூடி வைத்து விட்டு, ஓசையுடன் ஒரு கொட்டாவி விட்டார். அவரும் பசியோடு தான் இருப்பதாகச் சப்பாணிக்குச் சூசகமாகத் தெரிவித்துக் கொள்கிறாராம்!

கிட்டத்தட்ட அரை மணி நேரம் ஆகி விட்டது. அப்போதும் சப்பாணியின் முனகல் கேட்கத்தான் செய்தது. அவருக்கு உடம்பெல்லாம் எரிச்சல். ஏதேது, இவன் சாப்பாட்டில் பங்கு வாங்காமல் விடமாட்டானே?...அதெப்படி விடுகிறது? எவ்வளவு நேரம் ஆனாலென்ன? அவன் தூங்கிய பிறகு சாப்பிடலாம்! அவசரப்பட்டுச் சாப்பாட்டைக் கைநழுவ விடுவதா? அதுவும் ஸ்பெஷல் சாப்பாடு!

பத்து நிமிஷம் கடந்தது. சப்பாணியின் முனகல் குறைந்திருந்தாற் போலிருந்தது.. மெல்ல எழுந்து, சற்று எட்ட நின்று அசைவைப் பார்த்தார். இலேசாக அவன் உடம்பு அசைவது போலிருந்தது. ஓசைப்படாமல் திரும்பித் தம் தூணருகே உட்கார்ந்து கொண்டார்.


'சாதம் குளிரப் போகிறது. இவன் எப்போது தூங்கித் தொலைப்பானோ?' என்று மனத்துக்குள் முணுமுணுத்துக் கொண்டு சிறிது நேரம் காத்திருந்தார்.


இப்பொழுது சப்பாணியின் முனகல் குரல் கேட்கவில்லை. நன்றாக ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள நந்துநிமிஷங்கள் கவனித்துக்கொண்டிருந்தார். பின்பு சத்தமில்லாமல் எழுந்து அவனருகில் வந்து பார்த்தார். உடல் கூட அசையவில்லை. எதற்கும் நன்றாகச் சோதித்து விடலாம் என்று இலேசாகச் செருமினார். அந்தச் செருமல் அவரையும் மீறி இருமலாக ஓசையுடன் வெளியாகியது. அந்தச் சத்தத்துக்கும் சப்பாணியிடமிருந்து பதிலில்லை.— பண்டாரத்துக்கு வியப்பாக இருந்தது. இந்த ஓசைக்கும் கலையாமல் அவ்வளவு ஆழ்ந்த தூக்கமா இவ்வளவு நேரத்துக்குள்? ஒருவேளை நம் விஷயத்தைத்தெரிந்து கொண்டு பாசாங்கு செய்கிறானோ?....நானா ஏமாறுகிறவன்!....... தொட்டு உசுப்பிப் பார்த்து விடுவது...

மெல்ல அவனைத் தொட்டுப் பார்த்தார் பண்டாரம். மறு விநாடி 'ஆ'வென்று திடுக்கிட்டு அலறினார். சப்பாணியின் உடல் 'சில்' லிட்டிருந்தது! உடல் பதறித் தடுமாறி அவனருகில், இல்லை 'அத'னருகில் உட்கார்ந்து விட்டார் பண்டாரம்.

மண்டபத்தில் முட்டி மோதி ஓலமிட்டுக் கொண்டிருந்த தாம்பிரபரணியும், தைப் பூச மண்டப அக்னி மூலையில் இரவு முழுதும் கண்ணீர் விட்டு அழுது குமைந்து கொண்டிருந்த ஸ்பெஷல் சாப்பாடும் தன்னைப் பார்த்து, 'ஒரு கவளம் அன்னமில்லாமல் அவன் போய் விட்டான். அந்த ஒரு கவளம் அன்னத்துக்காக நீ உயிரோடு இருக்கிறாயா?' என்று கேட்பது போலிருந்தது சிவன் பண்டாரத்துக்கு.


குடும்பம் முழுவதும் ஏற்றது...
கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்கம் பவுடரில்
அபூர்வமான மலர்களின் மனோரம்மிய
பரிமளம் கலந்திருக்கிறது
சிக்கனமானதுடன்
பெயர் பெற்ற
கால்கேட்டின் உயர்ந்த
தரத்துடன் கூடியது
ஸ்நானத்திற்கு பின்,
உடைகளை அணிவதற்கு
முன்பும், வெளியில்
செல்லும்பொழுதும்
புத்துணர்ச்சியளிக்கும்
இச்சிறந்த பவுடரை
உங்கள் உடம்பின்மேல்
தூவிக்கொள்ளுங்கள்...
மென்மையுடன்
நேர்த்தியும்
கொண்டது...
குழந்தையின்
இளம் சருமத்திற்கு
மிகவும் ஏற்றது.
COLGATE
All Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
CAPT-6-1.TAM





காணமல் போன கடிதங்கள்

'கொக்கி'

சென்னை சட்டசபை புது சபாநாயகர் உயர் திரு செல்லபாண்டியன் அவர்களுக்கு :

இம்முறை சபாநாயகர் பதவிக்குத் தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டதற்காக அங்கத்தினர்கள் எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு பாராட்டினார்களாமே மிகவும் சந்தோஷம்.

தங்களின் சிறப்புக் குணம் பற்றிப் பேசும் போது, திரு மு. கருணாநிதி தங்களுடைய சொந்த ஜில்லா திருநெல்வேலி என்பதை நினைவூட்டி, ''அந்த ஜில்லாவின் பத்தமடைப் பாய் எப்படி மிருதுவானதோ, அவ்வாறே தாங்களும் மிருதுவான குணம் படைத்தவர்'' என்று புகழ்ந்துரைத்தார். இதற்கும் ஒரு படி மேலே சென்று முதலமைச்சர் திரு காமராஜ், ''பத்தமடைப் பாய் மிருதுத் தன்மையோடு வெளி நாடுகளிலும் பிரபலமானது'' என்று கூறினார்கள். இவ்வாறு சுருண்டுகிடக்கும் பத்த மடைப் பாய்களுக்குத் தங்கள் மூலம் ஒரு புது மவுஸ் ஏற்பட்டு அத்தொழில் விரிவுபடுமானால் எனக்கும் சந்தோஷம்தான்.

பாராட்டுதலுக்கெல்லாம் பதில் சொன்ன தங்களின் நன்றியுரை மிக அடக்கமாக இருப்பதைக் கண்டேன். இதுவும் அந்தப் பாயின் விசேஷம்தானே? எவ்வளவு பெரிய பத்த மடைப் பாயையும் கையில் அடக்கமாகச் சுருட்டி வைத்துக் கொள்ளலாம் அல்லவா? மொத்தத்தில் தாங்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்துச் சபையில் திருப்தி ஏற்பட்டிருக்கிறது. சட்டசபை உத்தியோக ரீதியில் கூடிய பிறகும், தங்களுக்கும் சபையினருக்கும் இப்போது ஏற்பட்ட நல்லுறவு வளரவேண்டும். சபா-நாயகர் பாய் பாய்!

இப்படிக்கு
ஒரு பவானி ஜமுக்காளம்

ஃ

சென்னை காங்கிரஸ் நிர்வாகத்துக்கு ஒரு பட்டணம் படி எழுதுவது :

''நாங்கள் பதவி ஏற்றதும் விலைவாசிகளைக் குறைப்போம்; அதைச் செய்வோம், இதைச் செய்வோம்'' என்று தேர்தலின் போது சொல்லிக் கொண்டிருந்து விட்டு, இப்போது முதல் வேலையாக இந்தப் படி மரக்கால் ஆழாக்குகளை ஒழிக்கப்புட்டீர்களே! இதற்குப் பதிலாக லிட்டர் குவளைகளை ஜனங்கள் கையில் கொடுத்தாகி விட்டது. இதுவும் ஒரு சாமர்த்தியம்தான். இனி ஜனங்கள் ''படி அரிசி ஒரு ரூபாய் எட்டணாவாக ஏறி விட்டதே'' என்று கூக்குரலிட முடியாது. அப்படிக் கூச்சலிட்டால், ''படிதான் இப்போது போய்விட்டதே'' என்று சொல்லி விடலாம். ஒரு படி எவ்வளவு லிட்டர் என்ற கணக்கைப் புரிந்துகொள்ளக் கொஞ்ச காலம் ஆகும். அதுவரையில் அரிசி முதலியவைகளின் விலை நிலைமையையும் இலேசில் கணக்கிட முடியாது.


என்ன இருந்தாலும் 'அளக்கும்' விஷயங்களில் காங்கிரஸாரின் சாமர்த்தியமே தனிதான்! இந்தச் சமயத்தில் காங்கிரஸில் உள்ள சிலர், ''தேசம் முழுவதும் ஒரேவிதமாக லிட்டர் குவளையை அமுலுக்குக்கொண்டு வருவதால் நாட்டின் ஒற்றுமை வலுப்படும்'' என்று வேறு கூறத் தொடங்கியிருக்கிறார்கள். இப்படிக் கூறுவது வெறும் 'கஜப் புளுகு' தவிர வேறல்ல. புது முறையில் 'மீட்டர் புளுகு' என்று வேண்டுமானாலும் கூறலாம். பட்டணம் படி, மரக்கால், ஆழாக்கு இவைதானா பரிதாபம் தேச ஒருமைப்பாடு வளர்ச்சிகளுக்குத் தடையாக இருந்து வந்தன?

இப்படிக்கு
காங்கிரஸின் அளப்புகளுக்குப் பயன்பட்டு வந்த ஒரு பட்டணம் படி

ஃ

நகர பிதா குசேலர் அவர்களுக்கு.

சென்னை நகரசபையில் காரசாரமான விவாதங்கள் மட்டுமல்ல, நகைச்சுவைக்கும் இடமுண்டு என்பதைச் சமீபத்தில் நகரவாசிகள் கவனித்திருப்பார்கள். இந்த முறை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறையாக அமைந்திருக்கிறது. இதை ஓர் அங்கத்தினர் சுட்டிக்காட்டும்போது ''குசேலரின் பட்ஜெட்'' என்று கூறினாராம். புராண காலக் குசேலரின் வரவு செலவு கஷ்டத்துடன் ஒப்பிட்டுத்தான் இவ்வாறு கூறினாராம். தாங்கள் இந்த அடைமொழியை ஏற்றுக்கொண்டு, ''நான் குசேலர் தான்! இருபது லட்சம் நகரவாசிகளுக்கு நான் நகர பிதா அல்லவா?'' என்றீர்கள். மேயர் என்பதற்கு நகர பிதா என்ற பெயர் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு தங்களுடைய பெயரும் இம்முறை பொருத்தமாக அமைந்து விட்டது! பழங் காலத்துக் குசேலரிடம் அவல் ஒன்றுதான் இருந்ததாகக் கூறுவார்கள். வெறும் வாயை மெல்லும் அங்கத்தினர்களுக்குத் தங்கள் பெயர் இனி அவல் கிடைத்த மாதிரி பயன்படலாம். சீக்கிரமே நகர சபையின் வறுமை நீங்கி, குசேலர் பெற்ற செல்வம் தங்கள் சென்னை நகரக் குடும்பக்துக்குக் கிட்ட வேண்டும்.



இப்படிக்கு
ஒரு நகர மைந்தன்

வட்ட  மேஜை

பஞ்சாயத்துபோர்டின் கெடுபிடி

ராஜாஜி அவர்களின் வேண்டுகோளின்படி நாங்கள் தேர்தலிலே சுதந்திரக் கட்சிக்குத் தீவிரமாக வேலை பார்த்தோம். இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவரும் சில காங்கிரஸ் அங்கத்தினர்களும், பண வசூல் செய்யும் பில் கலெக்டர்களும் காங்கிரசுக்கு வேலை செய்யும்படி கேட்டார்கள். நாங்கள் மறுத்து ஒருமுகமாகச் சுதந்திரக் கட்சி அபேட்சகர் காளிலிங்கத்துக்காகப் பணிபுரிந்தோம். பணக் கும்பலும் பதவி வெறியர்களும் ஒன்றுசேர்ந்த காரணத்தால் நேர்மையும் சத்தியமும் தலை குனிந்து, காளிலிங்கம் தோல்வியுற்றார். எங்கள் மேல் ஆத்திரம் கொண்ட சில காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலால், பஞ்சாயத்து போர்டார் வரி வசூல் கெடுபிடியில் இறங்கியுள்ளனர். இவ்வூர் பஞ்சாயத்து போர்டு காங்கிரஸ்காரர்களின் நிர்வாகத்தில் உள்ளது. ஏழைகளைக் கண்டபடி ஏசிப் பேசுவதுடன் வரி கொடுக்காவிட்டால் பொருள்களை அள்ளுவோம் என்று அவர்கள் நிர்ப்பந்தம் செய்து வருகிறார்கள். ஜனநாயகம் பேசும் இவர்கள், சர்வாதிகாரத்தில் ஈடுபட்டு, இம்மாதிரி ஏழைகளைத் துன்புறுத்தலாமா?

28—3—62
சிவகெங்கை

கருப்பையா சேர்வை

கண்ணீர் இதழ்கள்

"பணத்தைக் கொண்டு பணம் பண்ணு. அதே சமயத்தில் பணத்துக்கு இன்னொரு பேர் நாணயம் என்கிறதை மறக்காதே......" — இன்று தேவைப்படும் அழகான உபதேசம். நாசூக்கான முறையில் ஒரு கிழவி மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வாணிப நாகரிகம் மிகுந்த இக் காலத்தில் அனைவரும் கவனிக்க வேண்டிய கருத்து. பணத்துக்கு நாணயம் என்ற பெயரும் உண்டு என்பது சுவை மிகுந்த கருத்து நிறைந்த கதை எழுதிய "வாசவன்" வாழ்க.

30—3—62
ஒலவக்கோடு

டி. டி. கிருஷ்ணமூர்த்தி

வாழ முடியுமா ?

நமது அரசாங்கத்தினர் வரி மேல் வரி போட்டு மக்களைச் சாக அடிக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைத் தட்டிக் கேட்பதற்கு மனிதர் யாருமே இல்லை.

அரசாங்கம் பல வழிகளில் பல கம்பெனிகளையும் தொழில் கூடங்களையும் தான் பங்கு கேட்கிறது என்றால் இப்பொழுது சொந்த வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வருட வருமானத்தில் நாலில் ஒரு பங்கு கேட்கிறது. இது நியாயமானது தானா?

என் வீட்டின் பழைய வரி ரூபாய் 132.27 இருந்தது. 1962 மார்ச் முடிவு ரூபாய் 139.91-யாக மாறியது. தற்பொழுது வந்த வரி (ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரை) ரூபாய் 243.00 ஆக மாறிவிட்டது.

என் வருமானம், அதாவது வீட்டின் வாடகை ரூபாய் 148. இதில் நாங்கள் மூவர் சாப்பிட வேண்டும். எனக்கு வேலை இல்லை. இந்த வீடு ஒன்று தான் எனக்கு ஆஸ்தி. இந்த மாதிரி வரி மேல் வரி போட்டுக் கொடுமைப் படுத்தினால் நாங்கள் எப்படி வாழ்வது?

29—3—62
சென்னை — 5

ரா. பசுபதி

இது முறையா ?

இந்த வருடத் தேர்தலில் காங்கிரஸை எதிர்த்து வோட்டுப் போட்டவர்கள், அதாவது மேல்சபைக்குப் பார்வர்ட் பிளாக் கட்சிக்கும் சட்ட சபைக்குச் சுதந்திரக் கட்சிக்கும் வோட்டுப் போட்டவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். சாத்தூர்த் தொகுதியில் ஹரிஜனங்களைக் கொண்டும், நாயக்கர்மார்களையும் சிவகாசித் தொகுதியில் ரிசர்வ் போலீஸ் படையைக் கொண்டு தேவர்களையும் அடித்தும் இம்சித்தும் முக்கியஸ்தர்களை யெல்லாம் கேவலப்படுத்தியும் பல பொய் வழக்குகள் போட்டும் வருவது நடைபெற்று வருகின்றன. இது சம்பந்தமாகக் கவர்னர் முதலிய பல அதிகாரிகளுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் பல மனுக்களும் தந்திகளும் கொடுத்தும் நாளதுவரை எவ்வித விசாரணையுமில்லை. சிவகாசித் தொகுதியில் விவசாயம் தொழில், கூலி வேலை செய்து வருவோர் அத்தனை பேரும் பெரிதும் பாதிக்கப்பட்டு, அவர்கள் ஓடி ஒளிந்து அலைகிறார்கள்.

இந்த அவல நிலை குறித்து உடனடியாக நிவாரணமளிக்கா விட்டால் நிரபராதிகள் மிக மிகப் பாதிக்கப்படுவார்கள்.

24-3-62
சாத்தூர்

நா. கருப்பையாத் தேவர்

மணிபல்லவம்

திரு நா. பார்த்தசாரதியின் சிறப்பான சரித்திர நாவல் 'மணிபல்லவம்.' தத்துவ போதனை நிறைந்த ஒரு காவியம்.

ஒவ்வொரு வார இதழிலும் பெரிய பெரிய தத்துவங்களையும், எளிதில் புரிந்து கொள்ளச் சாத்தியமற்றவைகளையும், இளங்குமரன், விசாகை நாங்கூர் அடிகள் ஆகியோர் மூலம் மிகவும் சுலபமான முறையில் புரிந்து கொள்ள வைத்தது ஆசிரியரின் ஆழ்ந்த அறிவைப் பறைசாற்றுகிறது.

இவ்வித அன்பைத்தான் ராமன் நரகாசுரனிடமும் ராவணனிடமும் காண்பித்தார்.

இதை ஒரு சரித்திரத் தொடர்கதை என்று கூறுவதை விடத் தர்ம சாஸ்திரம் என்றே கூறலாம்.

24—3—62
குடந்தை

பி. சாரங்கபாணி

என்றும் நினைத்திருப்பேன்!

பீஷ்மன்

அன்புள்ள......!

உன்னை எப்படி அழைப்பது? பெயர் சொல்லி அழைப்பதா, சிநேகிதிக்கு என்று எழுதுவதா? வேண்டாம் இப்படி மொட்டையாக 'அன்புள்ள' என்றே விட்டு விடுகிறேன். உனக்கு எப்படி அழைத்தால் பிடிக்குமோ அப்படி அழைத்ததாகவே நினைத்து ஏற்றுக் கொள். கடிதம் எழுத நினைத்தவனுக்கு ஆரம்பமே இத்தனை தடுமாற்றமாக ஆகி விட்டது. காரணம் என்ன தெரியுமா? சிருஷ்டித்துள்ள சோகக் கதைகளின் துயரங்கள் அனைத்தும் என்னையே நினைத்த தில்லை. நீ பாடுவாயே அடிக்கடி எனக்குப் பிடித்தமான அந்தப் பாடல்....!

"நினைப்பதொன்றும் நடப்பதில்லை...
நெஞ்சின் இருளும் குறையவில்லை!"

இப்போதைய என் மன நிலையை எவ்வளவு அழகாக இந்தப் பாடல் எதிரொலிக்கிறது!

வாழ்வு தன்னகத்தை வஞ்சகத்தை மறைத்து வைத்துக் கொண்டிருந்து திடீரெனத் தன் சுயஉருவை என் முன் காட்டிய போது நான் அதைக் கண்டு கலங்கிப் போய் விடவில்லை. மாறாக, அதன் கோர அழகில் என்னை இழந்து விட்டு நிற்கிறேன்.

இதை எழுதுகையில் முதன் முதலாக என்னை நீ சந்தித்த போது கேட்ட கேள்வி என் நினைவுக்கு வருகிறது. நீ என்னை எப்போது எங்கே முதன் முதலாகச் சந்தித்தாய் என்பது உனக்கு நினைவிருக்கிறதோ என்னவோ? எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அப்போது நீ பள்ளி இறுதி வகுப்பு மாணவி. உங்கள் பள்ளிக்கூடத்து இலக்கிய மன்றக் கூட்டத்தில் 'பெண்மை' என்ற பொருள் பற்றி நான் பேசி விட்டுப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில்தான் நீ எனக்கு அறிமுகமானாய்.

வெளியே நின்ற காரில் நான் ஏறப் போகும் சமயத்தில் உள்ளிருந்து குதித்தோடி வந்து, 'ஆட்டோகிராபை' நீட்டிக் கொண்டு நீ நின்றாய்.

மாலையின் மஞ்சள் வெயிலில் உன் உள்ளத்துப் பிரதிபலிப்பே உன் முகத்துக்கோர் எழில் நகையாய் இலங்கப் படபட வென்று இமைகளைக் கொட்டிக் கொண்டு நின்ற உன்னைப் பார்த்ததும் காரில் ஏறப் போனவன் நின்று விட்டேன்.

நீட்டிய ஆட்டோகிராபில் வெறும் கையெழுத்திட்டு உன்னிடம் கொடுத்த போது நீ என்னைக் கேட்டாய்.

"பேச மட்டும்தான் தெரியுமா ஸார்?"

என்ன துணிச்சலான கேள்வி!

"ஏய், அதிகப்பிரசங்கி!" என்று உனக்குப் பின்புறம் இருந்து யாரோ அதட்டினார்கள். நீ அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. கேள்வியைக் கேட்டு விட்டுப் பதிலுக்காகக் காத்துக் கொண்டு நின்றாய்.

"ஏன்.....?"

"ஏதாவது எழுதித் தருவீர்களென்று தானே இதைக் கொடுத்தேன்?"

சிரித்துக் கொண்டே உன்னிடமிருந்து அந்த 'ஆட்டோகிராப்' புத்தகத்தைத் திரும்ப வாங்கி அதில் "பேச்சும் எழுத்தும் தான் என் உயிர் மூச்சு. இவை யாருக்கேனும் ஒருகணமேனும் மகிழ்ச்சி தருமாயின் அது தான் நான் பெறும் பரிசு" என்று எழுதிக் கொடுத்தேன்.

தோன்றியதைத்தான் எழுதி வைத்தேன்.

"தாங்ஸ்!" முகமெல்லாம் மகிழ்ச்சியில் பூவாய் மலர நீ அதை வாங்கிக் கொண்டாய். உடனேயே வந்தது போலவே குதித்தோடிப் போய் விட்டாய்.

வேடிக்கையான பெண் என்று நினைத்துக் கொண்டேன் நான். உண்மையில் நீ வெறும் வேடிக்கைப் பெண்ணாகவா இருந்தாய்?

என்னைப் புரிந்து கொண்டுதான் நீ இப்படியெல்லாம் பழகினாயா அல்லது புரியாமலே இயல்பாய் நடந்து கொண்டாயா என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். புரியத்தான் இல்லை.

பேச மட்டும், எழுத மட்டும் தெரிந்து வைத்திருந்து என்ன பயன்? உன் உள்ளத்தைப் புரிந்து கொள்ளத் தெரியவில்லையே...! அதன் விளைவு?

பெண்மையின் மென்மையுடன் வளர்ந்த என் இதயத்தில் விழுந்த அடியின் வேதனை உனக்கு எப்படித் தெரியப் போகிறது?

முதன் முதலாக உன்னை அப்போது பார்த்த பிறகு மறந்தே போய் விட்டேன். இரண்டு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் நீயாக என்னைத் தேடி வந்திராவிட்டால் என் வாழ்வின் போக்கே திசை மாறிப் போயிருக்கும். இப்போது அதைப் பேசிப் பயன் என்ன?

நீ என்னைத் தேடி நான் குடியிருந்த இடத்துக்கு வந்த போது நான் 'நினைவு வழியில்..' என்ற கவிதை எழுதிக் கொண்டிருந்தேன். வேறு எந்தக் கதையையோ கவிதையையோ நான் எந்த ஆண்டு எழுதினேன் என்பதுகூட எனக்கு நினைவில்லை. ஆனால் இந்தக் கவிதை எழுதிய நேரம் மட்டும் ஏனோ மறக்கவில்லை.

நிலவையனையும் இரவிலென்றன்
நினைவிலாடும் வஞ்சிதான்
உலரும் இதயம் நனைய அமுதம்
ஊற்ற நேரில் வருவளோ?

என்று எழுதி முடித்து விட்டுப் பேனாவை மூடி வைக்கையில், "வணக்கம் ஸார்!" என்று கைகூப்பிக் கொண்டு நீ வாசற்படியில் நின்றாய்—என் கவிதையின் கேள்விக்குப் பதில் கூற வந்த வனதேவதை போல!

உன்னை எனக்கு அடையாளம் தெரியத்தான் இல்லை. எப்போதோ எங்கோ பார்த்த முகம் என்று மட்டும் தெரிந்தது.

"வணக்கம், வாருங்கள்!"

சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக்கொண்டு கழுத்தை ஒயிலாகச் சாய்த்தவாறு, "யாரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டாய்.

"உங்களைத்தான்!"

அது என்ன சிரிப்போ? அப்படி நான் என்ன சொல்லி விட்டேன்?

''எனக்குக் 'கள்' எல்லாம் வேண்டாம். என்னைத் தெரியவில்லையா சார், உங்களுக்கு? மதுரைப் பள்ளிக்கூடத்தில் உங்களிடம் ஆட்டோகிராபில் கையெழுத்து வாங்கினேன் ஸார்! எனக்கு அப்போதெல்லாம் உங்கள் கதை அவ்வளவு பரிச்சயம் கிடையாது. இப்போதெல்லாம் உங்கள் எழுத்துத்தான் எனக்கும் உயிர் மூச்சு!''

''அது என்ன எனக்கும்...?''

''உங்களுக்கு எழுத்துத்தானே உயிர் மூச்சு. அப்படித்தான் நீங்கள் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அதனுலேதான் எனக்கும் என்று சொன்னேன்!''

''இப்படி வந்து உட்கார் அம்மா. நின்று கொண்டே பேசினல்....?''

''குட்....! இதுதான் எனக்குப் பிடிக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே எதிரே விருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாய். உனக்கு எது பிடித்திருக்கிறது. பிடிக்கவில்லையென்று நான் கேட்டேன்?

நான் கேட்கு முன்பாகவே உன்னைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் நீயாகவே கூறிவிட்டாய். சென்னைக்கே உன் அப்பாவை மாற்றி விட்டார்கள் என்றும் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வசதியாய்ப் போயிற்று என்றும் கூறினய். அது மட்டுமா? நான் சென்னையிலிருக்கும் விவரம் தெரிந்தது முதலே சென்னைக்கு வர நீ துடித்துக் கொண்டிருந்ததாக வேறு கூறினய்.

நான் எழுதி முடித்த கவிதையின் கனவு மயக்கம் கலையுமுன்பே நீ என் எதிரே வந்து உட்கார்ந்து இப்படிக் கூறியபோது என் உணர்ச்சிகள் எப்படிப் பொங்கியிருக்கும் என்று நீ நினைத்துப் பார்த்திருப்பாயா?


என்னைப் பேச விடாமல் என் கதைகளைப் பற்றிய உன் அபிப்பிராயங்களை நீ சொல்லிக் கொண்டு போனய். நானே மறந்துவிட்ட கதாபாத்திரங்களை நீ உணர்ச்சியுடன் உன் பேச்சின் நளினத்தால் என் முன் கொணர்ந்து நிறுத்தி என் படைப்பின் அழகைக் காண வைத்தாய். தன் மகனைச் சான்ருேன் எனக் கேட்ட தாய் போல நான் அப்போது எவ்வளவு உயர்ந்து விட்டேன்!

பேசிக் கொண்டேயிருந்தவள் நான் எழுதி வைத்திருந்த கவிதையொன்றைப் பார்த்து விட்டாய்.

''படிக்கலாமா ஸார்?'' என்று எங்கே நான் மறுத்து விடுவேனே என்ற மருட்சியுடன் நீ கேட்டபோது நானுகவே அந்தத் தாளை உன்னிடம் நீட்டினேன். சொல்லப் போனல் நீ கேட்கா விட்டால், நானே அதைக் கொடுத்துப் படிக்கச் சொல்லியிருப்பேனே என்னவோ! ஒரு சில கணங்களில் உன்னுல் எப்படி என்னை அவ்வளவு கவர முடிந்தது!

அந்தக் கவிதையைப் படித்து விட்டு நீ என்னைப் புகழ்ந்த புகழ்ச்சியில் நான் வெட்கித்துப் போனேன்.

''என் கண்ணே பட்டுவிடும் ஸார்! திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லுங்கள்!'' என்று நகைத்துக் கொண்டே கூறிவிட்டு அந்தக் கண்ணுல் நீ பார்த்த பார்வை!



''டேய், எலிக் குஞ்சு! புஸ்தகத்தைத் தின்னுதே! அதெல்லாம் அறிவுக்குத்தான் விருந்தே தவிர வயிற்றுக்கு வாயக்கில்லை.''

அதற்கெல்லாம் பொருளே கிடையாதா?

இடரென்று நீ கேட்ட கேள்வி என்னைத் திணற அடித்து விட்டது.

''நீங்கள் குறிப்பிடும் அந்த வஞ்சி யார் ஸார்?''

நான் சிரித்தேன். ''ஒரு கற்பனைப் பெண். ஏன்....?''

''இல்லை. நிஜமாகவே அப்படி உங்களுக்கு வேண்டியவர்கள் .....''

''சேச்சே! என்னுடன் பழகும் பெண்ணே நீயொருத்திதானே! அதுவும் இப்போதுதான்!''

''ஓ....!''

நான் இப்படிக் கூறிய போது நீ என்ன நினைத்தாய்? உன் நினைப்புக்களை அன்றுதான் நான் சரியாகக் கண்டேன்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு? அடிக்கடி நீ என் வீட்டுக்கு வரத் தொடங்கினய். நீ எந்நேரம் வந்தாலும் என்னை என் வீட்டில் காண முடிந்ததாக நீ கூறுவாய். காலையில் கோவிலுக்குப் போவேன். இரவு ஒன்பது மணிக்குச் சிறிது தூரம் காற்று வாங்கச் செல்வேன். இவை தவிர மற்ற நேரங்களில் எல்லாம் நான் வீட்டிலேதானே இருந்தேன்! எழுத்து இல்லையென்றல் படிப்பு. அப்படியும் இல்லையென்றல் தெருவைப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருப்பேன். எப்போதோ வரும் நண்பர்களுடனே ரசிகர்களுடனே சிறிது நேரம் உரையாடுவேன். ஆனல் பேசுவதற்கென்று உன்னுடன் மணிக்கணக்காக உட்கார்ந்திருந்ததைப்போல வேறு யாருடனும் பேசியதில்லை.

வெறும் ரசிகையாகத்தான் நீ என்னிடம் வந்தாய். நாளடைவில் உன்னிடம் ஒளிந்து கிடந்த இலக்கிய மேதையை என்னுல் உணர்ந்து கொள்ள முடிந்தது. இவ்வளவு இளம் வயதிலேயே நீதான் எவ்வளவு படித்திருக்கிருய்!

கவிதைகளைப் பற்றியும் இலக்கியங்களைப் பற்றியும் நாம் சர்ச்சை செய்து கொண்டிருக்கையில் நான் மனத்துக்குள் நினைத்துக் கொள்வேன். இலக்கியம் என்ற அழகுப் பெரு வான் வெளியில் நாம் இருவரும் புதிதாக முளைத்த பொன் இறக்கைகளுடன் கவி பாடிப் பறப்பது போல! உனக்கு இப்படி எழுதும் கற்பனைகள் தோன்றியதில்லையா....?

இன்று இதை எழுதத் துணிந்தவனுக்கு அன்று உன்னிடம் நேரில் இப்படி யெல்லாம் கேட்கத் துணியவில்லை. ஒன்று மட்டும் நிச்ச

யம். உன்னுடன் பழக்கம் ஏற்பட்ட பிறகு நான் எழுதிக் குவித்த வேகம் என்னிடம் அதற்கு முன் எப்போதுமே இருந்ததில்லை. எனக்கு வேறு வாசகர்கள் இருக்கும் நினைப்பே இல்லாது, நீ ரசிக்கிறாய் என்ற ஒரே நினைப்பின் மகிழ்ச்சி வெறியுடன் நான் எழுதிய கவிதைகளும் கதைகளும்...! காரணம் எதுவாயினும் இந்தக் காலத்தில் நான் படைத்த படைப்புக்களுக்கு இலக்கிய உலகிலே கிடைத்த மதிப்பும் உயர்வும், எனக்கு நீ உன்னை அறியாமலேயே தந்த அன்புப் பரிசு இது. நான் கேட்க நினைத்ததை நான் உணரவேயில்லை.

உணர்வதன் முன்னேயே நீ கேட்க நினைத்ததைக் கேட்டு விட்டாய்.

நீ வந்து உட்கார்ந்திருப்பதையே உணராமல் நான் தாகூரின் கீதாஞ்சலியில் மூழ்கியிருக்கிறேன். என் படிப்பைக் கலைக்க விருப்பமில்லாமல் நீ மௌனமாக உட்கார்ந்திருக்கிறாய்.

தற்செயலாக நான் திரும்பிய போது உன்னைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டேன்.

''ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறாயா' என்ன....''

''அப்படியொன்றுமில்லை. அரை மணி நேரம் இருக்கும். இந்தப் புத்தகத்தில் உங்களுக்கிருக்கும் ஈடுபாட்டை ரசித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். அவ்வளவுதான்!''

புத்தகத்தை மூடிவைத்தேன். வழக்கத்தை விட அதிகமான உற்சாகப் பொலிவுடன் நீ இருப்பது போல எனக்குப் படுகிறது. எதையோ சொல்லத் துடிக்கும் உன் உதடுகளும் முகத்திலே பரவி நிற்கும் செம்மையும் நெற்றியில் அரும்பி நிற்கும் வியர்வை முத்துக்களும் என் நிலையை உறுதிப்படுத்துகின்றன.

''ஒரு விஷயம்....'' என்று நீயாகவே தொடங்குகிறாய். இதைச் சொல்வதற்குள், தான் எவ்வளவு திணறல்!

''என்னிடம் கேட்கக் கூடப் பீடிகை வேண்டுமா, என்ன? சொல்லேன்!''

எனக்குப் பிரியமான ஒன்றை நீ சொல்லப் போகிறாய் என்ற கற்பனையில் உன் பேச்சைக் கேட்கப் பரபரப்புடன் காத்து நிற்கிறேன்.

''நான் ஒரு கவிதை எழுதித் தருகிறேன். கேலி செய்யாமல் அதைப் படித்துப் பார்த்துத் திருத்தித் தர வேண்டும்.''

தலையைக் குனிந்து கொண்டேதான் இதைச் சொல்கிறாய். இதற்கு ஏன் இவ்வளவு பீடிகையும் வெட்கமும் என்று நினைத்துக் கொண்டே உன் கையிலிருந்து நானாகவே அந்தக் கவிதை எழுதிய தாளைப் பிடுங்கிக் கொள்கிறேன்.

ஆச்சரியமாக இருக்கிறது. என் நெஞ்சத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் அலை மோதி ஆர்ப்பரிக்கின்றன. காதல் நெஞ்சின் பாஷை கவிதையாகப் பொங்கியிருக்கக் காண்கிறேன். மொழியின் உணர்ச்சியே இதயத்தின் உணர்ச்சியைச் சொல்லி விட்டதே! நான் நினைத்ததை விட எவ்வளவு பண்புடன் நீ உன் உள்ளத்தைத் தெரிவித்து விட்டாய் என்று நினைத்துப் பூரித்துப் போகிறேன். இரண்டொரு இடங்களை மட்டுமே திருத்த வேண்டியிருந்தது; அவ்வளவுதான்.

''இது என்னிடமே இருக்கட்டுமே. ரொம்ப அபாரமாக இருக்கிறது. பத்திரிகைக்கு அனுப்பி வைக்கிறேனே!''

குனிந்த தலை நிமிராமலேதான் நீ பதில் சொல்கிறாய்.

''பத்திரிகைக்கு அனுப்புவதற்கில்லை ஸார். எனக்குத்தான் அது. உங்கள் சகவாசத்தில் கிடைத்த பெருமை இது ஸார். உங்கள் வாயினால் நன்றாயிருக்கிறது என்று சொல்லிவிட்டால் வேறு அபிப்பிராயமே வேண்டாம். இது போதும் எனக்கு!''

உன் பேச்சில் என் மெய் சிலிர்க்கிறது.

மகிழ்ச்சியுடன் அன்பையெல்லாம் குழைத்து உன்னுடைய பெயரைச் சொல்லி அழைக்கிறேன்.

நீ நிமிர்கிறாய்.

என் பார்வையில் உனக்குப் பிடிக்காத எதைக் கண்டு அப்படி மிரண்டாய்?

''கவிதையைக் கொடுங்கள்!''

இயந்திரமாய் அதே வெறித்த பார்வையுடன் கவிதையை நீட்டுகிறேன்.

நன்றிகூடச் சொல்லாமல் விடுவிடென்று நடந்து வாசல் கதவை அறைந்து சாத்திக் கொண்டு போய் விடுகிறாய்.

என்ன நடந்தது என்று உணரத் தெம்பில்லாமல் நான் அதிர்ந்து போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

'நீ ஏன் அப்படி ஓடினாய்? என் பார்வையில் என்ன கொடூரத்தைக் கண்டாய்? உணர்ச்சி வசத்தில் ஓரளவு அவசரப்பட்டு விட்டேனோ? கவிதையில் நெஞ்சத்து ஆசைகளை யெல்லாம் கொட்டி யெழுதியிருந்தாயே! பின்....'

நினைக்க நினைக்க மூளைதான் குழம்புகிறது.

அறையில் இருள் பரவி விட்டதைக் கூடக் கவனியாமல் கன்னத்தில் பதித்த கையுடன் அடித்த சிலையாக எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தேனோ! யாரோ சிறுவன் அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

''ஸார்......!''

''கதவுப் பக்கம் 'ஸ்விட்ச்' இருக்கிறது. விளக்கைப் போடு!''

அறையில் திடீரென்று முளைத்த ஒளியில் கண் கூசுகிறது. பையன் என்னிடம் ஒரு கவரைக் கொடுக்கிறான். உன் பெயரைச் சொல்லி நீ என்னிடம் கொடுக்கச் சொன்னதாகக் கூறுகிறான்.

''நான் போகலாமா ஸார்.....?''

''ஊம்.....ம்!''—அவன் போய் விட்டான்.

இது வரை இல்லாத புதுமை!

நீ எனக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து அனுப்பியிருக்கிறாய். அதிசயத்துடனும் ஆவலுடனும் கடிதத்தைப் பிரித்தேன். இத்துடன் எத்தனையோ முறைகள் படித்து விட்டேன். நினைவில்கூடப் பதிந்து விட்டது. நீ எழுதியிருந்தாய்.

அன்புள்ள ஆசிரியருக்கு,

நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். என் கதையைப் படித்து முடித்ததும் உங்களை மீறிய பாசத்தில் என் கையைப் பற்றிக் கொண்டு நீங்கள் என்னைப் பார்த்த பார்வையில் உங்கள் எண்ணம் எனக்குப் புரிந்து விட்டது. இப்படி ஓர் எண்ணம் தோன்றும் படி நான் எப்போதேனும் நடந்துகொண்டிருந்

தால் அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். உங்கள் எழுத்துக்கள் என்னைக் கவர்ந்ததென்னவோ உண்மை. ஏற்கனவே எழுத வேண்டும் என்னும் ஆவல் என் உள்ளத்தில் எப்போதோ முளைத்து விட்டிருந்தது. உங்கள் தோழமையினால் என்னால் இந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள முடிந்தது. உங்களிடம் இது வரை நான் எழுதியவற்றைக் காட்டாததற்குக் காரணம் அவை எனக்கே பூரண திருப்தி அளிக்காததுதான். ஆனால் என் அத்தானுக்கு, – ஆமாம். எனக்கு ஓர் அத்தான் இருக்கிறார். பங்களூரில் விமானப் படையில் வேலையாக இருக்கிறார். அவருக்கு நான் எழுதியவை அனைத்தும் தெரியும். உங்களிடம் சொல்வதில் தவறு என்ன? எனக்கு வாழ்க்கையில் எல்லாமே அவர்தான் என்று நான் நம்பியிருக்கிறேன். பெரியோரின் ஆசியால் இன்னும் இரண்டு மாதங்களில் நாங்கள் தம்பதிகளாகப் போகிறோம். என் நெஞ்சில் மணக்கும் இனிய கற்பனைகளையே அவரை நினைத்துக் கொண்டே கவிதையாக்கி வைத்தேன். கவிதையின் வடிவம் எனக்குத் திருப்தியளித்தது. அதைத்தான் உங்களிடம் கொணர்ந்தேன். உங்கள் ஆசி பெற்றபின் எப்போதும் போல் பங்களூருக்கு அனுப்புவதாக இருந்தேன். ஆனால்....கவிதையை ஏற்கனவே நீங்கள் உங்கள் மனத்துள் வளர்த்துக் கொண்டிருந்த எண்ணத்துக்குச் சாதகமான நிலையில் பார்த்து விட்டீர்கள். அதன் விளைவுதான் உங்கள் எண்ணத்தை நான் புரிந்து கொள்ள உதவியது. உங்கள் மனச்சலனத்துக்கு நான் காரணமானதுக்குப் பெரிதும் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்.

நீங்கள் எனக்கு இலக்கிய ஆசிரியர். நான் உங்கள் மாணவி....''

உன்னை இதைவிட நீ உணர்த்த முடியாது தான். ஆயினும் என்னால் ஏனோ அமைதியடைய முடியவில்லை. சில சந்தர்ப்பங்களில் சின்னதொரு விஷயத்தில்கூட நாம் ஏமாந்து போய்விடுகிறோம். அப்படித்தான் நானும் ஏமாந்து போனேன்.

உன்னுடைய அறிமுகத்திலிருந்தே நான் என்னை ஆணாகவும் உன்னைப் பெண்ணாகவும் நினைத்தே தான் பழகியிருக்கிறேன். இந்த எண்ண அடிப்படையில் பிறந்த சிநேகம்தான் தீயாகி என்னை எரித்துவிட்டது.

இந்தக் கடிதம் எழுதுவதன் நோக்கம் வெறெதற்குமல்ல. நான் உன்னை மறக்க முயன்றால் அது ஒரு வேடிக்கையாகத்தான் முடியும். என்னைப் போன்றவர்கள் இம்மாதிரி வாழ்க்கை நிகழ்ச்சிகளை மறக்க முயலுவது அர்த்தமற்ற செய்கைதான்.

உன்னை நினைத்துக் கொண்டேதான் இருப்பேன். என்றும் எப்பொழுதும்! என் பலவீனத்தை எனக்கு அறிவுறுத்திய பெண்ணாக!

உன் வாழ்வு வளம் பெற என் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டாயல்லவா?

அன்புடன்
ராஜன்

கதவுக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

எம்.விசுவநாதன்



சாரங்கனுக்கு அரை மணி நேரமாக யோசனை செய்ததில், பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. யோசனைக்கு மூலகாரணம் — ஒன்பதடி உயரமும் ஐந்தரை அடி அகலமும் கொண்ட ஒரு மரக் கதவுதான். பிரச்னையை அலசி, அவன் தனக்குள் மூன்று கேள்விகள் கேட்டுக் கொண்டான்.

'தாழ்ப்பாள் போடாமல் கதவைச் சாத்த முடியுமா?'

'கதவுக்குத் தாழ்ப்பாள் போடத்தான் வேண்டுமா?'

'கதவைச் சாத்தாமலே இருக்க வழி கிடையாதா?'

சாரங்கனுக்குப் பைத்தியம் பிடிப்பதற்கு முன்னால், மேற்படி மூன்று கேள்விகளுக்கும் விடை பிறந்தாக வேண்டும் மனத்தில்.

தாழ்ப்பாள் போடாமல் கதவைச் சாத்தமுடியும்; ஆனால் அடிக்கடி கதவு திறந்து கொள்ளும்.

கதவுக்குத் தாழ்ப்பாள் போடவேண்டிய அவசியமில்லை.

கதவைச் சாத்தாமலே இருக்க வழி கிடையாது — இப்போதைக்கு. அப்பாவுக்குத் தெரிந்தால் பிளந்து விடுவார்; கதவையல்ல, மண்டையை !

''எங்கேடா தொலைந்து போய் விட்டே, சாரங்கா?''

''எங்குமே தொலைந்து போகவில்லையே நான்!'' என்று சொல்லிக் கொண்டான் சாரங்கன், அப்பாவின்கூக்குரலுக்கு. ஆபீசிலிருந்து வந்ததும் வராததுமாக என்ன வேலை வைத்திருக்கிறாரோ என்று முணுமுணுத்துக் கொண்டான்.

''எப்போது ஆபீசிலிருந்து வந்தாய்?''

''சரியாக ஐந்து முப்பத்தைந்துக்கு. ஏன்?'' என்றான் சாரங்கன். அப்பாவின் கேள்வி அவனுக்கு அனாவசியமாகத் தோன்றியது. இருபத்தைந்து வயதான உத்தியோகம் பார்க்கும் ஒரு பொறுப்புத் தெரிந்த பிள்ளையிடம், நாற்பத்தைந்து வயதான உத்தியோகம் பார்க்கும் பொறுப்புத் தெரிந்த தகப்பனார் கேட்கும் கேள்வியா இது?

''அந்த இடைக் கதவுக்கு என்ன வழி பண்ணினே?''

''கதவா? வழியா? கதவையே எடுத்தால் தானே வழி பண்ண முடியும்?''

''பிரகஸ்பதி!'' என்றார் அப்பா. ''கதவையே எடுத்துவிடச் சொல்கிறாயாக்கும்!''

'எடுத்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான் சாரங்கன்.

''இரும்புக் கடைக்குப் போய் போல்ட், நட் இரண்டு வாங்கிக் கொண்டு வா, புறப்படு.''

''இப்பொழுதா!'' — மூச்சுத் திணறியது சாரங்கனுக்கு. ''தச்சன் வேண்டாமா என்ன? 'போல்ட்'டும்' நட்டு'ம் போதுமா? நேரமாகிவிட்டது அப்பா...எனக்கு அசதியாயிருக்கு!''

''இதே பதிலைத்தான் பதினைந்து நாட்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறாய் சாரங்கா! இன்றைக்கு நீ இதை வாங்கி வந்தால்தான் எனக்குத் தூக்கம் வரும்.''

''தூக்க மாத்திரையில்லாமல் உறக்கம் வராது என்று சொல்பவர்களைக் கண்டிருக்கிறேன். போல்ட்டும் நட்டும் இல்லாமல் உறக்கம் வராது என்று சொல்பவர் உண்டோ? வேடிக்கையாயிருக்கிறது அப்பா உங்கள் பேச்சு!''

''சாரங்கா!''

அதட்டல், உறுமல், பிளிறல், குளறல் எல்லாம் சம விகிதத்தில் கலந்த பயங்கரச் சத்தம், சாரங்கனின் தகப்பனாருடைய குரல் வளையிலிருந்து கிளம்பி, வாய் வழியே வந்து அறை முழுதும் வியாபித்து, சாரங்கனை நடுநடுங்கச் செய்து விட்டது.

''இன்று இரவு கதவை அடைப்பதற்கு என்ன செய்வது?''

அதட்டலுக்குப் பணிந்தான் சாரங்கன். மண்டையைக் குடைந்து கொண்டான்.

''அந்த அநாவசியச் சாமான் போட்டிருக்கும் மரப் பெட்டியை நகர்த்திக் கொண்டு வந்து கதவைச் சாத்தி அதற்கு அடைப்பாகப் போட வேண்டியதுதான்!'' என்று கூறினான் சாரங்கன்.

''பிரமாதம், ஐடியா ரொம்பப் பிரமாதம்!'' என்று சாரங்கனின் அப்பா ஜயராமன் சந்தோஷப்பட்டார்.

அப்பாவும் பிள்ளையுமாக அந்த ராட்சஸ மரப் பெட்டியைக் கூச்சலிடாத குறையாக நகர்த்திக் கொண்டு வந்து வைத்தனர்.

''இதை இந்தக் கதவோடு ஒட்டிப் போட வேண்டியதுதானே?''

''ஆமாம்!'' என்றான் சாரங்கன். அவனுக்கு அழுகை வரும் போல் இருந்தது. தங்கச் சுரங்கத்தைத் தேடிக் கண்டுபிடித்து விட்டு, அதைப் பெரும் பாறை கொண்டு நிரந்தரமாக அடைத்துவிட நேர்ந்ததை நினைத்தால், ஒருநாள் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு முழுக்க முழுக்க அழலாம் போல் இருந்தது!

''அப்பா!'' என்றான் சாரங்கன். ''இந்தக் கதவை இந்தப் பெட்டியை வைத்து அடைக்கத்தான் வேண்டுமா?''

சாரங்கனின் தகப்பனாருக்கு இயற்கையாகவே சற்றுப் பெரிய கண்கள்; கொட்டைப் பாக்கு மாதிரி. சாதாரணமாகப் பார்த்தாலே விழித்துப் பார்ப்பது மாதிரி யிருக்கும். பயங்கரமான உக்ரப் பார்வையாகப் பார்த்தால், எதிராளி பாதாளத்தில் அழுந்தி விடுவான், அதன் தீட்சண்யம் தாளாமல். அந்த 'ரக'ப் பார்வையில் ஒரு விழி விழித்தார்.

''முட்டாள்!'' என்றார் அவர் தும்மல் சத்தம் மாதிரி. ''அந்த இடைக் கதவைச் சாத்த வேண்டும். அதை யொட்டி அந்தப் பெட்டியைப் போட வேண்டும். இப்பொழுது தெரிந்ததா? இன்னொரு முறை இந்தக் கேள்வி கேட்க மாட்டாயே?''

''மாட்டேன்!'' என்று அழுத்தமாகச் சொன்னான் சாரங்கன்.

''அதுதான் சமர்த்துப் பிள்ளை என்கிறது!''

''கேள்வியல்ல, அப்பா! பெட்டியை நகர்த்திப் போட மாட்டேன்!'' என்றான் சாரங்கன் உறுதியாக. ''இப்பொழுது நகர்த்திப் போடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாளை தச்சன் வரப் போகிறான். நிச்சயமாக அவன் வரத்தான் போகிறான். கதவை ரிப்பேர் செய்து விட்டால், அந்தப் பெட்டியை அங்கிருந்து மறுபடியும் தள்ளிக் கொண்டு போய்ப் பழைய இடத்தில் வைக்க வேண்டு மல்லவா? அநாவசியம்தானே அது? இப்படியே இருந்து விட்டுப் போகட்டும். இன்றைக்கு ஒரு நாள்தானே?''

''பிரமாதம்டா சாரங்கா, பிரமாதம்!'' என்று பாராட்டினார் ஜயராமன்.

பெட்டி பழைய ஸ்தானத்திலேயே அமர்ந்து விட்டது.

சாரங்கன் வீட்டுக் கதவுக்கு இவ்வளவு வைத்தியம் நடப்பதற்குக் காரணம் உண்டு.

ஒரே வீடு இரண்டு வாயில் என்ற முறையில் கட்டப்பட்ட வீடு அது. பொது வராந்தா; பொது வாசற்படி. வீட்டை இரு பிளவாகப் பிளந்தமாதிரி சரி பாதி உள் அறைகள். மற்ற இடங்களில் மட்டும் நடுச் சுவர் இருக்க, கூடத்தை ஒட்டி மட்டும் மேற்படி கதவு இருந்தது.

அடுத்த பகுதியில் குடியிருந்த திருவாளர் சீதாராமனுக்கு, சாரங்கனின் அப்பாவைக் கண்டாலே 105 டிகிரி ஏறி விடும் உடம்புச் சூடு. 'மனுஷனா அவன்? வாயைத் திறந்தால் முட்டாள், கழுதை என்று வைது கொண்டு' என்று குற்றம் சாட்டுவார். சீதாராமனின் மனைவியான ராஜாம்பாளுக்கும், சாரங்கனின் அம்மாவுக்கும் ஒற்றுமையின் நேர் எதிர்ப்பதம் என்னவோ அதைத்தான் சொல்ல வேண்டும்!

ஆனால் சாரங்கனுக்கு மட்டும் ஏன் இவர்கள் இப்படி மோதிக் கொள்ள வேண்டும் என்று எவ்வளவு யோசித்துப் பார்த்தும் புரியவில்லை. சீதாராமனின் வீட்டில் ஒரு வன தேவதை போல் உலவி வந்த சம்பகா என்ற பெண் மயில் அப்படியும் இப்படியுமாக அரை குறையாகத் தலையை மட்டும் நீட்டும்போது அவன் மனம் கிடந்து அடித்துக் கொள்ளும். அவர்கள் இந்தப் 'போர்ஷ'னுக்குக் குடிவந்த முதல் நாளே சாரங்கன் அவளைப் பார்த்து விட்டான். ஆனால் அதற்குப் பிறகு அவன் நடத்திய எத்தனையோ முயற்சிகள் — அவளைப் பார்ப்பதற்குத்தான் — பயனற்றுப் போய்க் கொண்டிருந்தன.

'இந்த வீட்டைக் கட்டிய புண்ணியவான், இந்த இடைச் சுவரில் ஒரு சன்னல் வைத்துத் தொலைக்காமல் போனானே!' என்று சாரங்கன் அலுத்துக் கொள்வது உண்டு.

இடையே உள்ள கதவுக்குச் சாரங்கன் வீட்டுப் புறமாக மட்டும்தான் தாழ்ப்பாள் பொருத்தப்பட் டிருந்தது. 'தனித் தனி 'போர்ஷன்'தானே, யாராவது ஒரு பக்கம் சாத்தி விட்டால் போதாதா?' என்று நினைத்தானோ என்னவோ சிக்கன வீட்டுக்காரன்!

பதினைந்து நாட்களாகின்றன, அந்தத் தாழ்ப்பாள் கழன்று விழுந்து. காற்று அடித்தாலும் அடிக்காவிட்டாலும் அது 'ங் ங்' என்று சப்தித்துக் கொண்டே திறந்து கொள்ளும், பகாசுரன் வாயைத் திறப்பது மாதிரி.

திருவாட்டி சீதாராமன் சாரங்கனின் அம்மாவைப் பார்த்துத் தோள்பட்டையில் இடித்துக் கொள்ளும் காட்சிக்கு அதுதான் வழி விட்டது. சீதாராமன் ஜெயராமனை அலட்சியப் பார்வை பார்த்து, பதிலுக்கு அரக்கப் பார்வையொன்று திரும்பப் பெறவும் அதுதான் அடிகோலியது. ஆனால்—

மைதீட்டிய இரு விழிகளின் காதல் பார்வையும், அதற்குப் பதிலாக அன்பும் அசட்டுத்தனமும் வழியத் தன் விழிகளால் சாரங்கன் சம்பகாவை ஒரு பார்வை பார்ப்பதற்கும் அதுதான் வழிவிட்டது!

'சம்பகா, உன் நீலோத்பலக் கண்களை நினைக்கவா? எள்ளுப்பூ நாசியை நினைக்கவா? சங்குக் கழுத்தை நினைக்கவா? எதை நினைக்கச் சம்பகா, நான் எதை நினைக்க?' என்று நினைத்து நினைத்து நினைவில் ஒன்றிப் போயிருக்கிறான் சாரங்கன் எத்தனையோ முறை.

'அந்தக் கதவு சாத்தப்படாமலே போய் விடக் கூடாதா? அந்தக் கதவே பிளந்து விழுந்து விடக் கூடாதா? ஹே, வீட்டுக்கார மகாப் பிரபோ! அந்தக் கதவைப் பெயர்த்து எறிந்து விட்டு, 'இனி இந்த வீட்டுக்கு இடைக் கதவே கிடையாது!' ' என்று என் மனசு இனிக்க ஒரு தரம் சொல்ல மாட்டாயா?' என்று சாரங்கன் பதினைந்து நாள் அனுபவத்தில் அமிழ்ந்து போய் வேண்டிக் கொண்டிருந்தான். கதவுக்கு மட்டும் — இரண்டு காதுகள் தேவையில்லை — குறைந்த பட்சம் ஒரு காதே

னும் இருந்திருந்தால், 'சாரங்கா! வீழ்ந்தேன் நின் பாதங்களில்; பிளந்தேன் இரு கூறாக! உன் எண்ணம் நிறைவேறுவதாக!' என்று பிளந்து வீழ்ந்திருக்கும். ஹூம், கேவலம், மரக் கதவு. இந்த மனிதக் கதவுகளுக்கே இரக்கம் இல்லாதபோது, வெறும் கதவிடம் எப்படி இரக்கம் எதிர்பார்க்க முடியும்? மனிதர்களா இவர்கள்? மனிதனுக்கு மூளை தான் வேண்டாம்; மனசு கூடவா இல்லை? கதவே!'

மறு நாள்; ஆபீசுக்கு லீவு எழுதி அனுப்பிவிட்டு, தச்சனைப் பிடித்து வரப் போனான் சாரங்கன்.

அருகிலிருந்த 'பர்னிச்சர் மார்ட்'டில் அன்றாடக் கூலிக்கு வேலை பார்த்து வந்த ஜேக்கப், முதலாளியிடம் சொல்லிக் கொண்டு வரவே ஒரு மணி நேரம் பிடித்தது. தச்சனுடன் வீடு நோக்கி வரும்போது சாரங்கனுக்குத் தாபம் குமுறிக் கொண்டு வந்தது. அனார்க்கலிக்கு உயிர்ச் சமாதி கட்டும் போது சலீம் இருந்த மன நிலையில் சாரங்கன் இருந்தான். சலீமாகச் சாரங்கனும், அனார்க்கலியாக சம்பகாவும், அவன் மனத்தில் திரைப் படம் ஓடிய ஐந்து நிமிஷத்தில் ஜேக்கப், ''சாரே, போல்ட்டும் நட்டும் கொண்டு வரான் மறந்து போயி! இப்பத்தன்னே ஓர்மை வந்து...ஷாப்புக்குப் போய்க் கொண்டு வராம்!'' என்று முழு மலையாளத்தில் கூறியது, கேட்க விசித்திரமாக இருந்தாலும், அவன் காதில் சுமார் பத்து முதல் பன்னிரண்டு அவுன்ஸ் கொம்புத் தேனைப் பாய்ச்சியதுபோலிருந்தது. ஆனால் உண்மையில் காதில் தேன் பாய்ந்திருந்தால் தானே தெரியும் சாரங்கனுக்கு, காதெல்லாம் எப்படிப் பிடித்துக் கொள்ளும் என்று!

கதவருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டான் சாரங்கன்.

''எங்கேடா, தச்சன் வந்தான். மூக்கால் ஏதோ முணுமுணுத்தது கேட்டது. ஆளையே காணோம்!'' என்றாள் அவன் அம்மா உள்ளிருந்து வந்தபடியே.

''வந்தான். போனான், போல்ட்டு நட்டு வாங்க. வாயால்தான் பேசினான் பாவம். மலையாளத்தில் மொழிந்தான், அவ்வளவு தான். மூக்கால் பேசினால் அவனாலேயேகூடப் புரிந்து கொள்ள முடியாதே!'' என்றான் சாரங்கன்.

ஜேக்கப் போல்ட்டும் நட்டும் தாம்பாளமாக வாங்கிவந்து, வேலையைத் தொடங்கும் பொழுது மணி பதினொன்றைத் தாண்டி விட்டது. கதவுக்கு நேரே நாற்காலியைப் போட்டான் சாரங்கன்: அதில் அமர்ந்து கொண்டான்.

ஜேக்கப் வேலையைத் தொடங்கினான், ஏதோ பெரிய 'பிராஜக்ட்' ஒன்றைத் தொடங்குபவன் போல.

சீதாராமன் ஆபீசுக்குப் புறப்படுமுன் ஒரு முறை முறைத்து விட்டுப் போனார். மிஸஸ் சீதாராமனும் அவன் பங்குக்கு ஒரு முறை முறைத்தாள். சம்பகாவின் ஒரு தண்ணிய பார்வை கிடைத்தால் இந்த இரண்டையும் துச்சமாக மதித்துவிடச் சாரங்கன் தயார் தான். சம்பகாவின் முகம் கண்ணில் படாதா என்று காத்திருந்தான் சாரங்கன். ஜேக்கப்புடன் பேசும் பொழுது குரலை அடிக்கடி உயர்த்தி உயர்த்திப் பேசினான், குரல் கேட்டாவது அவள் தலை நீட்டுகிறாளா என்று பார்க்க. பலன்—

ஜேக்கப்புக்குச் சந்தேகம் வந்ததுதான்—தன்னைச் சாரங்கன் செவிடு என நினைக்கிறானோ என்று. ''நான் செவிடல்லா சாரே!'' என்றான் ஒரு முறை!

பளிச்சென்று கரும் சாட்டை யொன்று விசிறி மடங்கியது. சாரங்கன் தாகமெடுத்த விழிகளை விரித்து நோக்கினான்·

சம்பகா!

''ஐயோ, புன்னகையா புரிந்தாள்? நம்மைப் பார்த்தா? புன்னகையா? மின்னலா? பின்னலா? மின்னலா?' — சாரங்கனுக்கு மகிழ்ச்சி வெறியில் பழையபடி மூளை குழம்பி, பைத்தியம் பிடித்துவிடும்போல் ஆகிவிட்டது.



ஒரு மணிவாக்கில் வேலையை எல்லாம் முடித்த ஜேக்கப், "எத்தற பழசாயி, ஈக் கதவு.....நல்ல பெயிண்டு கொடுத்தால் பள பளத்து ஒந்நாங் கிளாசாயிட்டிருக்கும் சாரே! கொண்டு வரட்டே?" என்றான்.

அந்தக் கதவு இன்னும் எத்தனை நேரம் திறந்திருக்க முடியும் என்பதைக் கற்பனை செய்து பார்த்த சாரங்கன், "ஆஹா போய்க் கொண்டு வா.... சாப்பிட்டு விட்டு வரும் போது கொண்டு வந்தால் போதும்!" என்று அவனைப் பாராட்டி விட்டு, ஒரு ரூபாய் நோட்டைத் திணித்தான் அவன் கையில், சாப்பாட்டுக்காக.

ஜேக்கப் படுகுஷியுடன் நடந்தான்.

மூன்று மணிக்கு மேலாகி விட்டது ஜேக்கப் பெயிண்டும் கையுமாகத் திரும்பி வந்தபோது. அவன் வேலையைத் தொடங்கும் போது, வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது.

சரிகை அங்கவஸ்திரம் காற்றில் பறக்க, பட்டுப் புடவை சலசலக்க, பூட்ஸ் சப்திக்க, முறையே ஒரு கனவானும், ஓர் அம்மாளும், ஒரு வாலிபனும் நுழைந்தார்கள்.

"மிஸ்டர் சீதாராமன் வீடு.....?"

"பக்கத்து போர்ஷன்தான்!" என்று சாரங்கன் எழுந்து வந்து பாதை திருப்பி விட்டான்.

அம்மாதிரி ஓர் இளைஞன், தன் இதயநாயகியான சம்பகா இருக்கும் இல்லத்தில் நுழைவதைப் பார்க்கச் சாரங்கனுக்கு எப்படியோ தான் இருந்தது. அதுவும் ஒரு தகப்பனாரும் அம்மாவும் உடன் அழைத்துக் கொண்டு ஓர் இளைஞன் அங்கே நுழைந்தான் என்றால்?—

சாரங்கனுக்குப் புரிந்து விட்டது! பெண் பார்க்க வந்திருக்கிறார்கள்!

'சாரங்கா! நீ மோசம் போக இருக்கிறாய்! நீ பிடித்த மீனை இந்தப் புதிய கொக்கு கொத்திக் கொண்டு போகப் போகிறது. நீ ஏமாந்து நிற்கப் போகிறாய்!'

பத்து நிமிடங்களுக்கெல்லாம் சீதாராமன் வந்து விட்டார், ஆபீசிலிருந்து சற்று முன்னதாகவே. வீடு அமர்க்களப்பட்டது. எவர்சில்வர் தட்டுக்களின் ஓசையும், தம்ளர்களின் ஒலியும் எழுந்தன.

ஜேக்கப் கதவுக்குப் பெயிண்ட் பூசிக்கொண்டிருந்தான். சாரங்கனின் துடிப்பு ஜேக்கப்புக்குத் தெரியுமா என்ன?

கைகளைப் பிசைந்து கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்தான் சாரங்கன். 'நம்மை விட அழகா இளைஞன்?' என்று நினைத்துக் கொண்டான்.

ஜேக்கப் பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்தான். பெயிண்ட் மணம் அறை யெங்கும் கமழ்ந்தது. சாரங்கனின் மனசு கிடந்து அடித்துக் கொண்டது, என்ன ஆயிற்றோ, என்ன ஆகுமோ என்று. அவனால் சம்பகாவை அவ்வளவு எளிதில் மறந்து விடவும் முடியவில்லை. அவளைக் கைநழுவ விட்டு விடவும் அவன் தயாரில்லை!

'சாரங்கா! சாரங்கா!' என்று அவனுக்குள்ளேயே அழைத்துக் கொண்டான் உரக்க. அவன் மூளை மாவு மில் யந்திரம்போல் வேலை செய்தது. அவனுக்குள்ளிருந்த சாரங்கன் வெளி வந்தான். சாரங்கன் துணியவில்லை என்றால் வேறு யார் துணிவது?

மடமடவென்று மேசை இழுப்பறையைத் திறந்து ஒரு தாளைக் கிழித்தான். புதிதாக வாங்கியிருந்த 'பால் பாயிண்ட்' பேனாவை எடுத்து அதன் முதுகில் ஒரு சிறு அமுக்கு அமுக்கினான். சரசர வென்று நாலு வரிகள் அதில் கிறுக்கினான்:

'பெண்ணுக்கு ஏற்கனவே ஓர் இளைஞனிடம் தொடர்பு உண்டு. வேண்டாம் இந்தச் சம்பந்தம்!'

'இளைஞன்' என்று போடுவதா? 'வாலிபன்' என்று போடுவதா? சாரங்கனுக்கு இக்கட்டான இச்சமயத்தில் இப்படி ஒரு சந்தேகம்!

அதை மடித்து வைத்துக் கொண்டு பழைய படி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சீதாராமன் 'போர்ஷன்' பக்கமே நோட்டம் விட்டான் சாரங்கன்.

சம்பகா பாடுகிறாள் போல் இருக்கிறது. பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது சாரங்கனுக்கு. மனிதனுக்குக் காதுகளைப் படைத்தவனைக் கையைப் பிடித்துக் கை குலுக்கக் குலுக்க வேண்டும் என்று அப்போது நினைத்துக் கொண்டான் சாரங்கன்.

அவன்மார்பு கிடந்து படபடவென்று அடித்துக் கொண்டது. ஜேக்கப்பிடம் கொடுத்து அந்தப் பெரியவர் போகும் வழியில் கொடுத்து விடலாமா என்று யோசித்தான். புதிய ஆளான ஜேக்கப் காட்டிக் கொடுத்து விட்டால் என்ன செய்வது என்ற யோசனை வந்து தடுத்தது.

"ஆஹா!" என்று துள்ளிக் குதித்தான் சாரங்கன். பின் தலையில் ஒரு கையிருந்தால் அவனே அவன் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பான். பிரமாதமான 'ஐடியா!'

புத்தம் புதிய ஒரு ரூபாய் நோட்டு ஒன்றில் அந்தத் தாளை வைத்து அதை நான்காக மடித்து, சீதாராமனின் வீட்டுக்குள் அவர்கள் வரும் வழியில் எறிந்து விட்டால்? ரூபாய் நோட்டைக் கண்டு எடுத்துப் பார்க்கத் தானே வேண்டும்? பிள்ளையோ, பிள்ளையின் தகப்பனாரோ தான் முதலில் வருவார்கள். இருவரில் ஒருவர் பார்த்தாலும் போதுமே!

ஜேக்கப் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டு அதை வாயிற்படியோடு ஒட்டி எறிந்தான் சாரங்கன். அவன் நினைத்த இடத்தில் அது போய் விழுந்தது. சாரங்கன் மனம் பயங்கரம், அதி பயங்கரம், மகா பயங்கரம் ஆகிய மூன்று கதியில் அடித்துக் கொண்டது.

ஆயிற்று இதோ எழுந்து விட்டார்கள். இதோ வந்து விட்டார்கள். இதோ மாப்பிள்ளையின் தகப்பனார் தாண்டி விட்டார் அவன் குறியை. பின்னே?

சாரங்கனின் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கி ஓய்ந்தது. வியர்வை கொட்டியது. இதுவரையில் இந்த வாழ்க்கையிலேயே செய்திராத புதுமையான காரியத்தைச் செய்திருக்கிறான்..

"ரூபாய் நோட்டு உங்களுடையதா? கீழே கிடக்கிறதே!" பிள்ளையின் தகப்பனார் எடுக்க மறந்ததைப் பிள்ளை எடுத்துவிட்டான். சாரங்கன் நாற்காலியில் அசையாமல் அமர்ந்திருந்தான். சீதாராமன் பிள்ளையின் அருகில் வருவதற்குள், அந்த நோட்டோடு ஒட்டிக் கிடந்த தாள் பிள்ளையின் கண்ணில் நன்றாகப் பட்டிருக்க வேண்டும்.

அவன் முகத்தில் ஒரு சிவப்புப் படர்ந்தது. கண்ணாடியைக் கழற்றிக் கைக் குட்டையால்

முகத்தை ஒரு முறை துடைத்துக்கொண்டே, ''அப்பா! இதைப் பாருங்கள்!'' என்றான்.

''என்ன....என்ன?'' என்று ஓடி வந்தார் சீதாராமன்.

''சும்மா இரும் நீர்!'' என்றான் பிள்ளையாண்டான், ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால் தனக்கு மாமனார் ஆகப் போகிறவராக இருந்தவரிடம். பிள்ளையின் தகப்பனார் தாளைப் படித்து விட்டு, சீதாராமனைப் பரம அலட்சியமான பார்வை யொன்று பார்த்தார். ''என்ன ஸ்வாமி, என் பிள்ளையின் தலைதானா கிடைத்தது உமது ஓடுகாலிப் பெண்ணை வைத்துக் கட்ட? இதைப் பாரும்!''

சீதாராமனுக்கு ஒன்றும் புரியாவிட்டாலும் தாளைக் கண்டதும் புரிந்து விட்டது.

''எவனோ தறிதலை பண்ணி யிருக்கிறான் சார்! இதை நீங்கள் நம்பக் கூடாது...இது பெரிய அநியாயம்! என் பெண் மகா உத்தமி! நம்பாதீர்கள் சார் இதை!'' — சீதாராமன் அழவில்லை, அவ்வளவுதான்.

''சரிதான் போமய்யா! உம்ம பெண்ணும் ஆயிற்று, நீரும் ஆயிற்று! எவனோ நல்ல வேளையாக இந்தச் சமயத்தில் எனக்குத் தெரியப்படுத்தினானே, அவன் நன்றாக இருக்க வேண்டும்! தாலியைக் கட்டிய பிறகு அவஸ்தைப்படுவதைவிட......''

''இது அக்கிரமம் சார், அடுக்காது! அடுக்கவே அடுக்காது!'' என்று பெருங்குரல் எடுத்தார் சீதாராமன்.

சாரங்கனால் சகஜ பாவத்துடன் இருக்க முடியவில்லை. தன் பதற்றத்தை, எதிரே நடக்கும் கூத்தைக் கவனியாத மாதிரி பாவிக்க, ''என்ன ஜேக்கப்...பெயிண்ட் போதுமா? இன்னும் வாங்கிவர வேண்டுமா?'' என்றான். அவன் குரலே இயற்கையாக இருக்கவில்லை.

''இது மதி ஸாரே!'' என்றவன் சாரங்கனைப் பார்த்து ஒருமாதிரியாகச் சிரித்தான். சாரங்கனுக்கு அடி வயிற்றிலிருந்து கழுத்து நுனி வரை சரியாக ஒரு கலக்குக் கலக்கியது. 'இந்தப் படுபாவி பார்த்துத் தொலைத்து விட்டானோ, நாம் வீசிப் போட்டதை?'

''இது யாரோ களவாணிப் பயல் பண்ணின வேலை சார்!'' என்று கூறிய சீதாராமன் வருடக்கணக்காகப் பார்க்கும் வெறுப்பான பார்வையைச் சாரங்கன்மீது ஓட்டினார். 'தம் குடும்பத்துக்கு ஆகாதவன் என்பதால் இவன் பண்ணின வேலையாகக் கூட இருக்குமோ?' என்று சீதாராமன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, சூழ்நிலையையோ, சந்தர்ப்பத்தையோ, மொழி அறியாத குற்றத்தினால் உணராத ஜேக்கப், சாரங்கனை நோக்கி, ''நீங்களல்லே ஸாரே அதெ அவ்விட இட்டதே?'' என்று கேட்டுத் தொலைத்தானே பார்க்க வேண்டும்!

''பார்த்தீர்களா, பார்த்தீர்களா சார்! இது மாதிரி துடைகாலிப் பசங்கள் இருக்கிற இந்த உலகத்திலே நியாயம் அநியாயம் எப்படித் தெரியும் சார்!''

சாரங்கன் பயந்து போய் அலறியிருப்பான், ஜேக்கப்பின் பேச்சு விளைவித்த விளைவில்! அவனுக்குத்தான் குரலே எழ மாட்டேன் என்கிறதே!

''சரிதான் நிறுத்துமய்யா! அவர் பண்ணினதும் எங்களுக்கு நல்லதுக்குத்தானே? அடுத்த வீட்டுக்காரர் ஆனதால் விஷயம் தெரிந்திருக்கிறது! என் பிள்ளையைப் பாதாளத்திலிருந்து காப்பாற்றியதுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும் அவருக்கு.... வாடா, சங்கர். ஏறு வண்டியில்!'' என்று கிளம்பி விட்டார்.

''தாங்க்ஸ் சார்!'' என்றான் பிள்ளையாண்டான் சாரங்கனை நோக்கி.

வண்டி கிளம்பிற்று.

சாரங்கனின் தகப்பனார் அலுவலகம் விட்டு வந்து சேருவதற்கும், சீதாராமன் அவரை நோக்கிப் பாய்வதற்கும், சாரங்கன் ஜேக்கப்பை நோக்கிப் பாய்வதற்கும் ஒரே சமயம் தானா கிடைத்தது?

''நீர் நன்றாக இருப்பீரா? உம் குடும்பம் நன்றாயிருக்குமா? அநியாயம் பண்ணுகிறானே ஐயா உம்ம பிள்ளை!'' என்று கூக்குரலிட்டார் சீதாராமன்.

சீதாராமனின் மனைவி ராஜம்மாளும் சேர்ந்து கொண்டு தனக்கும் கீச்சுக் குரலால் கத்த முடியும் என்று நிரூபித்தாள்.

ஜேக்கப்புக்குத் தலையும் புரியவில்லை;வாலும் புரியவில்லை.

''என்ன நடந்து விட்டது என்று இப்படித் தொண்டை கிழிய வாய் கிழிய, உடம்பு கிழியக் கூச்சலிடுகிறீர்?''என்றார் ஜெயராமன்.

''என்ன நடந்து விட்டதா? என் பெண்ணின் வாழ்க்கையே போயிற்று ஐயா! உம் பிள்ளை கெடுத்தான் ஐயா, கெடுத்தான்!''

பதினைந்து நிமிட அலறலுக்குப் பிறகு முழு விவரமும் அவருக்கு அஞ்சல் செய்யப்பட்டது.

'சாரங்கா!'' என்று ஓர் அலறல் கேட்டது. சாரங்கன் தகப்பனாரைப் பார்க்கவே பயந்தான்.

''நீ செய்தது உண்மைதானா?''

சாரங்கனுக்குப் பதில் சொல்லவும் முடியவில்லை. சொல்லாமலிருக்கவும் முடியாது. கைகளைப் பிசைந்து கொண்டு, பரிதாபமாக ஒரு பார்வை பார்த்தான் எல்லாரையும். சம்பகாவின் முகம் அவனுக்கு நேரே தெரிந்தது. ''ஆமாம் என்று சொல்லுங்களேன்!'' என்பது போல் ஜாடை காட்டினாள் அவள். தூக்குமேடையே ஆயினும் சரி என்று உறுதி கொண்டவன் போல், ''ஆமாம் அப்பா!'' என்றான் சாரங்கன்.

''பார்த்தீரா ஐயா! இந்த மாதிரிப் பிள்ளையைப் பெற்றிருக்கிறீரே நீர்! நன்றாயிருப்பானா அவன்?''

''நன்றாயிருப்பானா என்று என்னைக் கேட்டால்? உம் பெண்ணைக் கேளும் நன்றாயிருக்கிறானா என்று!'' ஐந்து வினாடி அமைதிக்குப் பிறகு ஜெயராமன் போட்ட இந்தக் குண்டு சீதாராமன் முதலிய எல்லோரையும் தூக்கி வாரிப் போட்டது.

சம்பகாவுக்கு நாணச் சிவப்பு வந்து கன்னத்தை வருடியது. எல்லோரும் அவளையே நோக்கினர். சாரங்கன் அவளை விழுங்குவதைப்போல் பார்த்துவிட்டுப் புன்னகை செய்த போது, அவள் வெட்கம் சூழ அவள் அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்டதும், ''இந்தக் கதவுக்கு இத்தனை செலவு செய்து தாம் போட்டு வர்ணமே அடித்திருக்க வேண்டாம், இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால்!'' என்றார் ஜெயராமன் எல்லோர் சிரிப்புக்கு மிடையில்.

ஆனால் சாரங்கனோ அந்த மரக்கதவுக்கும் மலையாள ஜேக்கப்புக்கும் 'ஜே' போட்டுக் கொண்டிருந்தான் மனத்துக்குள்!

தமிழ் கூறும் நல்லுலகம்

திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் புது தில்லிக்கு விஜயம் செய்கிறார்கள் என்றால் இவ்வூர்த் தமிழர்கள் சும்மா விடுவார்களா? சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தினார்கள். இந்தக் கைங்கரியத்தைத் தில்லித் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டது.

தில்லி வந்த அன்று 4500 மைல்கள் கிட்டத்தட்ட காரில் சுற்றி வளைத்து முடித்திருந்தனர் திருதொண்டைமான் குழுவினர். எல்லோராலும் புகழப்படும் எல்லோரா முதல் எங்கே மூர்த்தி என்று தேட வேண்டிய ராஜஸ்தான் கோயில்கள் வரை கண்டு விண்டனர். கோஷ்டியில் ஒருவரான கிரிதாரி பிரசாத் என்ற வட இந்தியத் தென்னிந்தியர் அயோத்தியில் பிறந்தும் அருந்தமிழ் பேசுபவர். அப்பரும், சுந்தரரும், சம்பந்தரும், மாணிக்கவாசகரும் சதா அவர் நாவில் தாண்டவமாடுவர். மேற்கோளே குறிக்கோள்; சொல் மாரிதான்.

7-4-62 அன்று இக்குழுவினருக்கு அளித்த வரவேற்பில் தலைமை தாங்கியவர் சாலை இளந்திரையன் அவர்கள். அவர் தமிழ் நடை வெயில் காலத்தில் குளு குளுவென் றிருக்கும். சாலை வழியில் போகும் போது உண்டாகும் இனிமைக்கு நிகர். ரத்தினச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

தொண்டைமானுக்கு அறிமுகம் வேண்டுமா என்று கேட்கலாம். ஆனால் புறநானூறு சீனிவாசன் அவர்கள் பேசிய பின்பு அந்தக் கேள்விக்கு இடமில்லாமல் போய் விட்டது. ஒரு நல்ல கருத்துக்கா உலகம் முழுதும் சுற்றத் தயாராக இருக்கும் டி. கே. சி. கோஷ்டியைச் சேர்ந்த அவர் ஓர் அற்புதமான விஷயம் சொன்னார். சைவமும் வைணவமும் கலந்து கலந்து வாழ்ந்ததை விளக்கி, வடக்கே பத்ரிநாத், கேதாரி நாத், கிழக்கே ஜகந்நாத், விஸ்வநாத், மேற்கே துவாரகாநாத், சோமநாத், தெற்கே ராமநாத், ரங்கநாத் என்று உதாரணம் கொடுத்தார்.



பின் எழுந்தாரையா, திரு கிரிதாரி பிரசாத். திரு தொண்டைமான் அவர்கள் பின்னர் சொன்னது போல் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ள நாம் வெட்கப்பட வேண்டியதுதான். என்ன நடை! என்ன கம்பீரம்! என்ன சரளம்! என்ன வாக்கு சுத்தம்! என்ன வேகம்! சுவைத்தும் சுவைத்து ரசித்து ரசித்து நம்மை மெய்ம் மறக்கச் செய்து விட்டார். சைவமும், வைணவமும், தமிழோடு ஒன்றி, ஆணவத்தை அடக்கி ஆண்டவனை அடையப் பட்ட அரும் பாட்டை அழகுத் தமிழில் எடுத்துரைத்தார்.

கடைசியாகப் பேசிய தொண்டைமான் அவர்கள் ஒரு முறை தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஒரு மணி நேரம் தமிழ் அருவி ஊற்றெடுத்து ஓடிற்று. சிற்பங்களைக் கண்டோம்! சிற்பிகள் வார்த்த அற்புதம் கண்டோம் கற்பனையின் எல்லையைக் கடந்தோம்! சிற்பங்களின் ஒவ்வோர் அசைவுக்கும் பொருள் கூறினார் திரு தொண்டைமான்.

மணி பத்தாகி விட்டது. கேட்போருக்குச் சலிப்பில்லை. ஆனால் பத்து பதினொரு மைல்கள் நெடுஞ் சாலைகளில் செல்ல வேண்டுமே தில்லியில்! சாலை இளந்திரையன் மறுபடியும் குளிர்மிகு தமிழில் வந்தனோபசாரம் சொன்னார்கள். விழா இனிது முடிந்தது. — சுப்பு

★

ஆமதாபாத் தமிழ் மன்றத்தினர், கடந்த மார்ச் 24-ந் தேதியன்று வடவேங்கடத்துக்கு அப்பால் தற்போது தல யாத்திரை செய்து வரும் தமிழறிஞர், அருங்கலைத் தொண்டர் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுக்கு அமோக வரவேற்பளித்தனர்.

மன்றச் செயலாளர் திரு கே. கே. தியாகராஜன் அவர்களால் மன்றத்தின் சார்பில் திரு தொண்டைமான் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. திரு கே. ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் நடந்த இவ்விழாவில் ''கம்பனின் கவி நயம்'' என்னும் பொருள்பற்றித் திரு பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் சொற்பொழிவாற்றினார். அவருடன் தல யாத்திரை செய்து வரும் திரு கிரிதாரி பிரசாத் அவர்கள் ''திருவாசகத்தேன்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

★

நார்கேலா தக்ஷிண பாரத் சமாஜத்தின் ஆதரவில் சென்ற மார்ச்சு மாதம் 25-ம் தேதி திரு சி. சங்கர நாராயணன் எழுதிய 'திரைக்குப் பின்னால்' என்ற நாடகம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. நாடகத்தில் நடித்த எல்லா நடிகர்களும், அங்கு குழுமியிருந்த சுமார் இரண்டாயிரம் நாடக ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்கள். இந்த நாடகத்தில் காட்சி ஜோடனைகளும், ஒப்பனைகளும் அற்புதமாக அமைந்திருந்தன.



Our New Rulers (Sotto Voce: Second Series)

சமூகத்திலும், சர்க்கார் நடவடிக்கைகளிலுமுள்ள சிறுமைகளைக் கண்டு சீறி எழுபவர்கள் பலர். ஆனால் அந்தச் சீற்றத்தையே சிரிக்கும்படி எழுத்தில் வடித்துத் தருபவர்கள் மிக மிகச் சிலரே. அந்த வெகு சிலரில் பெரும் புகழ் பெற்றிருப்பவர் 'விக்நேகவரா' அவர்கள். சநாதன ஹிந்து தர்மத்துக்கு மாறாக எடுக்கும் எந்த நடவடிக்கையையும் காரணம் காட்டிக் கண்டிப்பதில் அவருக்கு ஈடாகச் சொல்ல ஒருவரும் கிடையாது. ஸ்விஃப்ட்டையும், ஷாவையும் நிகர்த்த அவரது கேலித்திறனைக் கண்டு கண் திறக்கப் பெறுகிறோம் நாம். ஆனால் இந்த விக்நேகவராவிடம் அவ்விருவரிடமும் காண முடியாத ஒரு மனிதாபிமானத்தையும், வாசகர்களுடன் அன்பால் உறவு பூணும் இனிமையையும் சேர்த்துக் காண்கிறோம். தம்முடைய பழைய கால நினைவுகளைப் பற்றி எழுதும் போதெல்லாம் சார்ல்ஸ் லாம் போல் நம் அன்புக்குரியவராகிறார் விக்நேகவரா. சில கட்டுரைகள் — உதாரணமாக ஸ்ரீ ரமணர் குறித்தது — நம் உள்ளத்தைத் தொடுகின்றன. சமயம், வேதாந்தம், கலைகள், அரசியல், வரலாறு எல்லாவற்றிலும் அவருக்குள்ள ஆழ்ந்த ஞானமும், அவற்றின் பெருமையைக் காப்பதில் அவருக்குள்ள அக்கறையும் இந்நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன. முக்கியமாக, இன்று தனி நபர் சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையில் 'புது ஆட்சியாளர்கள்' செய்துள்ள செயல்களுக்குச் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பே அவர்கள் வித்தூன்றியதையும் அப்போதே விக்நேகவரா அவர்கள் எவ்வளவு விழிப்புடனிருந்து தீர்க்கதரிசனத்துடன் நமக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என்பதையும் இப் புத்தகம் விளக்குகிறது: விக்நேகவராவின் ஆங்கில நடையைப் பாராட்ட அதற்கொப்பான தமிழ் நடை தேவை. அவர் எழுத்தில் காணும் நாஜுகித வண்ணங்கள் அவரது கருத்து என்னும் சித்திரத்தை மறைப்பனவல்ல. வண்ண விசித்திரங்களைப் புற அம்சமாகக் கொள்ளாமல், அவை தம்முடனேயே பிணைந்து நிற்கும் எழிலாகக் கொண்ட மலர்களைப் போலவும், மாலை வானத்தைப் போலவும் விக்நேகவராவின் கருத்தும் அலங்கார நடையுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது.

காஸா சுப்பா ராவ் அவர்கள் நடத்தி வந்த 'ஸ்வதந்திரா'வில் 'ஸொட்டோ வோஸ்' என்ற தலைப்பில் வெளி வந்த கட்டுரைகளின் இந்த இரண்டாவது பாகம் ஆங்கிலம் அறிந்தவர்களின் நல்லதிருஷ்டம்: ஆங்கிலத்தின் அதிருஷ்டமும் கூட.

பிரகரம்: பி. ஜி. பால் கம்பெனி, 41, பிரான்ஸிஸ் ஜோசப் தெரு, சென்னை-1 சாதாரணப் பதிப்பு ரூ. 5: நூல் நிலையப் பதிப்பு ரூ. 6.

சித்திரலேகா

'பாவம் என்றால் என்ன?' என்ற வினாவுடன் ஆரம்பிக்கிறது இந்த அற்புத நவீனம். ரத்னாம்பரர் என்ற யோகியிடம் தான் இத்தகைய கேள்வியை எழுப்புகின்றனர் அவரது சீடர்களான சுவேதாங்கனும் விசால தேவனும். யாராலும் விடை காண முடியாத இந்தப் புதிரைத் தம் சீடர்களுக்குப் புரிய வைக்க விரும்புகிறார் ரத்னாம்பரர். இது வெறும் வார்த்தை விளக்கங்களால் ஆகாத காரியம் என்றுணர்ந்து பாவம் என்றால் என்ன, அது எங்கே வாசம் செய்கிறது என்பதை அனுபவ பூர்வமாக அறிந்துகொள்ளுவதற்காக அவ்விருவரையும் வாழ்வு என்னும் கரை காண முடியாத கடலில் இறக்கி விடுகிறார்.

இந்த வாழ்க்கைக் கடலில்தான் பாடலிபுத்திரத்தின் அழகிற் சிறந்த நடன மாது சித்திரலேகா வருகிறாள். பீஜகுப்தனையும் யோகி குமாரகிரியையும் அழகி யசோதராவையும் சந்திக்கிறோம். வாசகர்களாகிய நாமே சுவேதாங்கனாகவும், விசாலதேவனாகவும் மாறி அவர்கள் அனுபவித்த இன்ப, துன்ப உணர்ச்சிகளை அனுபவிக்கிறோம். எத்தனையோ தத்துவங்கள், உண்மைகள், வாழ்க்கை விளக்கங்கள், உணர்ச்சிப் பின்னல்கள் ஆகியவற்றை யெல்லாம் காண்கிறோம். இல்லை; அவைகளின் வயப்படுகிறோம்!

இத்தனையையும் எளிய, இனிய, சுவையான நடையிலே, குழப்பமோ முரண்பாடோ இல்லாமல் பெரிய பெரிய விஷயங்களை யெல்லாம் அழகாக, ரசிக்கத் தகுந்த முறையிலே விறுவிறுப்பான கதைப் போக்கிலே சொல்லிக் கொண்டு போகிறார் ஆசிரியர் பகவதி சரண் வர்மா.

''பெண்ணானவள் அந்தகாரத்துக்கு ஒப்பானவள். மோகாந்தகாரத்தில் உழலுபவள். மாயை வசப்பட்டவள்: இச்சைகளைத் தூண்டி

விடுபவள். அறிவுச் சுடர் பிரகாசிக்கும் இடத்தில் அவளுக்கு இடங் கிடையாது'' — இப்படிப் பெண்களைப் பற்றி வியாக்கியானம் செய்யும் யோகி குமாரகிரிக்கு, ''ஒளியில் மதிமயங்கிய விட்டில்பூச்சிக்கு இருள் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது'' என்று அறிமுகமாகும் சித்திரலேகா பின்னால் எப்படி அவர் சிந்தையெல்லாம் நிறைந்து ஆட்டுவிக்கிறாள் என்பதைப் படித்தால்தான் ரசிக்க முடியும்.

காதல் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தருவது போல் அமைந்துள்ளது பீஜகுப்தனின் வாழ்க்கை. படித்து விட்டு நினைத்து நினைத்து மகிழ வேண்டிய பாத்திரம்.

இத்தனை பெரிய நாவலில், ஒரு கடினமான விஷயத்தை எடுத்துக் கொண்டு அதை விளக்கும்போது படிப்பவருக்கு அலுப்போசலிப்போ ஏற்படாத வகையில் ஒவ்வொரு காட்சியையும் ஒப்பற்ற முறையில் உருவாக்கிக்கொண்டு போகும் ஆசிரியரின் திறமையை எத்தனை பாராட்டினாலும் தகும். சிருங்காரக்காட்சிகள் நம் சிந்தையை விட்டு அகலாதவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஹிந்தி மூலத்தின் சுவை கெடாதது மட்டுமல்லாமல் தமிழ் மொழியின் இனிமையையும் சேர்த்து மூல ஆசிரியரின் சாதனையை விட ஒரு படி மேலே போயிருக்கிறது மொழி பெயர்ப்பாசிரியர் திரு ரா. வீழிநாதன் அவர்களின் சாதனை. புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் மேலே மேலே என்று ஒரே மூச்சில் படித்து முடிக்கும்படி தூண்டும் பெருமை மொழிபெயர்ப்பாசிரியரையே சாரும். மூலக் கதை வேறொருவருடையது என்பதை அவர் சொல்லித்தான் நம்ப வேண்டியிருக்கிறது. தமிழிலேயே எழுதப்பட்ட மூல நூல் போல அத்தனை எளிய லாகவமான மொழிபெயர்ப்பு. இந்நவீனம் கல்கியில் தொடர் கதையாக வெளி வந்து வாராவாரம் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை மகிழ்வித்திருக்கிறது.

ஆசிரியர்: பகவதிசரண் வர்மா. தமிழில் ரா. வீழிநாதன். வெளியிட்டோர்: பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை — 1. விலை ரூ. 5.

The Story of the Tests

கிரிக்கெட் பிறந்த இடம் இங்கிலாந்து; கிரிக்கெட்டை இந்தியாவுக்குக் கற்றுக்கொடுத்தவர்கள் ஆங்கிலேயர்கள். சமீபத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினர் இந்தியாவுக்கு வந்திருந்தபோது அவர்களைக் கல்கத்தாவிலும் சென்னையிலும் நடைபெற்ற டெஸ்ட் பந்தயங்களில் வென்று, 'குருவுக்கு மிஞ்சின சிஷ்யர்கள்' என்னும் பாராட்டைப் பெற்றனர் நம்மவர். இந்தக் குருவும் சிஷ்யனும் இதற்கு முன் எத்தனை முறை டெஸ்ட் பந்தயங்கள் ஆடியிருக்கிறார்கள், அவர்கள் ஆடிய ஆட்டத்தின் முடிவுகள், ரஸமான சம்பவங்கள், ஆட்ட வீரர்களின் சாதனை இவற்றைத் தெரிந்து கொள்ளக் கிரிக்கெட் ரஸிகர்களுக்கு ஆவலிருப்பதும் இயல்புதானே.

1932-ம் வருஷத்திலிருந்து 1959-ம் வருஷம் வரை இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் நடைபெற்ற டெஸ்ட் பந்தயங்களைப் பற்றிய வர்ணனைகளும் ஆட்ட முடிவு விவரங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந் நூலுக்கு இந்தியாவின் தலைசிறந்த ஆட்டக்காரரும் முதல் காப்டனுமான திரு சி. கே. நாயுடு அணிந்துரை வழங்கியிருக்கிறார். இந்தப் புத்தகத்தில் டெஸ்ட் பந்தயங்களைப் பற்றிய புகைப்படங்களும் சேர்த்திருப்பது நூலுக்குச் சிறப்பைக் கூட்டுகிறது.

பிரசுரம்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம். மவுண்ட் ரோடு, மெட்ராஸ்—2. விலை: ரூ. 3.

Indian Cricket

1960—61-ம் வருஷங்களில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நடைபெற்ற டெஸ்ட் பற்றிய விவரம், ரஞ்சித் கோப்பை ஆட்ட வர்ணனைகள், மற்ற டெஸ்ட் ஸ்கோர் விவரங்கள் ஆகியவை இந் நூலில் அடங்கியுள்ளன. இவை தவிர 1960—61-ம் வருடத்திய தலை சிறந்த ஆட்டக்காரர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும் இந்நூலில் இருக்கின்றன. சமீபத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியைத் தம் பந்து வீச்சால் திணற அடித்த சலிம் துரானியைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பும், பாகிஸ்தான் ஆட்டக்காரர்களான சையது அகமது, முஷ்டாக் முகம்மது, இந்திய விக்கெட் கீப்பர் குண்டரம், சர்தேசாய் ஆகியவர்களைப் பற்றிய வரலாறுகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

மற்றும் பிங்கின்டன், நார்மன் பிரிஸ்டன், ஜோன்ஸ், எம்.கே. மந்திரி ஆகியோர் கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றி வழங்கியுள்ள கட்டுரைகளும் இந்த நூலில் உள்ளன. கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்து ரஸிப்பதற்கு அதன் சட்ட திட்டங்களும் வழி முறைகளும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? இந்நூலின் கடைசியில் அவையும் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரசுரம்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம், மவுண்ட் ரோடு, மதராஸ்—2. விலை ரூ. 5. தபால் செலவு: இலவசம்.

கொக்கரக்கோ

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் தெள்ளத் தெளிந்த தமிழில் உள்ளம் தெரிந்துரைக்கும் கவிதையே நல்ல கவிதையாகும் என்று கூறுகிறார். குழந்தை உள்ளங்களைக் கவரும் எளிய தமிழிலே சொல் நயத்தோடு கூடிய கவிதைகள் அடங்கிய நூல் இது.

'கோழிச் சேவல் தெருவிலே
கொக்கரக்கோ என்குதாம்!
வாழி இந்த வையகம்
வாழ்க என்று கூவுதாம்!'

என்று ஆரம்பித்தவுடனே, கையைத் தட்டிக் கொண்டு குழந்தைகளும் பாட ஆரம்பித்து விடுவார்கள். சின்னக் குழந்தைகளுக்குச் சிங்காரப் பாட்டுக்கள் வேண்டுமானால் இந்தப் புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

பிரசுரம்: கதிரவன் பதிப்பகம், மாச்சம் பாளையம், போத்தனூர். விலை ரூ. 1.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited. at the Kalki Press. Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம்பெற்ற தயாரிப்பாளர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon